# தமிழ் சாகித்திய விழா

## சிறப்பு மலர் - 2007

## மத்திய மாகாணம்




மத்திய மாகாண கல்வி (தமிழ்)
இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சாகித்திய விழா
# சிறப்பு மலர்
# மத்திய மாகாணம்
# 2007

"விழித்தெழு மலையகமே, விடுதலை தொலைவில்லை"



இதழாசிரியர்

எஸ்.எஸ். தேவசிகாமணி

கைத்தொழில், விளையாட்டு, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்,
கிராம அபிவிருத்தி, மகளிர் விவகார, இந்து கலாசார அலுவல்கள்,
மற்றும் தமிழ் கல்வி அமைச்சு - மத்திய மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சாகித்திய விழா
# சிறப்பு மலர்
# மத்திய மாகாணம்
# 2007



**மலர் ஆசிரியர்**

* எஸ்.எஸ். தேவசிகாமணி

**மலர்க்குழு**

* எம். பத்மநாதன்
* டி.அய்யாதுரை
* சாரல் நாடன்
* இரா. அ. இராமன்
* ஆர். மகேஸ்வரன்
* பானா. தங்கம்
* சோ. ஸ்ரீதரன்

**இணைப்பாளர்**

* எஸ். நீதிராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'விழித்தெழு மலையகமே, விடுதலை தொலைவில் இல்லை'

### வாழ்த்துச் செய்திகள்

- அதி உத்தம ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ
- மாண்புமிகு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க
- கௌரவ கால்நடை வள அபிவிருத்தி அமைச்சர் R.M.C.B. ரத்நாயக்க
- கௌரவ மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ
- கௌரவ மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க
- கௌரவ மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் எஸ். அருள்சாமி
- ஷிரானி வீரகோன் செயலாளர் கைத்தொழில் விளையாட்டு அமைச்சு
- இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன்
- திரு. எம். பத்மநாதன் - கௌரவ அமைச்சரின் பிரத்தியேக செயலாளர்
- திருமதி. அருள் புனிதவதி கல்வி அமைச்சரின் இணைச்செயலாளர்
- திரு. எஸ். நீதிராஜா இணைப்புச் செயலாளரிடமிருந்து......
- திரு. எஸ். எஸ். தேவசிகாமணி இதழாசிரியரின் பேனா முனையிலிருந்து ......
- ஓவியனின் சிந்தனை (அட்டைப்படம்) செ. கோபால்

### கட்டுரைகள்

- மலையகம் அறிவுப் பூர்வமாக எழுச்சிப் பெறுகிறது - கலாபூஷணம் பி.எம். லிங்கம்
- நிலச்சரிவு நிகழ்வுகளும், நிலச்சரிவின் முன்னோடி அறிகுறிகளும் - பேராசிரியர் வை. நந்தகுமார்.
- மலையக அறிவியல் பரிமாணத்தில் நூலகமும் வாசிப்பும் ஆர். மகேஸ்வரன், சிரேஷ்ட துணை நூலகர், பேராதனை பல்கலைக்கழகம்.
- பல்கலைக்கழக கல்வியில் பெருந்தோட்ட சமூகத்தின் வகிபாகம் - இரா. ரமேஸ்
- இளைய எழுத்துலக பிரமாக்கள் - சாரல் நாடன்
- சங்கீதத்தின் பெருமையும், ஆலய இசையும், நாட்டார் இசையும் சந்திரமதி உதயசற்குணம்

### கவிதைகள்

- ஒரு ஆற்றின் அழுகை - மல்லிகை சி. குமார்
- எது வெல்லும்....? - மாரிமுத்து சிவகுமார்
- விதையல்ல விருட்சம் - கே. சுகுனா
- மலை நாடிதோ - எலியாசன்

### சிறுகதைகள்

- கலையா, காதலா? - பாலா சங்குப்பிள்ளை
- நமப் பார்வதி பதயே ...! - மு. சிவலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின்
## அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி



மத்திய மாகாண இந்து தமிழ் இலக்கிய விழா - 2007 ஐ முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வருடாந்த நிகழ்வானது மத்திய மாகாணத்தின் இலக்கிய மற்றும் கலாசார செயற்பாடுகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது மாகாணத்தின் தமிழ் மக்கள் தமிழ் மொழியில் பாடல், ஆடல், நடனம், கவிதை மற்றும் இலக்கியம் போன்ற துறைகளில் புதிய படைப்புக்களை முன்வைப்பதற்கும் பாராட்டுவதற்குமான வாய்ப்பை அளிப்பதோடு அதன் மூலம் தமிழ் சமூகத்தின் கலாசார மரபுகளைப் பாதுகாக்கவும் வாய்ப்பளிக்கின்றது.

சமூகத்திற்கு முக்கிய பங்களிப்பொன்றைச் செய்த எழுத்தாளர்கள், கல்விமான்கள் மற்றும் கலைஞர்களுக்கு இந்த விழாவில் வழங்கப்படுகின்ற கௌரவமும் அங்கீகாரமும் இந்த வருடாந்த நிகழ்வின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

இதுபோன்ற நிகழ்வுகள் இலங்கையின் கலாசார பன்மைத்துவ கொண்டாட்டங்களாக இருப்பதால் தமிழ் மக்களின் மரபுகளை பாதுகாப்பதற்கு உதவுவதோடு இதன் மூலம் அனைத்து மக்கள் மத்தியிலும் பரஸ்பர மரியாதை, நம்பிக்கை, புரிந்துணர்வு என்பவற்றை கட்டியெழுப்புவதற்கு உதவமுடியும் என்பது இதன் மற்றுமொரு முக்கிய அம்சமாகும்.

மத்திய மாகாண இந்து தமிழ் இலக்கிய விழா - 2007 பூரண வெற்றிபெற எனது வாழ்த்துக்கள்.

**மஹிந்த ராஜபக்ஷ**
இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி

2007 ஒக்டோபர் 30ஆந் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை பிரதம மந்திரியின் செய்தி



மத்திய மாகாண இந்து தமிழ் மக்களின் கராச்சார இயல், இசை, நாடகம் ஆகியவற்றின் பெருமையை வெளிக்கொண்டு வரும் நோக்கில் வருடாந்தம் நடாத்தப்படும் தமிழ் சாகித்திய விழாவினை இம்முறையும் வெற்றிகரமாக நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் மக்களின் கலாசராமானது மிகவும் மேன்மையும் தொன்மையும் வாய்ந்த ஒன்றாகும். அவர்களின் இயல், இசை, நாடகம் போன்ற விடயங்கள் பெரும்பாலும் சிங்கள பாரம்பரிய இயல், இசை, நாடகம் போன்ற விடயங்களுக்கு சமமானவைகளாகவே அமைந்துள்ளன. பாரதத்தின் பிரதிபளிப்பினை பெறும் நம் இரு சாராருக்கும் இருப்பது ஒரே விதமான கலாசார முறைகளாகும். பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள் போன்றவையும் சமமானவைகளாகவே உள்ளன.

சிங்கள, தமிழ் மொழிகளிலும் பலவாறான சமமான விடங்கள் காணக்கூடியதாகவுள்ளன. அது தொடர்பாக எமது சிறார்களுக்கு அறிவூட்டலின் மூலம் அவர்கள் மத்தியில் சிறந்த புரிந்துணர்வை பெறக் கூடியதாக உள்ளது. அது ஒருவருக்கொருவர் மத்தியில் நிலவும் சந்தேகங்கள், நம்பிக்கையில்லாத் தன்மைகளை இல்லாதொழிப்பதற்கு பெரும் துணையாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

மத்திய மாகாண இந்து கலாசார விழாவிற்கு எனது நல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதுடன் விழா நிகழ்வுகள் எல்லா விதத்திலும் வெற்றிகரமாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**ரட்ணசிரி விக்கிரமநாயக்க**
பிரதம மந்திரி

2007 ஒக்டோபர் மாதம் 31ம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



மத்திய மாகாண கைத்தொழில், விளையாட்டு, மகளிர் விவகார தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கல்வி (தமிழ்) அமைச்சின் ஊடாக வருடாந்தம் நடாத்தப்படும் தமிழ் சாகித்திய விழா 2007ம் வருடத்திலும், ஸ்ரீபாத மலைசிகரத்தின் தொடரில் இயற்கை அழகு நிறைந்த ஹட்டன் மாநகரத்தில் நடைபெறும் இப்பெருவிழாவை முன்னிட்டு பிரசுரிக்கப்படவிருக்கும் சாகித்திய விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்க வாய்ப்பு கிடைத்தமையை பெரிதும் மதிக்கின்றேன்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பதாக தமிழ்நாடு பிராந்தியத்திலிருந்து இங்கு வருகை தந்து, மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் இலக்கிய உதயத்தின் பொருட்டும், அவர்களுக்கும் இலங்கையின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த மக்களான சிங்கள மக்களுக்கும் இடையிலான ஒற்றுமையை மேலும் வளர்ச்சியடையச் செய்வது இவ்விழாவின் முக்கிய நோக்கமாகும்.

இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளை வளர்ச்சியடையச் செய்யும் நோக்கில் பெருந்தோட்ட மக்களின் சமூக மற்றும் கலாசார அங்கங்களை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கான ஊக்கத்தை அளிப்பது இவ் விழாவின் மற்றுமொரு நோக்கமாகும். இத்தருணத்தில் எமக்குத் தெளிவாக தெரியும் ஓர் உண்மை உண்டு. அதாவது தொன்மை வாய்ந்த பல புத்தகங்களினூடாக தமிழ் சரித்திர முக்கியத்துவம் வெளிக்கொணரப்படுகின்றது என்பதாகும். அதைத் தவிர நிகழ் காலத்திலும் தமிழ் சாகித்திய வரலாறானது வளர்ச்சியடைந்து கொண்டு இருக்கின்றது என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் நான் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் பெருந்தோட்ட மக்களின் கல்விசார் மற்றும் கலாசார துறைசார் சமூக அபிவிருத்தி பணிகளுக்காக, திட்டமிடப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். இத்துறையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 500 தொடர்பாடல் உத்தியோகத்தர்களை புதிதாக நியமித்து, மக்களுக்கு மிக நெருக்கமான "மக்கள் சேவைக்காகவே" இயங்கும் அரச அலுவலகங்களில் பதவிக்கமர்த்தியது அதன் முதல் அங்கமாக இனங்காணலாம். மேலும் இந்து மத மற்றும் கலாசார அபிவிருத்தியை முன்னிட்டு மத்திய மலைநாட்டில் மட்டுமல்லாது பெருந்தோட்ட இந்து மக்கள் எங்கெல்லாம் வாழகின்றார்களோ அங்கெல்லாம் இநது ஆலயங்களையும் கல்வி நிறுவனங்களையும் நிர்மானித்து தமிழ் மக்கள் பெரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் அவர்களது கலாசாரத்தினை பாதுகாக்கவும், மேலும் அபிவிருத்தி செய்யவும் உதவியது என்பதை நினைவு கூறுகின்றேன். கல்வியியல் கல்லூரிகளை ஆரம்பித்தும், அவற்றுக்கான வசதிகளை பெற்றுக் கொடுத்தும், அந்நிறுவனங்களை அதிகாரப் பூர்வமாக்குவதற்கான அடித்தளத்தினை உருவாக்கினேன். பெருந்தோட்டத்தின் பாடசாலை கல்வியை அபிவிருத்தி செய்தல், தமிழ் கலாசார அபிவிருத்திக்காக மேற்கொள்ள வேண்டிய பிரதான சேவை என கருத்திற் கொண்டு பாடசாலைகளின் குறைநிறைகளை பூர்த்தி செய்து மென்மேலும் தமிழ் ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பது வெறும் அலங்கார வார்த்தை மட்டுமல்ல. இன்று பெருந்தோட்ட மக்கள் அபிமானத்துடன் எழுந்து இவ்வாறான கலாசார விழாக்களை நடாத்துவது அவவாறாக பெற்றுக்கொடுக்கப்பட்ட வசதிகளின் மூலம் பெற்றுக்கொண்ட புதிய சக்தியால் என்பது நன்றாகப் புரியும் என நான் நினைக்கிறேன். மேலும் பெருந்தோட்ட தமிழ் மக்களுக்கும், சிங்கள கிராமிய மக்களுக்கும் இடையே இருந்த இடைவெளியை குறைக்கும் நோக்கில் தோட்டத்தையும் கிராமத்தையும் ஒன்றாக்குவதற்கான பாதை அபிவிருத்திக்காக இக் கால எல்லையில் பாரிய நிதித் தொகை செலவு செய்யப்பட்டது.

சிங்கள, தமிழ் மக்களிடையே பழங்காலந் தொட்டு சீரான புரிந்துணர்வும், தொடர்பும் இருந்தமைக்கு பலவாறான சாட்சியங்கள் உண்டு. பழங்கால சிங்கள இலக்கியவாதிகள் தமிழ் இலக்கியம் தொடர்பாக சிறந்த புரிந்துணர்வுடன் இருந்தார்கள் என அனுராதபுர யுகத்தில் இருந்து கண்டி யுகம் வரை எழுதப்பட்ட சிங்கள இலக்கிய புத்தங்கள் உட்பட தொண்மை வாய்ந்த பல எழுத்தாக்கங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இச் சாகித்திய விழாவானது இலங்கையின் பிரதான இனங்கள் மத்தியில் நிலவும் புரிந்துணர்வையும், நம்பிக்கையையும் மேலும் வழுவடையச் செய்வதற்கான ஓர் முயற்சியாகையால் அது சகல விதமாகவும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகின்றேன்.

**ஆர். எம். சீ. பீ. ரட்நாயக்க பா. உ.**
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



வருடாந்தம் நடாத்தப்படும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவை முன்னிட்டு ஆசிச்செய்தியொன்றினை வழங்க வாய்ப்பு கிடைத்தமையை பெரும் பாக்கிமாக கருதுவதோடு, பல்லின கலாசார சூழலினைக் கொண்டுள்ள மத்திய மாகாணத்தில் வாழுகின்ற தமிழ் மக்கள், கலாசார விழுமியங்களையும் கலை ஆக்கங்களையும் மிகவும் நீண்ட காலந்தொட்டு இலங்கை சமூகத்திற்கு பங்களிப்பு செய்துள்ளனர் எனக் கூறலாம்.

சிறந்த எழுத்தளரான நடேச ஐயர் மற்றும் கவிஞராக திகழ்ந்த மீனாட்சியம்மாள் ஆகியோர் தமிழ் சாகித்திய துறைக்கு ஆற்றிய சேவையின் மூலம் தமிழ் சரித்திர முக்கியத்துவம் பெற்றுள்ளனர். எழுத்தாளர் சி.வி.வேலுப்பிள்ளையின் "IN THE TEA GARDEN" மற்றும் " BORN TO LABOUR" ஆகிய நூல்கள் சர்வதேச ரீதியில் கீர்த்தியைப் பெற்றதன் காரணம் அவை காலத்திற்கேற்ற, சமூக, அரசியல் மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்த காரணத்தினாலாகும்.

சிறுகதை, கவிதை மற்றும் ஏனைய கலாசார படைப்புக்களின் ஈடுபாட்டுடன் செயலாற்றும் என்.எஸ்.எம்.இராமையா, மல்லிகை சி.குமார், குறிஞ்சித்தென்னவன், தெலிவத்தை ஜோசப் நயிமா ஏ.சித்திக், பன்னாமுத்து கவிராஜ், சாரல் நாடன், எந்தனி ஜீவா, புஸ்ஸல்லாவை இஸ்மாலிகா போன்ற எழுத்தாளர்கள் மத்திய மாகாணத்திற்கு பெருமை சேர்ப்பவர்களாவர்.

இவர்களின் ஆக்கங்களை தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்து அவற்றை சிங்கள வாசகர்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதினூடாக நம் நாட்டின் இன ரீதியான சமாதானத்தையும் கலாசார ரீதியான தொடர்பையும் உறுதிப்படுத்த பெரும் துணையாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.


முக்கியமாக பெருந்தோட்டப் பகுதிகளில் ஒரு காலகட்டத்தில் மிகவும் பிரபலமாகியிருந்து தற்போது அருகிவிடும் நிலையில் இருக்கும் காமன் கூத்து, கோலாட்டம், கும்மி மற்றும் உறுமி, மேளம் போன்ற மகிழ்ச்சி ஆரவாரமிக்கக் கலைகளை பாதுகாப்பதற்காகவும், அவற்றை இளைய தலைமுறையினரிடையே பிரபலப்படுத்துவதற்காகவும் உகந்த வேலைத்திட்டமொன்றினை கௌரவ எஸ். அருள்சாமி அவர்கள் உட்பட மத்திய மாகாண கைத்தொழில், இந்துகலாசார, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கிராம அபிவிருத்தி, மகளிர் விவகார மற்றும் கல்வி (தமிழ்) அமைச்சினூடாக மேற்கொள்ளப்படும் என நான் எதிர்பார்க்கின்றேன். இதனூடாக மத்திய மாகாணத்தினுள் புதிய கலாசார எழுச்சியை உருவாக்கும் வாய்ப்பு ஏற்படுவது திண்ணமாகும்.

2007ம் வருட மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் சகல நிகழ்வுகளும் எல்லா விதத்திலும் வெற்றிகரமாக அமைய வேண்டுமென பிரார்த்திப்பதோடு, அதன் நிமித்தம் கடமை உணர்வுடன் செயலாற்றும் கௌரவ எஸ். அருள்சாமி அவர்கள் உட்பட அமைச்சின் எல்லா உத்தியோகத்தர்களுக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கிறேன்.

டிக்கிரி கொப்பேகடுவ,
மத்திய மாகாண ஆளுநர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



2007 மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவை முன்னிட்டு ஆசிச் செய்தியொன்றினை வழங்க வாய்ப்பு கிடைத்தமையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இன ரீதியாகவும் மத ரீதியாகவும் பல்லின மக்கள் வாழும் மத்திய மாகாணத்தின் ஒவ்வொரு மக்கள் சமூகத்தையும் வேறுவேறாக எடுத்துக் கொண்டால் அவரவர்க்கென்றே உரிய பல கலைகலாசாரங்கள், பழக்கவழக்கங்கள் இருந்தாலும் அவையாவும் மனித வர்க்கத்தின் ஆரம்பத்திலிருந்தே ஏற்பட்ட நிகழ்வுகளின் பலனாகவே அமைந்துள்ளது. இருப்பினும் மனித வர்க்கமானது ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களென்றே கணிக்கப்படல் வேண்டும் என நான் நம்புகின்றேன்.

இதனடிப்படையில் பார்க்கும் போது மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவானது இந்து, பௌத்த, இஸ்லாம் ஆகிய எல்லோருக்கும் பொதுவான முன் உதாரணமாக அமையும் என்பது திண்ணமாகும்.

இவ் விழாவில் வருடந்தோரும் எழுத்தாளர்கள், கல்வித்துறையில் உயரிய சேவைகளாற்றிய கல்விமான்கள், சம்பிரதாய பூர்வ கலாசார நிகழ்வுகளில் ஈடுபட்டிருப்பவர்கள் போன்றவர்களை ஊக்குவித்து பரிசுகள், சான்றிதழ்கள், மற்றும் விருதுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்வதென்பது உண்மையிலேயே பாராட்டத்தக்க விடயமாகும்.

2007 நவம்பர் மாதம் 24,25ம் திகதிகளில் ஹட்டன் நகரத்தில் நடாத்தப்படும தமிழ் சாகித்திய விழாவின் நடவடிக்கைகள் சகல விதமாகவும் வெற்றியடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

" சரித்திரத்திற்கு நல்லனவற்றையே சேர்க்க சகலருக்கும் சக்தியும் உறுதியும் கிடைக்கட்டும் !!!"

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சர்,
மத்திய மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

மத்திய மாகாணத்தில் ஒரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட மலையக மக்கள் தமக்கேயுரிய கலை கலாசாரப் பண்பாட்டு அம்சங்களைக் கொண்டு தனித்துவமான ஓர் இனமாக தமிழுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் அவர் தம் கலாசார விழுமியங்களை வெளிக்கொணர்வதற்காக வருடா வருடம் எடுக்கப்பட்டு வரும் தமிழ் சாகித்திய விழா இவ்வருடமும் எனது தலைமையின் கீழ் எழில் கொஞ்சும் மலையகத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் அட்டன் மாநகரில் வெகு விமரிசையாக கொண்டாடுவதையிட்டு, அவ்விழாவில் வெளியிடப்படும் தமிழ் சாகித்திய மலருக்கு நான் ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெரும் உவகை எய்துகிறேன்.

இன்று மலையகத்தைப் பொறுத்தவரை பல இன்னல்களுக்கு மத்தியிலும் தமிழர்களாகிய நாம் தலைநிமிர்ந்து எமது பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை வெளிகொணர்வதற்கு இவ்வாறான சாகித்திய விழாக்களே துணை நிற்கின்றன. மலையக மக்கள் பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்களே என்பது உண்மை. ஆயினும். மலையகத் தமிழர்கள் என்ற பதம் தோட்டங்களுக்கு வெளியில் வசிக்கும் மற்றைய இந்திய வம்சாவளி மக்களையும் உள்ளடக்குகிறது என்பது உண்மை.

இச்சாகித்திய விழாவிலே மலையகத்தில் இலைமறை காயாக மறைந்து கிடக்கும் கல்விமான்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், சாதனையாளர்கள் ஆகியோருக்கு விருது வழங்கி கௌரவித்து வருவது மனநிறைவு தரும் செயலாகும் என நான் கருதுகின்ஆறன். அத்துடன் மலையக மக்களின் கலாசார விழுமியங்கள் அனைத்தையும் பேணுகின்ற ஆவணமாக திகழ்வது இவ்விழாவிலே வெளியிடப்படும் சாகித்திய விழா மலராகும். மலையக கல்விமான்களின் ஆக்கபூர்வமான விடயங்களுடன் கலை, இலக்கிய, கலாசார விடயங்களை தாங்கி வரும் சாகித்திய விழா மலர் மலையக தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவானதாகும்.

இம்மலர் சிறப்பாக வெளிவரவும், எமது தமிழ் சாகித்திய விழா வீறுநடை போட்டுவர அல்லும், பகலும் அயராது பாடுபட்ட அனைவருக்கும் எனது உளம் கனிந்த பாராட்டையும் நல்வாழ்த்துகளையும் கூறிக்கொள்வதோடு, கடந்து வந்த பாதை கரடு முரடானது என்றாலும், வேதனையிலும் சாதனை படைத்தவர்கள் தமிழர்கள் நாம் என்று விழா சிறக்க வாழ்த்துகின்றேன்.

'இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்'

**எஸ். அருள்சாமி**
அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எஸ். அருள்சாமி

கைத்தொழில், விளையாட்டு, மகளிர் விவகார,
தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி,
இந்து கலாசார அலுவல்கள் மற்றும் கல்வி (தமிழ்) அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி



தமிழ் மக்களிடையே கலை, கலாசாரம் மற்றும் இலக்கியத் துறைகளில் திறமை படைத்த கலைஞர்களை கௌரவித்து அவர்களுக்கு சமூகத்தில் வரவேற்கத்தக்க நிலைப்பாட்டை ஏற்படுத்தும் விதத்திலும், ஊக்கமளிக்கும் நோக்கத்திலும், பாரம்பரிய கலாசார விழுமியங்களை அருகிவிடாது பாதுகாப்பவர்களை கௌரவித்து விருது வழங்குவதற்காகவும், 2007.11.24,25ம் திகதிகளில் ஹட்டன் நகரத்தில் நடைபெறும் இச்சாகித்திய விழாவின் சகல நடவடிக்கைகளும் வெற்றிகரமாக நடைபெற ஏற்பாடுகளை மேற்கொண்ட அனைவருக்கும் எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விழாவை ஏற்பாடு செய்வதன் பொருட்டு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் கௌரவ எஸ்.அருள்சாமி அவர்களின் தலைமைத்துவம் சிறப்பாக அமைந்தது. விழாவினை ஏற்பாடு செய்த சகலரினதும் பங்களிப்பை பெரிதும் பாராட்டுகிறேன்.

**ஷிராணி வீரகோன்**
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவிற்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் வழங்கிய வாழ்த்துச் செய்தி



தமிழர் தம் வாழ்வோடு இரண்டறக்கலந்து நிற்கும் அவர்கள் தம் கலை, கலாசாரப் பண்புகள் இன்றுவரை போற்றிப் பாதுகாக்கப்பட்டே வருகின்றன. பாரம்பரிய கலைகளூடாகவும், இலக்கியப் பொக்கிஷங்களூடாகவும், நாம் எமது மொழி வளர்ச்சியை மென்மேலும் வளர்த்து வர வேண்டியவர்களாவோம்.

எமது பண்டைக்கால வரலாற்றுப் பெருமைகள் தொன்மைமிக்கன. எமது முன்னோர் ஆக்கி வைத்த கலை, இலக்கிய வடிவங்கள் போல் எம்மால் உருவாக்க முடியாதுள்ளதாயினும் அவைகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது. எமது முன்னைய புலவர் பெருமக்கள் ஆக்கி வைத்த நூல்கள் போல், கலைஞர்களால் உருவாக்கப்பட்ட அற்புதமான சிற்பங்களைப் போல் எமது காலத்தில் படைக்க இயலாமல் உள்ளது.

வாழ்வியல் நெறிகளைப் போதிக்கும் இலக்கியங்களைக் கற்று முன்னோர்கள் ஆக்கிச் சென்ற பாதையில் சென்று புதுமையான வழியில் உருவாக்குவோமாக.

எமது கலை, கலாசாரப் பாரம்பரியங்களைப் பாதுகாக்க பொதுநல அமைப்புக்கள் முன்வரல் வேண்டும். இந்த அரிய முயற்சியில் மத்திய மாகாண கல்வி அமைச்சுத் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வருவது பாராட்டுதலுக்குரியதாகும்.

மலையகத்து மக்கள் தங்கள் கலாசாரத்தில் மிகவும் பற்றுறுதி கொண்டவர்கள். ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை தங்கள் பாரம்பரியக் கலைகளை அவர்கள் மறந்து விடாமல், இன்னமும் அதன் வடிவம் மாறாமலேயே போற்றிப் பாதுகாத்து வருவதை வெறும் வார்த்தைகளால் தெரிவித்து விடமுடியாது.

எத்துணை இடர்வரினும், தங்கள் பொருளாதாரத்தில் பெரிதும் மேம்பாடு காணாதவிடத்தும் கூடத் தங்கள் தனித்துவத்தை இழக்காத எமது தமிழ் மக்கள் அபிலாஷைகளுக்கு அமைவாக மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவை நடாத்திக் கொண்டிருக்கும் அமைச்சர் கௌரவ எஸ். அருள்சாமி அவர்களுக்கும் அமைச்சைச் சார்ந்த அனைவருக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா தமிழர் தம் பெருவிழாவாக வெற்றி பெற எனது நல்வாழ்த்துகள்.

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



தமிழ் கூறும் நல்லுலகெங்கும் தமிழ் தாய்கு விழா எடுக்கப்படுகின்றது. எமது நாட்டிலும் பல்வேறு பிரதேசங்களில் தமிழ் தாய்க்கு விழா எடுக்கப்பட்டு வருவதைக் காணலாம். அவ்வகையிலே தமிழினத்தின் தனித்துவ அம்சங்களை புலப்படுத்துவதற்காக தமிழ் சாகித்திய விழா மலையகத்தின் அட்டன் மாநகரில் வெகு சிறப்பாக கொண்டாடப்படுவதையிட்டும், விழாவிலே வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மலையக மக்களின், வாழ்க்கையில் பிடிப்பினையும், பற்றுதலையும், மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் அளிப்பதில் கலைகளும். பண்பாட்டம்சங்களும் முக்கிய இடத்தைப் பெறுவதைக் காணலாம். இவ்வாறான சாகித்திய விழாக்களின் மூலம் மலையகத்தில் எழுச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது கௌரவ அமைச்சர் எஸ். அருள்சாமி அவர்களின் அவாவாகும். அத்துடன் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பலர் கௌரவிக்கப்படுகின்றார்கள். கலைஞர்கள், எழுத்தாளர்கள், சாதனையாளர்கள், கல்விமான்கள் மற்றும் பலர் இவ்விழாவிலே கௌரவிக்கப்படுவது பாராட்டத்தக்கதாகும்.

“தேன்மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்பதற்கிணங்க பலதரப்பட்ட விடயங்களை கொண்ட ஆக்கங்கள் சேர்க்கப்பட்ட இவ்விழா மலர் பட்டை தீட்டிய வைரத்தின் பொழிவுடன் மிளிரவும், 2007ஆம் ஆண்டு சாகித்திய விழா எல்லா வகையிலும் சிறப்புற்று அமையவும் வாழ்த்துகின்றேன்.


“நான் காற்றைக் கைதுசெய்யப் பார்க்கின்றேன்.
ஏனெனில் அதில் தமிழ் மணத்தை நுகர்வதற்காக”

**அ. புனிதவதி**

கௌரவ அமைச்சரின் இணைப்புச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



தமிழ் மக்களின் கலை, கலாசார பண்பாடு என்பது பழமை தந்த ஒரு எழில்மிகு கொடையாகும். இந்த கலாசாரத்தை சாகித்திய விழாவாக வருடந்தோறும் அலங்கரிக்க எமக்கு கிடைத்த பாக்கியத்தையிட்டு நான் பெருமையடைகின்றேன். எமது மத்திய மாகாண தமிழ் கல்வி இந்து கலாசார அமைச்சர் கௌரவ எஸ். அருள்சாமி அவர்களின் தலைமையில் தொடர்ந்து நுவரெலியா, கண்டி ஆகிய இடங்களிலும் இம்முறை மத்திய மலைநாட்டில் தமிழர்களின் பண்பாட்டிற்கு களம் அமைத்துக் கொடுக்கும் ஹட்டன் மாநகரில் இவ்விழா நடைப்பெறுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

“தமிழுக்கு அமுதென்று பேர் அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என்ற உணர்வோடு தமிழ் சாகித்திய விழாவின் மகுடமான இம்மலர் வெளியீடு தமிழியலின் இனிமை குறையாது இதழ் விரித்து மலரும் மலராகும். இவ்விழா மலருக்கு நான் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வடகிழக்கை போலவே தமிழ் கொஞ்சி விளையாடும் மலைநாட்டிலும் வருடந்தோறும் மலரும் தமிழ் சாகித்திய விழா மலர்கள் மலைநாட்டு மக்களுக்கு அச்சாணியாகின்றது என்பது திண்ணம்.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பாரம்பரிய கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் விழாவை மேலும் மெருகூட்டுகின்றது. அத்துடன் இவ்விழாவில் முக்கிய நிகழ்வாக அமைவது சாதனையாளர்கள் கௌரவிப்பு எனலாம். “மண் பயனுற வேண்டும்...” என்ற பாரதியாரின் தெளிந்த கூற்றுக்கிணங்க, மலையக மைந்தர்களில் தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் சாதனையாளர்களை தேடிக் கண்டுபிடித்து அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து சாகித்திய விருது வழங்கி கௌரவிப்பது என்பது சாதனையாளர்கள் மேலும் வரலாறு படைக்க அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமாகின்றது.

இவ்வாறாக தமிழுக்கு பெருமை சேர்க்கும் சாகித்திய விழாக்கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டுமென கூறி எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்விழா சிறப்புற என்னோடு உள்நின்றுழைத்த அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், அமைச்சின் காரியாலய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**எம். பத்மநாதன்**

கௌரவ அமைச்சரின் பிரத்தியேக செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



அமிழ்தினிலும் இனிதாய், சுவை மிகு மொழியாய் சுடர்விட்டு ஒளிரும் தமிழுக்கு புகழ் பரவ, எமது மலையக தமிழ் மண்ணின் சக்தி ஓங்க வருடாவருடம் நாம் எடுக்கும் சாகித்திய விழா இம்முறையும் கௌரவ அமைச்சர் எஸ்.அருள்சாமி அவர்களின் தலைமையின் கீழ் அட்டன் மாநகரில் வெகு சிறப்பாக கொண்டாடப்படுவதையும், அவ் விழாவிலே வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்து செய்தி கொடுப்பதிலும் நான் மிகுந்த மனமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் மக்கள் உலகில் எப்பாகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தமக்கே உரிய சிறப்பான பண்பாட்டு அம்சங்களை நழுவ விடாது பேணிப் பாதுகாப்பதிலே தமிழருக்கு நிகர் தமிழர்கள் என்றால் மிகையாகாது. இவ்வாறான பெருமைமிக்க தமிழினத்தின் பண்பாட்டை பிரதிபலிக்கும் ஓர் அம்சமாகவே வருடாவருடம் சாகித்திய விழாக்கள் எமது தமிழ் மக்களால் கொண்டாடப்படுகின்றன. வருடாவருடமாக இயல், இசை, நாடகம், ஆகிய முப்பெரும் பிரிவுகளுடன் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு தமிழ் சாகித்திய விழாக்கள் பேருதவி புரிகின்றது எனலாம்.

அத்துடன் இலைமறைகாயாக உள்ள எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரின் திறமைகள் வெளிப்படுவதற்கு களமாக அமைந்த இம் மலர் உங்கள் கைகளில் தவழ்வதையிட்டும், அதை சிறப்பாக உருவாக்க உதவிய அனைத்து கல்விமான்கள், பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ் மொழியானது முன்னோக்கிய பாய்ச்சலுக்கு களம் அமைக்கும் எதிர்கால மைந்தர்களாக எம்மாளான வரை இத் தமிழ் சாகித்திய விழாவிற்கு பாடுபடுவோம் என்பதை கூறி விழா சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**"வெற்றி நடை போடும் தமிழுக்கு அதன் அடிச்சுவட்டில்<br>வாழும் என்னுடைய வணக்கங்கள்"**

**எஸ். நீதிராஜா**
இணைப்பதிகாரி
இந்து கலாசார அலுவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர் ஆசிரியரிடமிருந்து ....

மலர்கள் மலர்வது பல்வேறு காலகட்டங்களில். அதிலே சாகித்திய மலர் மலர்வது ஒரு வருடத்திற்கு ஒருமுறை. இயற்கை மலர்களைவிட சாகித்திய மலரானது தமது மொழிக்கும் கலை, கலாசாரத்திற்கும், பண்பாட்டு விருத்திற்கும், இதுவரை பல்வேறு துறைகளிலும் வீறுநடை போட்டவர்களை கௌரவித்து, பல்வேறு விமரிசனங்களையும் எதிர்கொண்டு இலக்கிய மணம் பரப்பும் மலராக மலர்வது வழமை.

அது போலவே இலங்கைத் திருநாட்டின் மத்திய மலைநாட்டில் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சு, தன் இந்து சமய அமைச்சின் ஊடாக தமிழ் சாகித்திய விழாவை வருடந்தோறும் நடாத்தி அதிலே சாகித்திய மலரையும் மலரச் செய்து தடம் பதிப்பது வழக்கம்.

தற்போதைய மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் கௌரவ எஸ்.அருள்சாமி அவர்களின் தலைமையில் நடைபெறும் மூன்றாவது தமிழ் சாகித்திய விழாவும், மூன்றாவது தமிழ் சாகித்திய மலரும் 2007ஆம் ஆண்டு நவம்பரில் அட்டன் மாநகரில் ஆடம்பரமாகவும், இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் எண்ணக்கருக்களை எடுத்தியம்பும் முகமாக **“ விழித்தெழு மலையகமே, விடுதலை தொலைவில் இல்லை”** என்னும் மகுட வாசகத்துடனும் கொண்டாடப்படுவதும், மலர் வெளியிடுவதும் இந்திய வம்சாவளி மக்களை மாத்திரமல்லாமல். ஏனைய தமிழ் மக்களையும் எழுச்சி கொள்ளவைக்கும் ஒரு நற்செயலாகும்.

மத்திய மாகாணத்தில் மாத்திரமன்றி இலங்கையில் பிறமாகாணங்களில் வாழும் இந்திய வம்சாவளி இலக்கிய செம்மல்களையும், கல்விமான்களையும், சமூகத் தொண்டர்களையும் இம்முறை உள்ளடக்கியிருப்பது புதிய அம்சமாகும். ஏனைய மாகாணங்களில் ஒரு தனித் தமிழ் சாகித்திய விழாவை கொண்டாடமுடியாமல் ஏங்கித்தவிக்கும் கலைஞர்களுக்கு தாயகபூமியாக மத்திய மாகாணம் விளங்கிவருவதும் இதில் குறிப்பிடக்கூடிய ஒரு விடயமாகும். அவர்களின் நீண்டநாள் கோரிக்கை இம்முறை நிறைவேற்றி வைக்கப்படுகின்றது. பிறமாகாணங்களில் வாழும் எழுத்தாளர்களின் நாவல், சிறுகதை, மரபுக் கவிதை, புதுக்கவிதை, சிறுவர் இலக்கியம், நாடகம் போன்றவை எமக்குக் கிடைக்காவிட்டாலும் கிடைத்தவைகளை சேர்த்து களம் அமைத்துக் கொடுத்துள்ளோம். அவர்களும் தடம் பதித்துச் வளரட்டும்.

வழமை போலவே இம்மலரும் ஆசியுரைகள், வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என்ற பரிணாமத்துடன் மலர்கின்றது. புதிய எழுத்தாளர்களை எதிர்பார்க்கின்றோம். அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சும், கௌரவ அமைச்சரும் தயாராகவே உள்ளனர். எதிர் காலம் அனைவருக்கும் வளம் மிக்கதாக அமையட்டும்.


ஆக்கங்கள் தந்த அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறுவதோடு, தொடர்ச்சியாக உங்கள் பேனைமுனை மலையகத்தை விழித்தெழ வைக்கட்டும். விடுதலைக்கு வழி சமைக்கட்டும். அவ்வாறானால்...... விடுதலை தொலைவில் இல்லை.

அன்புடன்

**எஸ்.எஸ். தேவசிகாமணி** *B.A, PG Dip in Ed, M.A* (மலர் ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியனின் சிந்தனை



மீண்டுமொரு சாகித்திய விழா -

"விழித்தெழு மலையகமே விடுதலை தொலைவில் இல்லை" என்ற அறைகூவலுக்கிணங்க அட்டைப்படம், விருதுகள் உருப்பெற வேண்டும் என்ற அன்புக் கட்டளைக்கிணங்க - என் கற்பனையில் ஒரு தாக்கம் !

இளமைக்கால மலையக நினைவுகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், இறுவட்டு, கேபிள் இணைப்புகள் அற்ற காலம் - விடியலுக்கு ஒருதப்புச் சத்தம்!
திருமணத்திற்கு ஒரு தப்புச்சத்தம் !! மனித வாழ்வின் முடிவிலும் ஒரு தப்புச் சத்தம்!!!
இதற்கிடையில் எத்தனை தப்புச் சத்தங்கள்!

தோட்டங்கள் வருடந்தோறும் பக்தி மணத்தோடு விரதமிருந்து, நேரத்தோடு வேலை விட்டு அத்தோட்ட மக்களின் முழுமையான பங்களிப்பு மட்டுமல்லாமல் பக்கத்து தோட்டங்களிலிருந்தெல்லாம் ஒன்று கூடி கண்டு களித்த காமன் கூத்து மறக்கப்படுவது ஆரோக்கியமல்ல! ஓர் இனத்தின் கலை, காலாசார, பாரம்பரிய விழுமியங்கள் மறக்கடிக்கப்படும் போது அவ்வினத்தின் "வேரும் அறும்" என்பது இனத்தின்பால் உண்மையென அறிவோம்.

நாம் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்த காலம்! சிங்கோனா பட்டை உரித்த காலம், குயினா பட்டை சேர்த்த காலம் மாறி இன்று தேயிலைத் தோட்டங்களில் தளிர் கொய்யும் காலத்திற்கு வந்து விட்டாலும், அந்நாளில் தளிர் கொய்த பெண்ணை கறுப்பு உடையில் அல்லவா? தந்துள்ளேன். கறுப்பு விடிந்து செம்மஞ்சள் வானம் சிவக்க தெளிவான வாழ்வியலுக்கு விடுதலை தொலைவில் இல்லை! கறுப்பை மறக்க காலம் தாருங்கள்....?

மலையக விழிப்புணர்வுக்கும் விடுதலைக்கும் கல்வி ஒன்றைத் தவிர வேறில்லை என்பதில்
அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்எமது கல்வியமைச்சர் கௌரவ. எஸ். அருள்சாமி அவர்கள், அவரின் விருப்பம் அட்டை படமாக மட்டுமல்லாமல் நனவாக உருவாக அனைவரும் அவரின் அறைகூவலுக்கு செவிமடுப்போம் - பட்டதாரிகள், கலாநிதிகள் உருவாக மட்டுமல்ல அனைத்து துறை வல்லுனர்களும் பசுமையான மலையகத்தோட்டங்களில் மலர வேண்டும்.

சிவனொளிபாத மலை முகடுகளில் மறையும் செஞ்சூரியன் மீண்டும் நாளை புதுப்பொலிவோடு உதிக்கட்டும். கிழக்கின் விடியலோடு உயிர் பெற்று பறக்கும் புள்ளினம் போல் சுதந்திரமாக எம்மினம் மேலெழ வாழ்த்துவோம் - அந்நன்னாளில் ஒன்று கூடுவோம் ...!

காடுகளை களனியாக்கிய எம் தந்தையரின் உழைப்பினை உயிரின் மேலாக நினைவு கூறுவோம்.

**செல்லையா கோபாலன்**
கவின்கலா நிலையம்
கல்வி உயர் கல்வியமைச்சு
ஹைலன்ஸ் மத்திய கல்லூரி நிலையம், அட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், ஹட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா - 2007

## சாகித்திய விருது பெறுவோர் விபரங்கள்


திரு. ஜீ. போல் அன்ரனி
பிரதி ஆணையாளர்
(கல்வித்துறை)


திருமதி. எஸ்.வீ.கே. இராஜலிங்கம்
(கல்வித்துறை)


திரு. எம். ரெங்கராஜ்
(கல்வித்துறை)


திரு. செல்வராஜ்
(கல்வித்துறை)


திரு. ஏ. சுந்தரலிங்கம்
(கல்வித்துறை)


திரு. கலாநிதி. பீ. சரவணகுமார்


திரு. என். பாலசுந்தரம்
(கல்வித்துறை)

திரு. டீ.ஆர். செல்வராஜ்
(கல்வித்துறை)

திரு. எம்.செல்வராஜ்
(கல்வித்துறை)

திரு. டீ. செல்வராஜ்
(கல்வித்துறை)


திரு. டி.கே. பிள்ளை
(இலக்கியத்துறை)

திரு. இராம. பரமேஸ்வரன்
(இலக்கியத்துறை)


திரு. துரை. விஸ்வநாதன்
(இலக்கியத்துறை)


திரு. மு. சிவலிங்கம்
(இலக்கியத்துறை)


திரு. சி. சிவலிங்கம்
(இலக்கியத்துறை)


திரு. எஸ். பீ. சாமி
(ஊடகத்துறை)

திரு. எஸ்.துரைசாமி
(ஊடகத்துறை)


திரு. என். நெடுஞ்செழியன்
(ஊடகத்துறை)


திரு. சீ.டி. பெருமாள்
(ஊடகத்துறை)

திரு. வி.கே. முத்துலிங்கம்
(ஊடகத்துறை)


திரு. லோரன்ஸ் செல்வநாயகம்
(ஊடகத்துறை)


திரு. முருகேசு குலேந்திரன்
(ஊடகத்துறை)


திரு. எம்.ஏ.எஸ்.அபுசாலி
(சமூகப்பணி)

திரு. இரத்தினசபாபதி மோகன்
(சமூகப்பணி)


திரு. கோவிந்சாமி புஸ்பலிங்கம்
(சமூகப்பணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகம் அறிவுபூர்வமாக எழுச்சி பெறுகின்றது

1950ம் ஆண்டிற்குப் பின் கல்வி கேள்வியில் வளர்ந்து வருவதை குறிப்பிடலாம். தமிழகத்தில் அறிவுப்புரட்சி ஏற்படத் தொடங்கியவுடன், ஈழத்திருநாட்டிலும் அது எதிரொலித்தது. சமூக சிந்தனையாளர்கள் வாசிப்புத்திறனை ஏற்படுத்தினர்.

பத்திரிகைகள் வார இதழாகவும், மாத, காலாண்டு இதழ்களாகவும் வெளிவந்தன. திராவிடர் இயக்கத்தினர் தங்களது கதை, கட்டுரைகள், கவிதைகள், சொற்பொழிவுகளை ஏடுகளில் வெளியிட்டனர். எதுகை, மோனைகளை உள்வாங்கிய வசனங்கள் மிகப்பிரபலமாக வெளிவரத் தொடங்கின. அதன் எதிரொலிகள் ஈழத்திலும், மலையகமெங்கும் கிடைக்கக் கூடிய வகையில் ஏடுகளின், நூல்களின் விலையும் குறைவாக இருந்தன.

இளைஞர்கள், பெரியவர்கள் மத்தியில் அவை செல்வாக்குச் செலுத்தின. மன்றங்கள் மலையகமெங்கும் உருவாகின. பாரதி மன்றம், திருவள்ளுவர் மன்றம், அண்ணா மன்றம், பொதுப்பணி மன்றம் போன்ற மன்றங்களின் மூலம் சமூக நாடகங்களும், சீர்திருத்த நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன.

நல்ல பொழுதுபோக்குகள் இதன் மூலம் அமைந்தன. குறிப்பாக அன்று வெளிவந்த திரைப்படங்கள் பராசக்தி, சொர்க்கவாசல், வேலைக்காரி, மனோகரா போன்ற திரைப்படங்கள் மூலம் நல்ல சீர்திருத்த கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

மூடக்கொள்கைகளுக்கு எதிராக வந்த வசனங்களும், கருத்தாழமிக்க சொற்றொடர்களுமே, கல்வி சிந்தனைகனையையும், எதையும் சிந்தித்து ஏற்றுக் கொள்ளுகின்ற சூழலுமே காரணமாக அமைந்தன.

திராவிடர் கழகத்தினரின் முற்போக்கு கொள்கையும், சீரிய கருத்துக்களும் இளைஞர்களை சுண்டி இழுத்தன. இதற்கெல்லாம் மேலாக அறிஞர் அண்ணாவினால் வெளியிடப்பட்ட வார ஏடுகளான திராவிட நாடு, Home Land, நம்நாடு போன்ற ஏடுகளை படித்தவர்களும், கலைஞர் கருணாநிதியால் வெளியிடப்பட்ட முரசொலி, கவிஞர் கண்ணதாசனால் வெளியிடப்பட்ட தென்றல், பி.எஸ். இளங்கோவால் வெளியிடப்பட்ட மாலைமணி போன்ற ஏடுகளுமே அறிவுப்பசியை மேலும் விசாலப்படுத்தின.

திராவிடர் முன்னேற்றக்கழகத்தின் தலைவர்களின் இலக்கிய சொற்பொழிவுகளும் அவர்களின் வருகையுமே மலையகத்தின் இலக்கியத்தாக்கத்தை வலுப்பெறச் செய்தது. ஒரு தெளிந்த சிந்தனையைப் பெறவும், மூடக் கொள்கையிலிருந்து விடுபடவும், சுயமாக சிந்தித்து முடிவெடுக்கவும், அன்றைக்கு வழிவகுத்தது. இளைஞர்கள் ஒழுக்கம் உள்ளவர்களாகவும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற இலக்கியத்தை குறிப்பிட்டேயாக வேண்டும்.

இருபது ஆண்டுகளுக்குப் பின்னால் அறிவிற்கு தீனிப்போடும் சம்பவங்களுக்கு தட்டுப்பாடும், தாக்கமும் வலுவாக அரசியல் ரீதியாக தடைப்பட்டது. 1970ம் ஆண்டிற்குப் பின் தமிழகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. ஏற்றமிகு எழுத்துச் சுதந்திரம் தடைப்பட்டது. இறக்குமதியான சீர்திருத்தக்கருத்துக்களும், மூட நம்பிக்கைகளுக்கெதிரான சம்பவங்களும் எமக்கு எட்டாக்கனியாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும், எமது பண்பாடும், பாரம்பரியங்களும் ஒதுங்கிவிடவில்லை; மங்கிவிடவில்லை. மலையகம் சுயமாக இயங்க வேண்டிய காலக்கட்டத்திற்கு தள்ளப்பட்டது. அப்போது தான் கல்வி, கேள்வியில் எமக்கு பங்கு வேண்டுமென்ன சுய சிந்தனை வளர்ச்சிப்பெற்றது. வெறும் தொழிலாளர் பரம்பரையாகவிருந்த எம் மக்கள் மத்தியில் வர்த்தகர்கள், அதிகாரிகள், கல்விமான்கள், ஆசிரியர்கள், பத்திரிக்கையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், அரச ஊழியர்கள் என்னும் பரிணமாமம் உருப்பெற்றது.

இந்த வளர்ச்சி தொடர்ந்து வந்து கொண்டிருந்தாலும் கூட, எமது வளர்ச்சிப் போதாதது. இருநூறு ஆண்டுகால வாழ்க்கையில் எமது மக்களின் விகிதாசாரத்திற்கேற்ப, இன்னும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், தொழில் அதிபர்கள் பல்கி பெருக வேண்டும். "வாழ்வாங்கு வாழ்ந்த இனம்" என்ற பெருமை மென்மேலும் ஓங்கி ஒலித்தாலும், பொருளாதார வளர்ச்சியும், ஆளுமையும் மேலும் எட்ட வேண்டியுள்ளது.

கல்வித்துறையில் வளர்ந்து வருகின்ற மறுமலர்ச்சி, வாழ்க்கைத்தரத்திலும், பொருளாதார வளர்ச்சியிலும், அபிவிருத்தி அடைவதற்கான ஆக்கத்திறன்களில், எமது முன்னோடிகள் என்று சொல்லுகின்ற பேராசிரியர்களும், கல்விமான்களும், புத்தி ஜீவிகளும், பொருளியலாளர்களும் எங்களது கடமை முடிந்து விட்டது என்று எண்ணாது சமூகத்தின் சடுதியான முன்னேற்றத்திற்கு ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபட வேண்டும்.

ஆசிரிய சமூகத்தின் கட்டுப்பாடும், கடமை உணர்ச்சியும். யாருக்கோ வந்த விருந்தாடி என்று பாராது எதிர்கால மாணவ சமுகத்திற்கு தமது பொன்னான பணிகளை மேற்கொள்ள வேண்டும். அறிவுப்பூர்வமான சமுதாயத்தை உருவாக்குவது தான் இன்றைய அவசர அவசியத் தேவையாகும்.

மலையக சமூகம் மாண்புடன் வாழ்ந்தால் தான் நமக்கெல்லாம் பெருமை. கல்வி நமக்கு ஒரு காலத்தில் எட்டாக்கனியாக இருந்தது. இன்று அந்த நிலையில்லை. வீட்டிற்கு ஒரு வீரனை போர்க்களத்திற்கு தா என்று மன்னன் சொன்ன காலம் போய், இன்று வீட்டிற்கு ஒரு கல்விமானை தருவோம் என்ற நிலை உருவாகியுள்ளது.

அந்த பெரும் பாக்கியம் எமக்குத் தொடர்ந்து வர நம்மைநாமே புடம்போட்டு சொர்க்கத்தங்கமாக உருவாக்குவோம் என்ற இலட்சிய எண்ணம் எல்லோர் மத்தியிலும் உருவாக இன்றைய இளைஞர் சமுதாயம் முன்வர வேண்டும். அதற்குப் பக்கபலமாக கல்வியாளர்களும் முன்வர வேண்டும்.

அந்த நல்லதருணம் உருவாகியுள்ளது. மலையகம் பல்வேறு எதிர்பார்ப்புகளோடு கல்விக் கட்டங்களின் பணிகளை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் கைகூடியுள்ளன. ஆக்கப்பூர்வமான வேலைத்திட்டங்கள் தான் தற்போது தேவை.

அந்த பெரும் பாக்கியத்திற்கு எமது முன்னோர்களால் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளவை இயல், இசை, நாடகம். அது முத்தமிழாக மலர்ந்துள்ளது. மலையகம் எதற்கும் சோடைப்போனதில்லை. அது அறிவுப்பூர்வமான எழுச்சிப் பெறுகின்றது. பெற்றும் வருகின்றது. பெற்ற எழுச்சியை பாதுகாத்து மெருகூட்டுவது எமது தலையாய கடமையாகும்.

*கலாபூசணம் பி. எம். லிங்கம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலச்சரிவு நிகழ்வுகளும், நிலச்சரிவின் முன்னோடி அறிகுறிகளும்.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் (65,000 சதுர கிலோ மீற்றர்கள்) கிட்டத்தட்ட 20% சதவீதமான (12,000 சதுர கிலோ மீற்றர்கள்) பகுதிகள் நிலச்சரிவுகள் ஏற்படக் கூடிய பகுதிகளாகவுள்ளன (Deheragoda & Karunanayake, 2003). இப்பகுதிகள் நாட்டின் மொத்தக் குடித்தொகையின் 30% சதவீதத்தினைக் கொண்டதாகவும், 7 நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாகவும் உள்ளது. நாட்டில் அதிகரித்து வரும் குடித்தொகை வளர்ச்சி காரணமாக நிலத்திற்கு ஏற்பட்டு வரும் பல தரப்பட்ட அழுத்தங்கள் நிலப்பயன்பாட்டில் பல மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. இதன் விளைவுகளே, இலங்கையில் அண்மையில் ஏற்பட்டு வரும் அதிகரித்த நிலச்சரிவு நிகழ்வுகளுக்கான காரணங்கள் எனலாம். மத்திய மலைநாட்டின் ஈரவலய நிலப்பகுதிகளில் சராசரி ஒரு கிலோ மீற்றர் நிலப்பரப்பில் 1 இலிருந்து 2 வரையான நிலச்சரிவுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன (Ariyabandu and Hulungamuwa, 2002).

இலங்கையின் மலைநாட்டுப் பகுதியில், நீண்ட நாள் வரட்சிக்குப் பின்னர் நிகழும் கடும் மழை காரணமாக ஏற்படும் ஒரு வழமையான செயற்பாடாக, நிலச்சரிவு நிகழ்வுகள் விளங்குகின்றன. நிலச்சரிவுகள் பற்றிக் குறிப்பிடும் போது நிலச்சரிவு என்றால் என்ன? என்பது பற்றியும் அதனுள் அடங்கும் வேறுபட்ட வகைகள் மற்றும் அவற்றுக்கான காரணங்கள் பற்றியும் அறிந்திருத்தல் அவசியமானதாகும்.

நிலச்சரிவுகள் பற்றி வானர்னஸ் (Varnes, 1978), ஹம்பல் (Cambell 1985), ஆகியோரது பாகுபாடுகளைத் தழுவிய முறையில் அமையப்பெற்ற வையோமிங் (Wyoming) அரச புவிச்சரித அளவையிற் பிரிவின், நிலசரிவுகள் பற்றிய பாகுபாடுகள் பின்வருமாறு அமையப் பெறுகின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியாக மண் அல்லது கற்கள் அல்லது அவை யாவும் கலந்து, தரையின் ஒரு பகுதி ஒரே முறையில் அல்லது படிப்படியாக கீழே தள்ளுண்டு விழுதல் 'தடப்பொருள்' நகர்வு (Mass Movements) எனப்படுகிறது. இவ்வாறு நகர்ந்த திணிவானது தன்நிலையைவிட்டு கீழே விழுகின்றது. இவ்வாறு இடிந்து விழும் செயற்பாடுகள் நில அளவிற்கேற்ப பலவகையாக வகுக்கப்படுகிள்றன. உயர்மட்டச் சரிவிலே உள்ள கற்பாறை வெடித்து துண்டுகளாக ஒரே முறையில் விழுந்தால் **(Rock Slide)** பறை சரிதல் அல்லது பாறை வீழ்தல் என அழைக்கப்படும். இதனை 'மலை இடிந்து விழுதல்' என கிராமப்புற மக்கள் அழைப்பர். இதனை இயற்கையன்னை புவியின் மேற்பரப்பின் ஒரு பகுதியை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகரச் செய்யும் ஒரு செயற்பாடு எனவும் நோக்க வேண்டியுள்ளது.

இத்தகைய நிகழ்வுகள் கண்டி, கலஹா, ஹங்குரான்கெட்ட முக்கோணப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான இடங்களில் இடம் பெற்றுள்ளதை நோக்க முடிகின்றன. இவ்வாறான ஒரு நிலச்சரிவு 1957 இல் ரன்கல எனும் இடத்திற்கு அண்மையிலுள்ள வரந்தவில இல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வின் போது பெரு வீதியையும் அதில் சென்று கொண்டிருந்த வாகனங்களும் தகர்ப்பட்டமையை நினைவு கூறாமல் இருக்க முடியாது. இதனை ஒத்த இன்னொரு மண்சரிவு 1947 இல் கடுகண்ணாவையில் இடம் பெற்றது.

நிலச்சரிவு **(Land Slide)** என்பது நிலப்பிரதேசத்திலுள்ள மண், கற்கள், இன்னும் ஏனைய பொருட்களும் சரிந்து விழுவதைக் குறிக்கும். அதாவது பெரியளவிலான மண் திணிவோ அல்லது கற்பாறைத் திணிவோ ஒரு தரையிலிருந்து தனியாகப் பிரிந்து உடைந்து சென்று இன்னோர் இடத்தில் வீழ்வதைக் குறிக்கின்றது. விஞ்ஞானிகளின் கருத்துப்படி (இலங்கையிலுள்ள) பல்வேறு மட்டங்களில் நிகழும் சரிவுகளையும் "மண் சரிவு அல்லது நிலவழுக்கல்" என அழைக்கப்படுகின்றன. இவற்றில் கற்கள் உருண்டு வீழ்தல், பாறைகள் வீழ்தல், சேற்றுப்பாய்சல், கிடையான முறையில் அமையப் பெறும் பரவுகைகள் யாவும் உள்ளடங்குகின்றன. எனினும் சந்தர்ப்பங்களுக்கேற்ப இவற்றை அவற்றுக்கான தனிப்பட்ட பதங்களைக் கொண்டு அழைத்தல் பொருத்தமானதாகும்.

மண்சரிவு என்பதும் பாரிய அளவில் திடப்பொருட்கள் சரிந்துவிழும் பல வகைகளுள் ஒன்றாகும். ஒரு படை மண் நகர்ந்து சரிதல் மலைப்பிரதேசங்களில் காணப்படும் பொதுவான நிகழ்ச்சியாகும். தடிப்புக் கூடிய மண்படை நகர்ந்து விழுவது மலைச்சரிவின் கீழ்ப்பகுதியிலும், தடிப்புக் குறைந்த மண்படை நகர்வது மலைச்சரிவின் உச்சிப் பகுதியிலும் இடம் பெறும்.

இலங்கையின் மத்திய மலைநாட்டில் கடந்த இரு தசாப்தங்களாக நிகழ்ந்த மண் சரிவுகள் மிகவும் பயங்கரமான முறையில் நிகழ்ந்துள்ளன. கேகாலை, கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில், மழைவீழ்ச்சிக் காலங்களில் கூடுதலான அளவு மண்சரிவுகள் நிகழ்கின்றன. பொதுவாக இந்த நிகழ்வுகள் மத்திய மலைப் பிரதேசங்களின் காடுகள் அழிக்கப்பட்டு, நிலப்பயன்பாட்டில் அதிகளவு மாற்றங்களுக்குட்பட்ட மலைச் சாய்வுகளிலேயே அதிகளவுக்கு நடைபெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலச்சரிவு மற்றைய இயற்கை அழிவுகள் போலவே சமூகத்தில் பல பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. உதாரணத்திற்கு 2003 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமையன்று இரத்தினபுரியில் எலபபாத என்னும் இடத்தில் 12 மணித்தியாலங்கள் தொடர்ந்து பெய்த 345 மி.மீற்றர் மழைவீழ்ச்சியைத் தொடரந்து அங்கு ஏற்பட்ட நிலச்சரிவனால் 40 வீடுகள் தரைமட்டம் ஆக்கப்பட்டதோடு அறுபதுக்கு மேற்பட்ட உயிர் இழப்புக்களும் இடம் பெற்றமையைக் கூறலாம்.

வரலாற்று நோக்கில் நிலச் சரிவுகள்



**(Landslide)** நிலச்சரிவு
2001 இல்
எல்சல்வடோரில் இடம்பெற்றது.



**(Earth flow )** நிலப்பாய்ச்சல்
குவார்றிறோ,
மெக்ஸிக்கோவில் இடம்பெற்றது.



பாறை வீழ்தல் ( **Rockslide**)
பாக்கிஸ்தானில் இடம்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விளைவே மத்திய மலை நாட்டில் முக்கியமாக மண்சரிவுகள் ஏற்பட ஏதுவாக அமைகின்றன எனலாம். இலங்கையில் இடம்பெற்ற நிலச்சரிவு பற்றிய முதலாவது பதிவாக, 1869 ஆம் ஆண்டு யூலை 14ந் திகதி பாரிய பாறை வீழ்ந்து, "Rock Slip" புகையிரத போக்குப் பாதை 19 நாட்கள் வரை செயலிழந்திருந்தமையைக் கூறலாம் (Perera, 1925). இதே போன்று மத்திய மலைநாட்டில் காலத்திற்குக் காலம் பல நிலச்சரிவுகள் ஏற்பட்டிருந்தாலும், 1947 ம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலப் பகுதிகளிலேயே அதிகளவு நிலச்சரிவு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளமையை நோக்க முடிகின்றது.

1947 ம் ஆண்டில் மலைநாட்டில் மிகவும் மோசமான மண்சரிவு ஏற்பட்டது. அதன் பிறகு பாதிப்பை ஏற்படுத்திய மண்சரிவுகள் பின்வரும் ஆண்டுகளில் குறித்த சில இடங்களில் ஏற்பட்டுள்ளன. அவையாவன: 1952 இல் உட ஹேவாஹெட (Uda Hewaheta), 1957 இல் பஹல கடுகண்ணாவை (Pahala Kadugannawa), 1970 இல் வலப்போன (Walapone) 1973 இல் வலப்போன, 1978 இல் வேகல்ல புலத்கோபிடிய (Wagalla Bulathkohupitiya), 1979 இல் குரவிட்ட, அக்குரண கந்த (Kuruwita, Akuranakande), 1978 இல் புலத்சிங்ஹல (Bulathsinghala), 1981 இல் பொத்தபிடிய எட்டியாந்தோடண்ட, 1981 இல் அரனாயக்க, 1982இல் ஹீனெலிபனகந்த, மாவனல்லை (Heeneli Panakande, Mawanella), 1982 இல் பகினிவெல கந்த, பாதஹேவாஹெட்ட (Paginiwelakande, Pathahewaheta) 1977 இல் கம்பளை-சிங்ஹாப்பிடிய, 1982 இல் பதுள்பானகந்த பெல்மதுல்ல (Pathul Panakande, Pelmadulla) 1982 இல் மாத்தளையில் பிடகந்த தோட்டம், 1983 இலங்கஹபிடிய கொலனி, மாவனல்லை, 1984 இல் அகலவத்தை, வியன்கஹவெல பதுளை, இஹல அன்தலுவெல அம்பிலிபிட்டிய, பலுத்தொட்ட கொலொன்னா, பலாங்கொடை குருவிட்ட இரத்தினபுரி ஆகிய இடங்களிலும், 1985 இல் மதுகம (Matugama) நுவரெலியா, தையாம்பரஹென (Thiyambarahene) வறக்காப்பொல, பொடிகுலவ (Bodikulawa) கலகெதர, பென்றோஸ் தோட்டம நாவலப்பிட்டியா, வெபதா, கொஹொம்பா கந்த இரத்தினபுரி ஆகிய பகுதிகளிலும் 1986 இல் அகலவத்தை, உலப்பனை ஹங்குரான்கெட்ட, 1990 இல் தலவாக்கலை நுவரெலியா, ரம்புக்கனை கேகாலை, 2003 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி இரத்தினபுரியில் எலபபாத என்னும் இடத்தில் 12 மணித்தியாலங்கள் தொடர்ந்து பெய்த 345 மி.மீற்றர் மழைவீழ்ச்சியைத் தொடரந்து அங்கு ஏற்பட்ட நிலச்சரிவனால் 40 வீடுகள் தரைமட்டம் ஆக்கப்பட்டதோடு அறுபதுக்கு மேற்பட்ட உயிர் இழப்புக்களும் இடம் பெற்றமையைக் கூறலாம். இங்ஙளம் குறிப்பிடப்பட்ட ஆண்டுகளில் நிகழ்ந்த நிலச்சரிவுகள் மிகவும் மோசமான முறையில் பாதிப்பைகளை ஏற்படுத்தியனவாகும். இவை தவிர சிறிய அளவில் மத்திய மலைநாட்டின் பல இடங்களிலும் பல மண்சரிவுகள் நிகழ்ந்துள்ளன.

1993 வட்டவளை புகையிரத நிலையம் நுவரேலியா, 1993 இல் ஹெலாவுவ்டா இரத்தினபுரி, 1997 இல் பேறகல - வெள்ளவாய போக்குவரத்துப் பாதை கொஸ்லாந்த பதுளை, 2002 இல் பூவாக்கஹாவில இரத்தினபுரி, 2003 இல் எலபபாத, இரத்தினபுரி என்பனவற்றைக் கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறிய மண்சரிவுப் பதிவுகளை நோக்கும் போது 60 % திற்கும் மேலான மண்சரிவுகள் 1978 ற்குப் பின்பே நிகழ்ந்துள்ளன முதலில் கண்டி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இங்கு பல ஆண்டு காலமாக பல பகுதிகள் இதற்கு இலக்காகிக் காணப்படுகின்றன. முக்கியமாக 1957 இல் ஹுன்னஸ்கிரிய தெல்தெனிய ஆகிய இடங்களிலும், 1977 ல் மிகவும் நாசகரமான அழிவை ஏற்படுத்திய மண்சரிவுகள் கடுகண்ணாவை, கம்பளை சிங்ஹாப்பிட்டியில் ஏற்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் 1977 ல் கடுகண்ணாவை கம்பளை சிங்ஹாப்பிட்டியில் நடைபெற்ற நிலச்சரிவு, ஒக்டோபர் இருபத்து இரண்டாம் திகதி அதிகாலையில் நடைபெற்றது. கொன்னாடிக்கா தோட்டத்திலே இந்த நிலச்சரிவு நிகழ்ந்தது. இந்த நிலச்சரிவால் 800 மீற்றர் நீளத்தில் பாறைகள் சாய்ந்தது. இதனால் குடியிருப்புக்கள் மண்ணுள் புதைந்ததோடு இருபத்து ஆறு பேர் உயிரிழக்கவும் காரணமாக அமைந்தது. இந்த தாக்கத்திற்குட்பட்ட பாறையானது மெல்லிய சாய்வையும் கருங்கல் பெல்ஸ்பார் கனியத்தையும் கொண்டு இணைந்ததாகக் காணப்பட்டது. இந்த இரண்டு கனியங்களுக்குமிடையிலான இணைப்பில் இடைவெளி காணப்பட்டது. ஆராய்ச்சியின் படி இப்பகுதியில் மண்சரிவு ஏற்பட்டமைக்கு இங்கு பாறையமைப்பு சாதகமாக இருந்தமையும் தொடர்ச்சியான மழைவீழ்ச்சியும் காரணமாயிருந்தது எனப்படுகிறது.

குறிப்பிட்ட இடத்தில் நடைபெற்ற சரிவுக்கு முன்பு கிட்டத்தட்ட ஏழு நாட்கள் தொடர்ந்து மழை பெய்திருந்தமையையும், அப்பகுதியில் வாழும் மக்களின் நேர்கோட்டுக் குடியிருப்புக்களின் தரைப்பகுதிகளில் சேற்று நிலங்களில் கீழிருந்து நீர் ஊற்று வெளிக்கிளம்பியதை பார்க்கக் கூடியதாயிருந்தது. இத்தன்மையை சரிவு நடைபெறுவதற்கு முன்பு அவதானித்த போது சரிவின் வாலில் இரண்டு பகுதியிலும் ஆழமான கால்வாய்கள் வெட்டப்பட்டிருந்தன. இங்ஙனம் வெட்டப்பட்டது கால்வாய்கள் தான், மண்சரிவுக்கு காரணமாயின எனக் கூறப்படுகின்றன.

இந்தச் சரிவு ஏற்படுவதற்கு வசதியாக அந்தச் சாய்வின் சரிவின் ஒரு பகுதி பலவிதமான பாறை இணைப்புக்களைக் கொண்டிருந்தமையும் ஆகும். தொடர்ந்து பெய்த மழையினால் பாறையின் பிணைப்புக்கள் வலுவிழந்து, அதன் சரிவுகள் பிளவுபடத் தொடங்கியதன் விளைவாக பெரும் பாறைத்திணிவு சரிவுகளினுடாக வீழ்ந்தன. இதனால் அங்கு வாழ்ந்த குடியிருப்பாளர்கள் புதையுண்டதுடன் அங்கு காணப்பட்ட வீடுகளையும் நாசமாக்கியது.

மத்திய மலை நாட்டில் நிகழ்ந்த மண்சரிவுகளில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கம்பளை சிங்ஹாபிட்டியவில் நடைற்றது மிகவும் கொடூரமான ஒரு செயற்பாடாக அமையப் பெறுகிறது. இவை தவிர, 1986 ஆம் ஆண்டு அகலவத்தை உலப்பனை, ஹங்குரான் கெட்டப் பகுதியிலும் பாரிய நிலச்சரிவு ஒன்று நிகழ்ந்துள்ளது.

மேலும் 1986 ஜனவரி 6 ம் திகதி மதுரட்டயிலும் கட்டயப்பத்தான என்ற இடத்திலும் ஒரு மண் சரிவு நிகழ்ந்துள்ளது. இந்த நிலச்சரிவு ஒரு கிலோமீற்றர் நீளம் கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடயப்பத்தான பகுதியானது பழங்காலத்திலிருந்து சரிவு ஏற்படும் பகுதியிலேயே அமைந்துள்ளது. இப்பகுதியிலுள்ள பாறைகள் உறுதியற்றதாயும் வெடிப்புக்களைப் கொண்டனவாகவும் காணப்பட்டிருந்தன. இந்த நிலையில்லாத பாறைப்படைகளினூடே மழை நீர் சென்றதும் அமுக்கம் காரணமாக, மேற்பாறைப்படை தள்ளுண்டு சரிந்து விழுந்தது. இதனால் மூன்று வீடுகள் அழிக்கப்பட்டதோடு பதின்மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

நுவரெலியா மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், இங்கும் வகையில் கடந்த இரு தசாப்தங்களாக நிலச்சரிவுகள் அதிகரித்த போக்கில் அடிக்கடி நிகழ்வதோடு கடும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றன. 1930 - 40 ஆண்டுகளில் நிலச்சரிவுகள் பல் கொத்மலைப் பள்ளத்தாக்கின் பெல்டன் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன.

மஸ்கெலியாப்பகுதியில் மிட்போர்ட் என்ற இடத்திலும் 1990 ஆம் ஆண்டில் தலவாக்கலையிலும் மண்சரிவுகள் இடம்பெற்றுள்ளன. இதனால் எட்டுப்பேர் பலியாகியதுடன் பலர் காயமடைந்தனர், பல கடைகள், உறைவிடங்கள் என்பன முற்றாகச் சேதமடைந்தன. இவை தவிர 1993 ஆம் ஆண.டில், ஹப்புத்தளை, தியத்தலாவை பகுதிகளிலும் பல மண்சரிவு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

மாத்தளை மாவட்டத்தின் கடந்த கால மண்சரிவின் நிகழ்வுகளைப்பார்க்கும் போது இங்கு முக்கியமாக 1982- டிசம்பர் இருபதாம் திகதி பிடகந்த தோட்டத்தில் (Pitakanda Estate) பெரும் சேதத்தை ஏற்படுத்திய நிலச்சரிவு ஒன்று நடைபெற்றது. இதனால் பதினொரு பேர் கொல்லப்பட்டதோடு பத்து வீடுகளுக்கும் மேல் நாசமாகியது. இந்த நிலச்சரிவின் நீளம் ஒரு கிலோமீற்றருக்கும் அதிகமாகும். இங்கு முக்கியமாக பாறைகளில் பிளவு ஏற்பட்டு ஒரு பகுதி பக்கவாட்டாகச் சாய்ந்தது. இந்தச் சரிவு ஏற்பட பிரதான காரணம் யாதெனில் இப்பகுதி பாறைப்படைகள் குத்துச்சாய்வானதாக இருந்தமையும், தீப்பாறையை அடித்தளப் பாறையாயும் கொண்டு இணைக்கப்பட்டிருந்தமையாகும். இந்த இணைப்பு பலவீனமானதாக இருந்தது.

இம் மண்சரிவுக்கான காரணத்தை நோக்கின், இம் மண்சரிவுகள் ஏற்பட முன்னர் இப்பகுதிகளில் ஐந்து நாட்கள் மழை தொடர்ந்து பெய்ததுடன், மண்சரிவு இடம்பெற்ற, குறிப்பிட்ட நாளில் மிக மிக அதிகமாக மழைவீழ்ச்சி நிகழ்ந்தமையும் காரணங்களாகும். இந்தப் பகுதி பெருந்தோட்ட ஊழியர்களினதும், தனிப்பட்ட தொழிற்சாலைகளினதும் தகவல்களின் படி, மண்சரிவு நடைபெற முனனர் அப்பகுதி வீடுகளின் தரைகளிலிருந்து திடீரென நீர் கீழிருந்து வெளிப்பாய்ந்து, ஊற்றெடுத்ததாகவும் கூறப்படுகின்றது.

மேலும் இம்மண்சரிவு பற்றிய அறிக்கைகளை நோக்கின், இந்தச் சரிவு நடைபெற்ற இடத்திற்கு மத்தியில் ஒரு நீர்த்தேக்கம் இருந்ததாயும், அது அந்தக் குறிப்பிட்ட தினத்தில் திடீரென பெரும் நீரைப்பெற்று, ஊற்றெடுத்து வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தியதோடு பாறைகளையும் உடைத்துக் கொண்டு சென்றுள்ளது. பாறைத் துண்டுகளையும், மண்ணையும் அள்ளிச் சென்று வசிப்பிடங்களை நாசமாக்கியதோடு குடியிருப்பவர்களையும், குடியிருப்புக்களையும் புதையுறச் செய்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலச்சரிவுகள் இடம்பெற முன்னர் அவதானிக்கப்படக் கூடிய முன்னோடி அறிகுறிகள்

ஒரு இடத்தில் நிலச்சரிவு ஏற்படுவதற்கு முன்னர் அந்த இடத்தின் நிலத்தோற்ற அமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் கொண்டு அப்பகுதியில் நிலச்சரிவு நிகழப்போகின்றது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. நிலச்சரிவு ஏற்படுவதற்கு முன்னர் நில அமைப்பிலும், அதன் சுற்றாடலிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன.

### நீர் ஊற்றுக்கள் ஏற்படுவதைப் போல் நீர் வெளியேறுதல்

நிலச்சரிவு ஏற்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாக அதிகமாக மழைபெய்யும் நேரங்களில் மலை அடிவாரங்களில் ஊற்றுக்கள் மிதப்பது போல் நீர் வெளியேறிக் கொண்டிருக்கும். அத்தோடு அந்தப்பகுதி மண்ணானது வெறும் ஈரப்பதனைப் பெற்றிருப்பதுடன் கெட்டித்தன்மை குறைந்தனவாகக் காணப்படும். மேலும், வீடுகளின் தரைகளில், கீழிருந்தும் ஊற்றுக்கள் வெளியேறுகின்றன. இத்தன்மையானது குறித்த நிலச்சரிவு நிகழப்போகும் மலைப் பகுதியானது, தன்னால் இயன்றவரை மழைநீரை உறிஞ்சிய பிற்பாடு மிகுதியை நிலத்தின் கீழாக ஊற்று வருவதுபோல் வெளியேவிடுகின்றன.

எனவே நிலச்சரிவு ஏற்படுவதற்கு முன் நில அமைப்பை நோக்கின், முக்கியமாக அங்கு ஊற்றுக்கள் போல் நீர் வெளி வருவதையும் மண் ஈரலிப்பாய் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இவ் அறிகுறிகள் அக்குறித்த பகுதியில் ஓர் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதை உணர்த்துகிறது.

### கட்டிட, சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு, வளர்ச்சியடைந்து செல்லல்

நிலச்சரிவு ஏற்படுவதற்கு சில நாட்களுக்கு முன் அப்பகுதியிலுள்ள வீடுகளின் சுவர்களும் வீட்டுப் பக்கத்திலுள்ள கட்டிடம், மற்றும் நிலப்பகுதிகள் வெடிப்புக்களைப் பெற்றுக் காணப்படும். மண்சரிவுக்குள்ளாகும் போது அந்நிலப்பகுதிகள் முதலில் வெடிப்பைப் பெறுகின்றது. இவ்வாறு வெடிப்புக்களைப் பெறும் போது அதன் தாக்கத்தினால் அருகிலுள்ள கட்டிடங்களும் அவ்வாறு வெடிப்புக்களைப் பெறுகின்றது. எனவே இவ்வாறு வீடுகளின் சுவர்களில் கீறல்கள் வெடிப்புக்கள் இருப்பதைக் கொண்டு அப்பகுதியில் மண்சரிவொன்று நடைபெறப் போகின்றது என்பதை அறிய முடிகின்றது.

### மரங்கள், மின்கம்பங்கள் சரிந்து காணப்படல்.

நிலச்சரிவு ஏற்படுவதற்கு முன்பு அப்பகுதியில் உள்ள மரங்களில், மின்கம்பங்கள் போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. தென்னை, பாக்கு மரம் போன்றன நேராக நிற்காமல் ஒரு பக்கமாய் சரிந்து காணப்படும். இல்லாவிட்டால் சில மரங்கள் வாடிப்போய்விடும். இதற்குக் காரணம் நிலத்தின் அசைவினால் மரங்களில் வேர்கள் கழன்று விடுகின்றது. இதனால் மரங்களுக்கு உறுதியில்லாது போவதுடன் செயழிலந்தும் போகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பகுதியில் வாழ்ந்த முதியோர்களின் விளக்கப்படி 100 வருடத்திற்கு முன்பும் இந்தக் குறிப்பிட்ட இடத்திலே மண்சரிவோன்று ஏற்பட்டது என்றும் அது மிகவும் வெறுக்கத்தக்க ஒரு நிகழ்வாகவே இருந்தது என்றும் கூறினர். ஏனவே மண்சரிவின் கடந்த கால நிகழ்வுகளை அவதானிக்கும் போது மத்திய மலைநாட்டில் மாத்தளை மாவட்டமானது மிகவும் பாரதூரமான முறையில் மண்சரிவுக்கு உட்படுவதை அறிய முடிகின்றது.

கேகாலை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இங்கும் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் மண்சரிவு நிகழ்ந்துள்ளது. முக்கியமாக கலிகமுவ, அரணாயக்கா, வரகாபொலை, ரம்புக்கணை தெஹியோவிட்டப்பகுதியில் அடிக்கடி நிகழ்கின்றது. இம்மாவட்டத்தில் மிக அண்மையில் 1990- நவம்பர் 4 ம் திகதி இரவு இரண்டு மணியளவில் ரம்புக்கணை தேர்தல் தொகுதியில் உள்ள வெங்காலகந்த எனுமிடத்தில் ஒரு நிலச்சரிவு ஏற்பட்டது. இதன் மூலம் அப்பகுதி மக்கள் உட்பட வீடுகளும் சேதமடைந்தன. குலிகமுவ பகுதியில் நடந்த மண்சரிவு மிகவும் பிரதானமான ஒன்றாகவுள்ளது. இதன் மூலம் அப்பகுதியில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆராய்ச்சிகளின் படி பார்க்கும் போது மதிதிய பிரதேசத்தில் கூடுதலான அளவு மண்சரிவு நடைபெறும் பகுதியாக கேகாலை மாவட்டமே விளங்குகின்றது.

இரத்தினபுரி மாவட்டத்திலும் மண்சரிவு நிகழ்வு குறிப்படத்தக்கதாகும். 1982-ல் ஜுன் 8-ம் திகதி காலை பதினொன்று முப்பது மணியளவில் மிகவும் மோசமான அழிவைத்தரக்கூடிய நிலச்சரிவு நடைபெற்றிருக்கின்றது. இரத்தினபுரி - பெல்மதுல்ல வீதியில் உள்ள பதுல்பான (Patulpana) எனும் இடத்தில் இந்த நிலச்சரிவு நிகழ்ந்துள்ளது. இந்தச் சரிவில் பாறைகள் வீழ்ந்ததையும் சேறும் - பாறையும் பாய்ந்தமையையும் (Rock slume mud and rock flow) இனங்காணக் கூடியதாயிருந்தது. இந்த நிலச்சிவு 1.5 கிலோமீற்றர் நீளத்தைக்கொண்டது. இங்கு தொடர்ந்து ஐந்து நாட்கள் மழை பெய்ததை தொடர்ந்தே ஏற்பட்டது. மேலும் இப்பகுதியில் வருடாந்தம் மழைவீழ்ச்சிக்காலங்களில் ஆங்காங்கே மண்சரிவு நிகழ்வுகள் நடைபெறத்தான் செய்கின்றன.

பதுளை மாவட்டத்திலும் கடந்த இரு தசாப்தங்களாக மண்சரிவு ஏற்பட்டு வருகின்றன. முக்கியமாக நுவரெலியாவிற்கும் பதுளைக்கும் இடையில் இது நிகழ்கின்றது. மத்திய மலைநாட்டில் நிகழும் மண்சரிவுகளில் இந்த பதுளை மாவட்டத்தில் நடைபெறும் மண்சரிவே கூடுதலான ஆபத்தானதாக இருக்கின்றது

பொதுவாக இலங்கையில் கடந்த கால மண்சரிவு நிகழ்வுகளைக் குறிப்பிடும் போது வருடாவருடம் இது நிகழ்கின்றது என்று எமக்குக் கூறலாம். என்றாலும் குறிப்பிட்ட சில வருடங்களில் நிகழ்ந்தவை கடும் சேதத்தை ஏற்படுத்தியதாக இருப்பதனால் அந்த ஆண்டுகளே குறிப்பாக எடுத்துக்காட்டப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதைகள் பணிந்து கீழிறங்கிச் செல்லல்

பாதைகள் பணிந்து கீழிறங்குவதைக் கொண்டும் நிலச்சரிவு ஏற்படப் போகின்றது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. திடீரென பாதைகள் கீழிறங்குவதில்லை. அது மெது மெதுவாக கண்ணுக்குப் புலப்படாதவாறு அசைந்து தன் நிலையைவிட்டுக் கீழிறங்குகின்றன. இவற்றைக் கொண்டு மண், கல், என்பவற்றினாலான படை கீழ் நோக்கி நகர்வதனை அறியலாம். அதே வேளை சந்தர்ப்பம் ஏற்படும் போது இப்படை ஒருசில நொடிப்பொழுதில் கீழே சரிந்து விழும்.

அண்மையில் சர்வதேச அவதானிப்புக் குழு ஒன்று கண்டி, ஹங்குராங்கெட்ட, கலஹா, நுவரெலியா உடலப்பன ஆகிய பிரதேசங்களில் மண்சரிவு மலைகளின் நகர்வு ஆகியவற்றை வரைபடமாக்கும் போது மக்களிடமிருந்து பெறப்பட்ட விக்கங்கள் இவற்றை மேலும் உறுதி செய்கின்றன.

மண் சரிவின் ஒருவகையான சேற்றுப்பாய்ச்சல் (Mud Flow) எனும் நகர்வை அறிந்து கொள்வதற்கு இலகுவான முறையாக அவ்வப்பிரதேச மக்களிடமிருந்து ஆதாரங்களைப் பெறுவது அவசியமாகிறது. ஒரு கிராம வாசியின் கருத்துப்படி இற்றைக்கு இருபத்து ஐந்து வருடங்களுக்கு முன் அவரது நெல் வயல் மலையின் உச்சிப்பகுதியில் இருந்தது. தற்போது அது மலையடிவாரத்தில் உள்ளதாம். இது நகைப்புக்குரிய விடயம் போல தென்பட்டாலும் இத்தகைய நிகழ்வுகளும் நிலச்சரிவு நடவடிக்கைகளின் ஒரு செயற்பாடாக உள்ளது.

எனவே மண்சரிவு ஏற்படுவதற்கு முன்பு நில அமைப்பில் அசைவுத்தன்மை காணப்படுகிறது என்பதை எமக்கு இதிலிருந்து அறிய முடிகின்றது. மலைச்சரிவிலே மண்ணின் ஈரத்தன்மை அதிகரிப்பதனால் அதன் நிறை அதிகரிக்கின்றது. இதனால் மலைச்சரிவுடன் இங்குள்ளபடைகளை இணைக்கும் சக்தியும் குறைகின்றது. இப்பகுதி மண் சேறு அல்லது களிகலந்ததாயின் நீர்த்தன்மை அதிகரித்தும் மண்படை படிப்படியாக கீழ் நோக்கிச் சரிந்து செல்லும். இந்த நகர் இடம் சொந்தக் காரனால் கூட அறிய முடியாத அளவுக்கு மெதுவாக இடம்பெயர்கின்றது. இதனை இப்பிரதேசத்திற்கு அண்மையிலுள்ள மலைப்பிரதேசங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மட்டுமே அறிய முடியும். ஏனவே நிலச்சரிவு ஏற்படுவதற்கு முன்னதாக அப்பகுதியில் நில அமைப்பை அவதானிக்கும் போது பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு காணப்படுவதை எமக்கு அறிய முடிகின்றது.

## நிலச்சரிவு ஏற்படுவதற்கான உந்துகைகளைத் தோற்றுவிக்கும் காரணிகள்.

நிலத்தின் உறுதித்தன்மையை (stabilizing) பாதிப்படையச் செய்து, நிலச்சரிவுகள் ஏற்படுவதற்கு சில உந்துகை நடவடிக்கைகளாக உள்வாரியான செயற்பாடுகள் அல்லது வெளிவாரியான செயற்பாடுகள் அமையப்பெறுகின்றன. அவை பின்வரும் நிகழ்வுகளின் போது கிடைக்கப்பெறுகின்றன.

- மழைகாலங்களில் கிடைக்கப்பெறும் - மிகையான நீர் ( Excessive amounts of Water During rainy season).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புவிநடுக்கம் (Earthquake)
- ஏரிமலை வெடித்தல் (Volcanic eruptions)
- அதிர்வுகள் (Vibrations).
- ஓலி, சத்தம் (Noise).

## நிலச்சரிவுகளை ஏற்படுத்தும் காரணிகள்

நிலச்சரிவுகளை ஏற்படுத்தும் காரணிகளை அவற்றின் செயற்பாடுகளின் அடிப்படையில் இரு பிரிவுகளில் நோக்கலாம்.

அ. பௌதீகக் காரணிகள்

ஆ. மானிடக் காரணிகள்

## அ. நிலச்சரிவுகளை ஏற்படுத்தும் காரணிகளை பௌதீகக் காரணிகள்

- சாய்வு வீதம் (Slope Gradient).
- வானியாலழிதலும் காலநிலையும் (Weathering and Climate).
- நீரின் அளவு (Water Content).
- தாவரங்கள் (Vegetation).
- மிகையான சுமை / அமுத்தம் (Overloading).
- கல்லியலும் சாய்வுகளின் உறுதிதன்மைகளும் (Geology and Slope stability).

## ஆ. நிலச்சரிவுகளை ஏற்படுத்தும் காரணிகளை மானிடக் காரணிகள்

- தாவரங்களை அகற்றுதல் (Removal of Vegetation).
- இயற்கையான வடிகால் அமைப்புக்களை மாற்றியமைத்தல் (Interference with or Change to Natural drainage).
- நீர்க் குழாய்களின் மலசல குழாய்களின் கசிவுகள் ( Leaking Pipes Water, Sewer).
- வீதிகள், புகையிரதப் பாதைகள், அல்லது கட்டுமானங்களை அமைத்து சாய்வுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல் (Modification of Slopes by Construction of Roads, Railways or Buildings).
- அகழ்வு நடவடிக்கைகள் ( Mining Activities).
- போக்குவரத்து நெரிசல்களினால் அல்லது வெடிக்கவைத்தல், தோண்டுதல் மற்றும் பாறைகளைப் பெயர்த்தல் நடவடிக்கைகளினால் ஏற்படும் அதிர்வுகள் ( Vibrations from Heavy Traffic or Blasting, and Excavation or Displacement of Rocks).
- நீர்த்தேக்கங்களை அமைத்தல் (Construction of Reservoirs).

  சாய்வுகளில் மேற்கொள்ளப்படும் முறையற்ற பயிர்செய்கைகள் (Un-Planned Cultivations in the Slopes).

**பேராசிரியர் வை நந்தகுமார்,**
பேராதனைப் பல்கலைக் கழகம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலையக அறிவியல் பரிமாணத்தில் நூலகமும் வாசிப்பும்

மலையக மக்கள் கல்வியினால் மட்டுமே மேன்மை பெறமுடியும். கல்வி அறிவினை வளர்ப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் வாசிப்பு இன்றியமையாதக அமைகின்றது. எனவே வாசிப்புக்கு உறுதுணையாக, வாசிப்பு பழக்கத்தினை மேம்படுத்த நூலகங்களை அமைப்பது அவசியம். நூலகமும் வாசிப்பும் அறிவுசார் சமூகம் ஒன்றினை குறித்து நிற்கின்றது. உலகத்தில் அறிவாளிகள் எங்கு கூடுதலாகவுள்ளனரோ அங்கு வாசிப்போர் தொகையும் கூடியதாக இருக்கும். இந்த பல்வேறுபட்ட வாசிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே நூல்நிலையங்களாகும். ஒரு நூல்நிலையம் அமைப்பது மூலம் அக்கிராமத்தில் அல்லது பிரதேசத்தில் அல்லது தோட்டத்திலுள்ள குற்றச்செயல்களை தடுக்கலாம். எனவே தான் சுவாமி விவேகானந்தர் "ஒரு நூலகத்தினை நிறுவுவதன் மூலம் ஆயிரம் சிறைச்சாலைகளை நிறுவுவதைத் தடுக்கலாம்" என்றார்.

பொது நூல்நிலையங்கள் இளைஞர்களின் பொழுதுபோக்கு நேரத்தினை பயனுள்ள தாகக் கழிப்பதற்கு தேவையான அறிவேடுகளை, நூல்களை வழங்குமிடமாக இருக்கும். இது ஒரு தகவல் பரிவர்த்தனை நிலையமாக தனிமனித அறிவினை வளர்ப்பதுடன் பிரதேச பொருளாதார வளம் வளர்ச்சியடையவும் காரணமாகும். 'வாசிப்பு மனிதனை முழு மனிதன் ஆக்குகின்றது' என்ற முதுமொழிக்கமைய வாசிப்புப் பழக்கத்தினை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

இன்று நூல்கள் மட்டுமன்றி ஒலி, ஒளிநாடாக்கள் இறுவெட்டுகள் கணினிகள், இணையத்தளங்கள் என்பனவும் அறிவுப் பொக்கிஷங்களாக இருந்து வருகின்றன. குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு மணிநேரத்தினையாவது வாசிப்பதில் செலவிடுவதற்கு பிள்ளைகளை தூண்டுதல் வேண்டும். வாசிப்புப் பழக்கத்தினை தோட்டங்களில் ஊக்குவிக்க வேண்டும். இதற்கு வாசிப்புப்பழக்கத்தினை பாடசாலையின் ஆரம்பநாட்களிலிருந்து தூண்டுதல் வேண்டும். 'இளமையில்கல்வி சிலையில் எழுத்து' என்பது அனுபவத்தில் பெறப்பட்ட முதுமொழியாகும். இளமையில் கற்கும் கல்வி பலகாலங்களுக்கு நிலைத்து நிற்கும். சிந்தாது, சிதறாது மனதில் பதியும். எனவே வாசிப்பு இவற்றிற்கு அடித்தளமாக அமையும். வாசிப்புப்பழக்கம் இளமையிலேயே, சிறுவயதினில் தொடங்கப்படவேண்டும். வாசித்து கருத்தினை விளங்கிக் கொள்ளுதல், விளங்கிய கருத்தினை வெளிப்படுத்துதல் ஆகியன மொழித்தேர்ச்சியில் அடங்குகின்றன. சிறுவயது முதல் நூலகப் பழக்கத்தினை ஏற்படுத்த சிறுவர் நூலகங்களை ஏற்படத்துவதே சாலச்சிறந்தது. அத்துடன் மாணவர்களை பாடசாலையிலுள்ள நூலகத்தினை பயன்படுத்த ஊக்குவிப்பதுடன் தொடர்ந்து கிராமத்தில் பிரதேசத்திலுள்ள நூலகத்தினை பயன்படுத்த பழக்கப்படுத்த வேண்டும். இதனை ஊக்குவிக்க ஆரம்பபாடசாலையின் ஆசிரியர்கள் நூலகம் செல்வதற்கு தூண்டுதலை ஏற்படத்த வேண்டும்.

வாசிப்புப்பழக்கம் என்பது சுயமாக ஏற்படவேண்டியது. திணிக்கப்படகூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பதற்கு ஆர்வத்தினை ஏற்படுத்துவதே ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் கடமையாகும்.

'தந்தை மகட்காற்றும் நன்றி அவயத்து
முந்தியிருப்பச்செயல்'

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே பெற்றோரினது கடமை ஆரம்பித்து வைத்தலாகும். பெற்றோரைத் தொடர்ந்து ஆசிரியர்கள் கடமையினை செய்து பிள்ளைகளினது ஆர்வத்தினை சுடர்விட்டு எழுந்து பிரகாசிக்குமாறு மேலும் தூண்டிவிட, தொடர்ந்து வாசிக்க உறுதுணையாக செயற்படுதல் அவசியம். "கண்டதைக் கற்றவன் பண்டிதனாவான்" ஆனால் நன்கு ஆராய்ந்து அமைவுடைய நூல்களை மட்டுமே மாணவர்களை வாசிக்கத் தூண்டவேண்டும். வாசிப்புப்பழக்கம் இல்லாதவர்கள் கிணற்றுத்தவளைகளாகவே இருக்கின்றனர்.

நூல்களில் அவரவர் விருப்பத்திற்கேற்ப எத்தனையோ விடயங்களைக்கற்க முடியும். கதை, கவிதை, நாடகம், இலக்கியம், விமர்சனம், சமயம், தர்மம், பண்பு, அரசியல், சோதிடம், என பல்வேறு விடயங்களை வாசிப்பினால் அறிந்து கொள்ளலாம்.: பல்வேறுவிடயங்களில் அறிவினை விருத்திசெய்யலாம்.

அது போலவே வாசிப்பானது நூலகங்களில் நூலகரினாலும் தூண்டப்படவேண்டும, நூலகர் நினைவாற்றல் மிக்கவராயும், வாசிப்புத்திறன் உடையவராயும்: மொழிப்புலமை மிக்கவராயும், நேர்மை, தன்னம்பிக்கை, கடமை மனப்பாங்கு, உதவும் மனப்பாங்கு உடையவராயும். புரிந்துகொள்ளும் திறன் மிக்கவராயும், நூல்கள், ஏனைய உசாத்துணை வளங்கள் மற்றும் தகவல்கள் பற்றிய அறிவுடையவராயும், தேவையான நேரத்தில் வாசகர்களுக்கு பல விடையங்கள் பற்றிய விளக்கம் அளிக்கக்கூடிய வராகவும், வாசகர்களின் நம்பிக்கைகள், தேவைகள், பற்றி புரிந்துகொள்ளக் கூடியவ ராகவும் நன்னடத்தைகொண்டவராகவும் இருத்தல் மிகமிக அவசியமாகும்.

நூலகங்களில் போட்டிகள் நடாத்தி வாசகர்களை கவரலாம். சுவர்பத்திரிகை ஒன்றினை நூலகத்தில் நடத்தி எழுத்தார்வத்தினை வளர்க்கலாம் இதன் மூலம் வாசகர்கள் மட்டுமல்லாது எழுத்தாளர்களையும் மலையகத்தில் உருவாக்கலாம். இதனை நூலகரும் மலையகத்திலுள்ள ஆர்வலர்களும் ஆரம்பித்து வைக்கலாம்.

ஒருவர் தனக்குத் தேவையான அறிவினைத் தனிப்பட்ட வகையிலே குருவிடம் பெறமுடியும். அல்லது கல்விநிறுவனத்தில் பெறமுடியும். ஆனால் அறிவை அதிகரிக்க வாசிப்பு முக்கியமாகும். வாசிப்பதனாலேயே அறிவு வளரும். புது கருத்துக்களை அறியும் வாய்ப்பு ஏற்படும். அது மட்டுமல்லாது கற்றல், சிந்தித்தல் தெளிதல் என்பதினூடாக உலகினை காண்பவன் வெற்றிகரமாக தனது வாழ்க்கையை கொண்டு செல்ல வல்லவனாவான். வாசிப்பே கலை, இலக்கிய உருவாக்கத்துக்கும் விருத்திக்கும் அடித்தளமாக அமைகின்றது. அதுபோலவே ஆளுமை வளர்ச்சிக்கும் அதன் விருத்திக்கும் வாசிப்புக்கு பெரும்பங்குண்டு. எனவேதான் அறிவுசார்சமுகத்துக்கு நூலகம், வாசிப்பு அவசியமாகின்றது என கூறப்படுகின்றது. பாலர்பருவத்தில் ஆரம்பிக்கும் வாசிப்பு ஒரு மனிதன் இறக்கும் வரை தொடரவேண்டிய ஒன்றாகும்.

நூலும், நூலகங்களும் ஒரு சிறந்த நண்பனாக விளங்கும் தன்மை கொண்டது. அத்தோடு தமது ஓய்வு நேரத்தினை பயனுள்ள வகையிலே கழிக்க வாய்ப்புகள் ஏற்படும். வாசிப்புமூலம் தர்க்கரீதியான சிந்தனைக் கண்ணோட்டத்தினை வளர்க்கமுடியும். வாசிப்புப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கத்தினால் நிறை ஞானம் மட்டுமன்றி பரந்த அறிவும் ஏற்படும். மனிதனின் நல்ல குணங்களை வளர்க்க பயன்படுவதும் வாசிப்பே ஆகும். வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிப் பதற்காக நூலகம் தோட்டமக்களை நாடிச்செல்ல வேண்டும். இத்துடன் நூலகம் கவர்ச்சியும், தூய்மையும் அமைதியும் நிறைந்த புனிதமான இடமாக அமையவேண்டும்.

இதற்காக தோட்டங்களில் நூலகங்களை அமைக்கவேண்டும். நூலகங்கள், தோட்டத்து நூலகங்களாகவோ, பிரதேசசபை பொதுநூலகங்களாகவோ, நகரசபை, மகாநகரசபை நூலகங்களாகவோ, அரசசார்பற்ற நிறுவனங்களின் நூலகங்களாகவோ, வணக்கத்தலங்களில் அமைந்துள்ள நூலகங்களாகவோ, இருக்கலாம். இவைதவிர தத்தமது வசதிக்கேற்ப தமது வீடுகளில் ஒரு நூலகத்தினை அமைத்துக்கொள்ள வேண்டும். எனவே தோட்டத்துக்கொரு நூலகம் அமைத்து வளமான மலையகதமிழ் சமுதாயத்தினை உருவாக்குவோம்.

இன்றைய கல்விநிலையில் கணிப்பீடு எனும் திட்டம் அவசியமாகின்றது. கணிப்பீட்டுக்கு ஒப்படை தயாரிக்கப்படவேண்டும். ஒப்படை தயாரிக்க நூலகங்களை நாடி அவசிய தகவல்களை சேகரிக்கவேண்டும். இதற்கு நூலகங்களுக்கு செல்வதும் அங்குள்ள பொருத்தமான நூல்களினை தேடி வாசிப்பதும் அவசியம். தேவையான தகவல்களைப் பெற நூலகம் உதவுகின்றது. 'நூலைத்தேடு உலகம் உன்னைத்தேடும்.' எனும் முதுமொழிக்கிணங்க நாம் நூல்களை தேடவைப்போம்.

நூல்கள் தனிமையில் இருப்பவர்களுக்கு சிறந்த நண்பனாக அமைவதுடன் மகிழ்வையும் சிந்திக்கும் ஆற்றலையும் தருகின்றன. நம்பிக்கையை வளர்த்துவிடுகின்றன. ஆய்வாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், பெரியார்களுடன் வாசகனினால் உறவாடமுடிகின்றது. அவர்களது கருத்துக்களை அறியமுடிகின்றது. வாசிப்பின் மூலம் அந்த நூல் எழுத்தாளருடன் சிலமணிநேரங்கள் ஒன்று கலந்து விடுகிறோம்.

இவைதவிர தனியார் விலைகொடுத்து வாங்கி பயன்படுத்த முடியாத முக்கியமான நூல்கள், உசாத்துணை நூல்கள், அரிதான விலைமதிப்புடைய நூல்கள் போன்றவற்றினை நூலகங்கள் வாங்கி மக்களுக்கு நூலகத்தில் கிடைக்க வழிசமைக்க வேண்டும். தேவையான நூல்களை பெற்றுக்கொள்ள அத்தியாவசியமான நூல்கள் சந்தையில் இருக்கவும் வேண்டும். இன்று பலதரப்பட்ட நூல்கள் புத்தகச்சந்தையில் தாராளமாகக் கிடைக்கின்றன. 'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' எனும் ஔவையார் கூற்றுக்கமைய கல்லாத, வாசிக்காத நூல்கள் பலவுள்ளன. இவற்றினை பெற, பயன்படுத்த உதவுவது நூலகமேயாகும். எனவே நூலகங்கள் ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைக்கப்படுவது அவசியம்.

நூலகம் ஒன்றினை உருவாக்க வீட்டுக்கு ஒரு புத்தகம் என்ற திட்டத்தினை உருவாக்கி அதன் அடிப்படையில் நூல்களை சேகரித்து நூலகம் ஒன்றினை ஆரம்பிக்க முடியும். தொழிற்சங்க தலைவர்களிடம், பாராளுமன்ற உறுப்பினர்களிடம், மாகாணசபை, பிரதேசசபை உறுப்பினர்களிடம், அரசசார்பற்ற நிறுவனங்கள் பொன்றன பெருமளவு நிதியினை ஒரேமுறையில் ஒதுக்கித்தராவிட்டாலும் மாதத்துக்கு ஒரு நூலையேனும் வாங்கிக்கொள்ள நடவடிக்கை எடுப்பதற்கு மலையகத்தினைச் சேர்ந்த அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் முயற்சிசெய்ய வேண்டும். அவ்வாறு பெற்ற நூல்களை பொது இடத்தில் வைத்து நூல்நிலயங்களை ஆரம்பித்து வைத்தல், மலையக அறிவியலுக்கு குத்துவிளக்கு ஏற்றிவைத்தல் போன்றது. நூலகம் என்பது ஒரு கூட்டுமுயற்சி இதன் பலன் இப்போதும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருங்கால சந்ததியினருக்கும் கிடைக்கும். தோட்டத்து தொழிற்சங்ககாரியாலயங்களில் சிறு நூல்நிலையங்களை மக்களின் பாவனைக்காக அமைக்கலாம். தொழிற்கங்கக் காரியாலயங்கள் தோட்டமக்கள் கூடும் இடமாகவும், மாதாமாதம் மக்கள் வழங்கும் சந்தாப்பணத்தினை கையாளும் இடமாகவும் அமைவதால் சந்தாப்பணத்தில் ஒரு வீதத்தினையாவது நூல்கொள்வனவுக்கு ஒதுக்கி நூலகங்களை பலப்படுத்தி உயிரோட்டமுள்ளதாக தொழிற்பட ஆவனசெய்தல் வேண்டும். தொழிற்சங்கங்கள், தமது அங்கத்தவர்களுக்கு நூல் இரவல் வழங்க வேண்டும். இதற்கு ஏதேனும் ஒரு இரவல் முறையினை பயன்படுத்த முடியும்.

விலைகொடுத்து வாங்கும் நூல்களை படித்தபின் நூலகத்துக்கு அன்பளிப்பு செய்வேண்டும். ஒவ்வொருவரும் தங்களது உறவினரின் கருமாதி, நினைவுதினம், பிறந்ததினம் அவரது, உங்களது ஞாபகார்த்தமாக ஒருநூலினை வாங்கி இறந்தவரின், இருப்பவரின் பெயரினை எழுதி நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்தல் மிகப்பெரிய தானமாகும். நூல்களை இலவசமாக வழங்குதலும் வித்தியாதானமே. சகல தோட்டங்களில் உள்ள ஆலயங்கள் தோறும் அவ்வப்பிரதேசங்களில் காணப்படும் விலைமதிப்பற்ற நூல்களைத்திரட்டி நூல்நிலையங்களை அமைக்கலாம்.

தோட்டங்களின் அமைக்கப்படும் நூலகத்தினில் உள்ர் வழிகாடடிகள் தொலைபேசி சுட்டி நூல்கள், மருத்துவவழிகாட்டி நூல்கள், தொழிலாளர் பிரச்சினைக்கான தீர்வுகள் பற்றிய வழிகாட்டிநூல்கள், அகராதிகள், மத்தியவங்கி அறிக்கைகள், வாழ்க்கை வரலாற்றுநூல்கள், புவியியல் சார்ந்த நகரங்கள், பட்டினங்கள், சமுத்திரங்கள் மலைகள், ஆறுகள், பருவவெளியீடுகள், செய்திபத்திரிகைகள் சிறப்புமலர்கள், அரசஅறிக்கைகள், வர்த்தமானி, கணினி பற்றிய நூல்கள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், இலக்கியம், விமர்சனம், சமயம் போன்ற நூல்கள் இங்கு பயன்படுத்த கூடியதாக சேமித்து வைக்கப்படுதல் அவசியம். அத்துடன் இவ்வகை நூலகங்களை நாடி வரும் பாவனையாளர்கள் ஆறிலிருந்து அறுபது வரையிலான வயதினை உடையவர்கள் என்பதனை இங்கு கருத்தில் கொள்ளுதல் அவசியம். அரசாங்கம் சகல வசதிகளையும் செய்து தரும் என்று காத்திருக்காது மக்கள் தாமே முன்வந்து தமது தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்ய வேண்டும். இதற்கு மலையகத்தினைச் சேர்ந்த அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், அறிஞர்களும், நலன்விரும்பிகளும், உதவியளிக்க வேண்டும்.

நூல்நிலையங்களை அமைத்தால் மட்டும் போதாது அதனை சுறுசுறுப்பாக செயற்படும் நிறுவனமாக்கினால் மாத்திரமே அவற்றிலிருந்து முழுப்பயனை பெறமுடியும். எனவே மலையகத்திலுள்ள அறிஞர்களும் ஏனைய ஆர்வலர்களும் தற்போது உயிரோட்டம் இல்லாது இருக்கும் நூலகங்களில் அங்கத்தவர்கள் ஆகவேண்டும். இதனை முழுமையாக பயன்படுத்தவேண்டும். ஒவ்வொருவரும் தமது வீட்டிலுள்ள புத்தகங்களை ஒன்று திரட்டி ஒருவீட்டு நூலகத்தினை அமைத்துக் கொள்ளலாம். இதனை தோட்டத்தொழிலாளர்கள், தோட்டமக்களிடையே ஏற்படத்த தூண்டவேண்டும்.

ஒரு குறித்த நூலகவாசகர்களை ஒன்று சேர்ந்து வாசகர் வட்டம் ஒன்றினை உருவாக்கி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதன் மூலம் குறித்த பிரதேசமக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தகவல் வழிகாட்டிகளை நூல்களை தெரிவு செய்யலாம். தாமும் பங்குபற்றுகிறோம் எனும் உணர்வில் நூலகத்தினை நாடிவரும் ஆர்வத்தினை ஏற்படுத்தலாம். பிரதேசவாசிகளின் தேவையறிந்துதான் நூல்கள் தேர்வுசெய்யப்படவேண்டும். குறித்த பிரதேசம் தொடர்பான தகவல்கள் செய்திகள் சேகரிக்கப்பட்டு, கத்தரிக்கப்பட்டு ஒட்டுப்புத்தகத்தில் ஒட்டி சேகரித்தல் மூலம் கிராமம், தோட்டம் பற்றிய தகவல்களை சேர்த்து வைக்க உதவும். அது போல் தேடுதலுக்கும் உதவும்.

நூல்வெளியீட்டு விழாக்களில் கலந்து கொண்டு அறிஞர்கள், விமசர்கள் போன்றோரினது உரைகளை செவிமடுத்து புத்தகங்கள் பற்றியும் அவற்றினை மதிப்பீடு செய்யும் முறைகள் பற்றியும் அறிந்து கொள்ளல் வேண்டும். அத்துடன் சிறந்த நூலெனின் அதனை வாங்குவதன் மூலம் எழுத்தாளர்களை ஊக்குவித்து மேலும் அச்சேறும் நூல்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். அத்துடன் ஆய்வரங்குகள், விவாதஅரங்குகள் போன்றவையும் அறிவினை விருத்திசெய்ய உதவும்.

'செல்வத்துட் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை'

என வள்ளுவர் கூறுகின்றார். செவிமடுப்பதனால் அறிவை வளர்க்கலாம் என்பதனால் செவிமடுக்கும் பண்பினையும் வளர்த்தல் மிகமுக்கியமானது.

இவ்வாறாக தொடர்ந்து தோட்டமக்களை தூண்டுவதன் மூலம் நூலகபாவனை, வாசிப்புபழக்கம் ஆகிய பண்புகளை மலையகமக்கள் மத்தியில் ஏற்படுத்தி மலையகசமுதாயம் அறிவுசார் சமூகமாக தம்மை தாமே வளர்த்துக் கொள்ளவேண்டும்.

**உசாத்துணை நூல்கள்:**


- மகேஸ்வரன், இரா, "நூலக அறைகூவல்" மத்தியமாகாண சாகித்திய விழா மலர்; கண்டி மத்தியமாகாண தமிழ் கல்வி அமைச்சு, 2002
- பாலசுந்தரம்பிள்ளை, தி. சு, "ஔவையார் திருவுள்ளம்" சென்னை; திருநெல்வேலி நூற்பதிப்புக்கழகம், 1943.
- சிற்பவானந்தா சுவாமிகள், ஸ்ரீ, "ஸ்ரீ விவேகானந்த சரிதம்" சென்னை; ஸ்ரீ இராமகிருஷ்ண மடம், 1936.



**ஆர்.மகேஸ்வரன்**
**B.A(Hons)** புவியியல் சிறப்பு
**Master of Library and Information Science**
**Reading Philosophy in Doctorate in Library and Information Science**
சிரேஷ்ட துணைநூலகர்,
போராதனை பல்கலைக்கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக கல்வியில் பெருந்தோட்ட சமூகத்தின் வகிபாகம் - ஒரு நோக்கு

இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி ஆரம்பிக்கப்பட்டு சுமார் 50 வருடங்கள் கடந்து விட்டன. இந்த ஐம்பது ஆண்டுகால கல்வி வளர்ச்சியில் வலுவாக வமர்சிக்கக்கூடிய ஓர் அம்சம் தான் பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் ஒவ்வொரு அரசாங்கமும் கையாண்ட கட்டுப்பாட்டு கொள்கைகள் ஆகும். பாடசாலைக் கல்வியை தீவிரமாக விஸ்தரித்தமையால் இன்று சுமார் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் வரை உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் நிலை உறுவாகியுள்ளது. மறுபுறமாக இவர்கள் அனைவரும் பல்கழலக்கழக கல்வியை நாடுபவர்களுமாகும். ஆயினும் இன்று பல்கலைக்கழகத்துக்கு 17000 பேர: வரையிலேயே அனுமதிக்கப்படுகின்றார்கள். குறிப்பாக 2006ம் ஆண்டில் மொத்தமாக 118770 பேர் பல்கலைக்கழக நுழைவுக்கு விண்ணப்பிக்க தகுதிப்பெற்றிருந்தார்கள். ஆயினும் சுமார் 16622 (14%) பேர் மாத்திரமே உள்வாங்கப்பட்டனர். அதேவேலை 18 - 23 வயதுக்கிடைப்பட்டோரில் சுமார் 3% தத்தினருக்கு மாத்திரமே இலங்கையில் கல்கலைக்கழகக் கல்வி வழங்கப்படுகின்றது. இந்நிலைமையானது இலங்கையில் பல்கலைக்கழக கல்வி விஸ்தரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டு நிற்பதுடன் பல்கலைக்கழக கல்விக்கான அதிகரித்த கோரிக்கையொன்று காணப்படுவதனையும் வெளிக்காட்டுகின்றது. இவ்வம்சமானது நாட்டின் கல்வித்துறையில் பின்தங்கிய பிரிவினராகிய பெருந்தோட்ட சமூகத்தின் உயர்கல்வி நிலையை வெகுவாகப் பாதித்துள்ளது எனலாம். ஆகவே இக்கட்டுரையானது பெருந்தோட்ட சமூகத்தின் பல்கலைக்கழக கல்வி நிலைப்பற்றி ஆயவு செய்வதாகவே காணப்படுகின்றது.

சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் கொண்டுவரப்பட்ட கல்வி சீர்திருத்தங்கள் முக்கியமாக இந்நாட்டின் பின்தங்கிய பிரிவினர்களை முழுமையாக உள்வாங்கும் நோக்கத்தைக்கொண்டதாகவே காணப்பட்டன. கல்வியில் சமவாய்ப்பு, சம நீதி, யாவருக்கும் கல்வி (Education for all) ஆகியன பெரிதும் வலியுறுத்தப்பட்டதுடன், கல்வித்துறையில் பின்தங்கிய பிரிவினர்களையும் முழுமையாக உள்வாங்கும் நோக்குடன் மாவட்ட அனுமதிக் கொள்கை, பின்தங்கிய மாவட்ட அனுமதிக் கொள்கை ஆகினய கொண்டுவரப்பட்டன. ஆயினும், இவை நாட்டின் பின்தங்கிய பிரிவினர்களாகிய பெருந்தோட்ட மக்களை முழுமையாகச் சென்றடையவில்லை. அத்தகைய ஏற்பாடுகளின் மூலம் நாட்டின் ஏனைய சமூகத்தவர்கள் பாடசாலைக்கல்வி, ஆண் பெண் எழுத்தறிவு, பாடசாலை சேர்வு விகிதம், ஆசிரியர் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, முறைசாராக் கல்வி, விஞ்ஞான தொழிநுட்பக் கல்வி என்பவற்றில் அடைந்து கொண்ட ஏற்றங்கள் எதுவும் முழுமையாக இச்சமூகத்தை சென்றடையவில்லை. அண்மைக்காலங்களில் இவற்றில் ஒரு சில ஏற்றங்களைக் கண்டுகொள்ள முடிந்தாலும் தேசிய ரீதியான வளாச்சி விகிதத்துடன் ஒப்பிடும் போது பெரிதாக பெருமைப்படுத்துவதற்கு ஒன்றுமில்லை.

கல்கலைக்கழக கல்வியில் பெரியலவிளான பின்னடைவினை அடைவதற்கு பிரிஜாவுரிமை, வாக்குரிமை ஆகியன பரிக்கப்பட்டமையும், 1977 ம் ஆண்டு வரையில் தோட்டப்புற பாடசாலைகளை அரசாங்கம் பொருப்பேற்காமை ஆகியன மிக முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. மேலும், மிக நீண்டகாலமாகவே அதிகமான பாடசாலைகள் ஆரம்பக்கல்வியினை மாத்திரமே போத்தித்து வந்தன. குறிப்பாகவே 1960 களில் தான் பல்கலைக்கழக புகுமுக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் இவை பலவேறு குறைப்பாடுகளுடனேயே செயற்பட்டு வந்தன. இத்தகைய பிரச்சினைகள் இன்றுவரை தொடர்ந்தவண்ணமேயுள்ளன. கலைப்பரிவுகளில் கற்கும் வசதிகள் கொண்ட பாடசாலைகள் பல காணப்பட்டாலும் கணித விஞ்ஞான வர்த்தகப் பிரிவுகளில் கற்பிக்கும் பாடசாலைகள் ஒரு சில மாத்திரமே காணப்படுகின்றன.

இலங்கை முழுவதும் விஞ்ஞான, கணிதப் பிரிவுகளில் கற்கும் வசதிகள் கொண்டப் பாடசாலைகள் (Type Lab) சுமார் 650 வரையில் காணப்படுகின்றன. ஆயினும் பெருந்தோட்டப் பகுதியில் சுமார் 12 பாடசாலைகள் மாத்திரமே காணப்படுகின்றன. இவற்றில் ஒரு சில பாடசாலைகளைத்தவிர ஏனையவைகள் இத்துறையில் புலமைப்பெற்ற ஆசிரியாகள் இன்றியும், போதிய வளங்கள் இன்றியுமே இயங்கி வருகின்றன. நாட்டில் 13 லட்சத்திற்கு அதிகமான மக்கள் வாழும் ஒரு சமூகத்தில் சுமார் 12 பாடசாலைகளில் மாத்திரமே விஞ்ஞான கணித பிரிவுகளில் கற்பிக்கம் வாய்ப்புகள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடவேண்டியதொரு விடயமாகும்.

அரசாங்கம் ஆண்டுதோறும் பலகோடி ரூபாய் பணத்தினை பல்கலைக்கழக கல்விக்காக செலவிடுகின்றது. பின்வரும் அட்டவணை பல்கலைக்கழக கல்வி மீதான அரசாங்கத்தின் செலவினை காட்டுகின்றது. (மில்லியன் ரூபாய்களில்)

1980 - 2003

| ஆண்டு | 1980 | 1985 | 1990 | 1995 | 2000 | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | 256 | 589 | 1061 | 2839 | 5111 | 6161 | 6108 | 6497 |

ஆதாரம் : University Grand Commission Statistical Hand Book - 2004

இவ்வாறு அரசாங்கம் காலத்துக்கு காலம் மிகவுயர்ந்த தொகையினை கல்கலைக்கழக கல்விக்காக செலவிடுவதற்கு இம்மக்களின் அயராத உழைப்பின் மூலம் கிடைத்த வருவாயும் காத்திரமான பங்கினை வகிக்கின்றது. ஆயினும் அந்நிதியின் மூலம் இச்சமூகம் என்ன நன்மையினைப் பெற்றுக்கொண்டது? உயர்கல்விக்கான தேசிய செலவீனத்தில் இவர்களுக்கு கிடைத்த பங்கு என்ன? பல்கலைக்கழக கல்வியில் இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும் என்பதற்காக கொண்டுவரப்பட்ட பல்வேறு அனுமதிக் கொள்கைகளில் இம்மக்களுக்கு கிடைத்த வாய்ப்பு என்ன? (மாவட்ட அனுமதி, பின்தங்கிய மாவட்ட அனுமதிக் கொள்கை) அரசாங்கத்தின் உயர் கல்வி செலவின் மூலம் இச்சமூகத்தில் எத்தனை வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் உருவானார்கள்? ஆகியன இம்மக்களின் பல்கலைக்கழக கல்வி நிலைப்பற்றி ஆய்வு செய்யும் பொது எழும் முக்கிய வினாக்களாகும். மேலும் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு ஆண்டுக்கு அரசாங்கம் செலவிடும் பணத்தொகை 125000 ரூபாவாகும். இதனை எத்தனை பெருந்தோட்ட மாணவர்கள் அனுபவிக்கின்றார்கள். எத்தனை பேருக்கு இதனை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது என்பது பிரிதொரு முக்கிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய சமூகத்தவர்கள் கல்வித்துறையில் அடைந்த மேலெழுச்சியின் காரணமாக இன்று வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் உயர் கல்விபெறும் நிலைக்கு உயர்ந்துள்ளார்கள். அத்துடன் தமக்கென பிராந்திய பல்கலைக்கழகங்களையும் அமைத்துக் கொண்டுள்ளார்கள். இது பல்கலைக்கழக கல்விக்கான பிராந்திய ரீதியான அதிகரித்த கோரிக்கையினை வெளிக்காட்டியது. மறுபுறமாக பெருந்தோட்ட சமூகமானது தனியான பல்கலைக்கழகத்திற்கான வலுவான கோரிக்கையினை முன்வைக்கும் நிலைக்குக் கூட ஏற்றம் காணவில்லை. இன்று இலங்கை முழுவதும் 15 தேசிய பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் சுமார் 65000 மாணவர்கள் வரையில் தமது உயர் கல்வியை தொடர்கின்றார்கள். இதில் பெருந்தோட்ட சமூகத்தை சேர்ந்த 500 க்கு குறைவான மாணவர்களே காணப்படுகின்றனர். ஆயினும் ஏனைய சமூகத்திலிருந்து ஆண்டுக்கு 1000ற்கு மேற்பட்ட மாணவர்கள் சகல பீடங்களிலும் அனுமதிப் பெற்றுக்கொள்கின்றார்கள். எவ்வாறாயினும், அண்மைக்காலங்களில் இச்சமூகத்திலிருந்து கலை, வர்த்தக பிரிவுகளில் நுழைவு வீதத்தில் ஒரு சில ஏற்றங்களை கண்டு கொண்டாலும் ஏனைய பீடங்களுக்கு ஒரு சில மாணவர்களே அனுமதி பெறுகின்றார்கள். அறிவு வெள்ளம் பிரவாகம் எடுத்தோடும் இன்றைய நூற்றாண்டில் வாழ்வதற்கு இன்னும் இம்மக்கள் தம்மை தயார்ப்படுத்தவில்லை என்பதனையே இது சுட்டிக்காட்டுகின்றது.

பெருந்தோட்ட சமூக மாணவர்களை அதிகமாக உள்வாங்குவது பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களேயாகும். ஆயினும் அண்மைக்காலங்களில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் கற்கும் வாய்ப்பு சில மாணவர்களுக்கு கிட்டியுள்ளது. அதேவேளை யாழ் கிழக்கு மற்றும் தென்னிலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்விவாய்ப்பு ஒருசிலருக்கு கிடைத்தாலும் அங்கு காணப்படுகின்ற இன பதற்றம், அதிகரித்த வன்முறைகள், மொழி மற்றும் பிரதேச ரீதியான பிரச்சினைகள், பல்கலைக்கழக சூழல், போக்குவதைத்துப் பிரச்சினை, குடும்ப சூழல் ஆகியவற்றின் காரணமாக இப்பல்கலைக்கழகங்களுக்கு செல்வதில்லை. இதற்கான மாற்று வழியொன்றினை தேடுவது அவசியமாக உள்ளது.

எவ்வாறாயினும், பெருந்தோட்டத்துறையில் ஆண்டுக்கு சுமார் 100 பேர் வரையிலேயே உயர் கல்வி வாய்ப்பினை பெற்றுக் கொள்கின்றார்கள். 2005 2006 கல்வியாண்டுக்காக பேராதனை, கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை முறையே 131, 258, 43 ஆகும். (வடக்கு, கிழக்கு மாணவர்கள் உட்பட)

இன்றைய நிலையில் அனுமதிக்கப்படுகின்ற 17500 மாணவர்களில் குறைந்தது 1000 தொடக்கம் 2000 பேர் வரையிலாவது இச்சமூகத்தை சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அதிலும் சகல போதனா பீடங்களிலும் பரந்து காணப்படவேண்டும். இன்று ஒரு சில பீடங்களுக்கு ஒரு இரண்டு பேர் மாத்திரமே அனுமதிப் பெறுகின்றார்கள். ஆகவே, பல்கலைக்கழக கல்வியில் உயர் நிலையினை அடைந்துகொள்ள வேண்டுமாயின், உயர்தர பாடசாலைகளை வலுப்படுத்த வேண்டும். இப்பாடசாலைகளில் காணப்படுகின்ற சகல விதமான பற்றாக்குறைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும். குறிப்பாக விஞ்ஞான கணித பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகளை விஸ்தரிக்க வேண்டும். அதே வேளை இத்துறையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பெற்ற ஆசிரியர்களை நியமித்து அவற்றுக்கான சகல உபகரணங்களையும் வழங்க வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதியினை பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் பெற்றுக்கொண்டாலும் அதிகரித்த வறுமை, குடும்ப சுமை, பல்கலைக்கழக கல்வியின் முக்கியத்துவம் தெரியாமை என்பவற்றின் காரணமாக ஒரு சிலர் தமது கல்வியினை இடை நிறுத்திவிடுகின்றனர். குறிப்பாக இவர்களுக்கு பல்கலைக்கழகக் கல்வியை தொடர்வதற்கான மாற்று வருமானங்கள் சரியாக கிடைப்பதில்லை. இவற்றுக்கு அப்பால் இன்று சில பிராந்திய பல்கலைக்கழகங்களில் சிங்கள மொழி மூலம் போதிக்கப்படும் கற்கைநெறிகள் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுவதில்லை. ஆகையால், இத்தகைய பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்கு பங்கில்லை என்பதனை குறிப்பிட்டாக வேண்டும்.

இந்நிலையானது பாடசாலை கல்வியில் காணப்படும் இன மொழி மத ரீதியான வேறுபாடுகள் பல்கலைக்கழக கல்வியிலும் காட்டப்படுவது போல் எண்ணத்தோன்றுகின்றது. தென்னிலங்கையில் செயற்பட்டு வரும் பல்கலைக்கழகங்கள் தமிழ் மொழி மூலமாக கற்கைகளை இயன்றளவு தவிர்த்து வருகின்றன. ஆயினும் முற்றாக இல்லை. இதற்கு நாட்டில் இடம்பெறும் தொடர்ச்சியான இன வன்முறைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. சகல பல்கலைக்கழகங்களிலும் சுமார் 3700 பேர் போதனா ஆசிரியர்களாக காணப்படுகின்றார்கள். இதில் சுமார் 18 பேர் மாத்திரமே இச்சமூகத்தை சேர்ந்தவர்களாக காணப்படுகின்றார்கள். இதற்கு மிகக் குறைந்த எண்ணிக்கையினர் மாத்திரம் பல்கலைக்கழக அனுமதிப் பெறுவது முக்கியக் காரணமாகும். பின்வரும் அட்டவணையானது இலங்கையின் பிரதான பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த தமிழ் மாணவர்களின் விபரங்களைக் காட்டுகின்றது.

2005 - 2006 ம் கல்வியாண்டு

| பல்கலைக்கழகம் | மாணவர் தொகை |
|---|---|
| கொழும்பு பல்கலைக்கழகம் | 131 |
| பேராதனை பல்கலைக்கழகம் | 258 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 43 |
| களனி பல்கலைக்கழகம் | 18 |
| மொரட்டுவ பல்கலைக்கழகம் | 149 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழகம் | 1102 |
| கிழக்கு பல்கலைக்கழகம் | 308 |
| ருகுணு பல்கலைக்கழகம் | 43 |
| தென்கிழக்கு பல்கலைக்கழகம் | 25 |
| சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 29 |
| வயம்ப பல்கலைக்கழகம் | 37 |
| | |
| மொத்தம் | **2265** |

ஆதாரம் : University Grand Commission Statistical Hand Book 2006

ஆகவே பல்கலைக்கழக கல்வியில் இச்சமூகத்தின் வகிபங்கு பற்றி ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமாயின் இது தொடர்பான சரியான தரவுகளை, புள்ளி விபரங்களை திரட்ட வேண்டும். எதிர்காலத்தில் உயர் கல்வி வாய்ப்பினை அதிகரிக்க, அதற்கான கோரிக்கைகளை முன்வைக்க, அதற்கான கொள்கை திட்டங்களை வகுக்க, அவற்றை அரசாங்க மட்டத்தில் சமர்ப்பிக்க சரியான தரவுகள், புள்ளி விபரங்கள் காத்திரமான பங்கினை வகிக்கும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாகவே உயர்நிலை பரீட்சைக்குத் தோற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் எண்ணிக்கை, பல்கலைக்கழக கல்விக்கு தகுதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை, அனுமதி பெறுவோரின் எண்ணிக்கை, அனுமதி கிடைத்தும் செல்லாதோர், இடை விலகியோர் என்ற அடிப்படையில் சரியான தகவல்களை திரட்ட வேண்டும்.

இவற்றை விட பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையில் இச்சமூகம் சார்ந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட வேண்டும். சமூக பொருளாதார துறைகளில் பின்தங்கிய சமூகம் என்ற வகையில் குறைந்த புள்ளியில் அனுமதி வழங்கப்பட வேண்டும். அத்தோடு உயர் நிலை பாடசாலைகளின் மேம்பாட்டுக்காக அதிகமான நிதி ஒதுக்கீட்டினை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாகவே பல்கலைக்கழக அனுமதியினை பெறுவதற்கு தடையாக உள்ள காரணிகளை இனங்கண்டு அவற்றினை சரிசெய்வதற்கு பொருத்தமான கொள்கைத் திட்டங்களை வகுக்க வேண்டும். அவ்வாறு அன்றி திறந்த போட்டியின் மூலம் அனுமதி பெறுவதற்கான வாய்ப்பு கடினமானதாகவே காணப்படும். ஏனைய சமூகத்தவருக்கு சமமாக ஏற்றங்களை அடைந்துகொள்ள வேண்டுமாயின் ஒரு தனியான பல்கலைக்கழகத்திற்கான வலுவான கோரிக்கைகளை முன்வைக்க ஆயத்தமாக வேண்டும். அதன் முக்கியத்துவத்தை உணர வேண்டும். இத்தகையதொரு பல்கலைக்கழகம் தனியாக அமைக்கப்படுமாயின் அது இம்மக்களின் அபிவிருத்திக்கு மாத்திரமன்றி, இவர்களின் வரலாறு, கலை, கலாசாரம், பாரம்பரியங்கள், தனித்துவம் ஆகியவற்றைப் பேணுவதற்கும், அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் பெரிதும் புத்தூக்கமளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே, அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகளானது சகல வேறுபாடுகளையும் கடந்து இச்சமூகத்தவர்களை முழுமையாக உள்வாங்கும் வகையில் உருவாக்கப்பட வேண்டும். குறுகிய தேசியவாத சிந்தனைக்கு அப்பால் சென்று இப்பணியினை ஆற்ற வேண்டும். இம்மக்களின் அரசியல் பங்குபற்றுதல் குறைவாக காணப்படுவதற்கும், குறைவிருத்திக்கும் உயர் கல்வி நிலையில் ஏற்பட்ட தொடர்ச்சியான பின்னடைவு காத்திரமான பங்கினை வகிக்கின்றது. இம்மக்கள் மத்தியில் மேல்நோக்கிய சமூக நகர்வு (Social Mobility) ஒன்று ஏற்படாமைக்கும் இதுவே காரணமாகும். ஆகவே பல்கலைக்கழக கல்வியில் இம்மக்களின் பங்கினை அதிகரிக்க விசேட கொள்கைத்திட்டம் ஒன்றினை அரசாங்கம் உருவாக்க வேண்டும். இதற்கு இம்மக்களின் அரசியல் தலைமைகளினதும் சிவில் அமைப்புக்களினதும் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். இத்தகைய பின்தங்கிய பிரிவினர்கள் வாழுகின்ற மேற்கைரோப்பிய நாடுகளில் ஒருபக்க சார்பான கொள்கைகள் (Partial Policy) முன்னுரிமை கொள்கைகள் (Preferencial Policies) குறைதீர் நடவடிக்கை (Affirmative Action) என சில விஷேட ஏற்பாடுகள், கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன. இவ்வாறான கொள்கைகள், ஏற்பாடுகள் ஆகியன இம்மக்களுக்காகவும் உருவாக்கப்பட வேண்டும். இவை பல்கலைக்கழக கல்வியில் தமது நிலையினை மேம்படுத்திக் கொள்வதற்கு அதன் மூலம் மேலெழுச்சி அடைவதற்கு புத்தூக்கம் அளிப்பதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**இரா. ரமேஸ்**
அரசறிவியல் விசேடத்துறை
விடுகை வருடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய எழுத்துலகப் பிரமாக்கள்

புத்தகங்கள் மீதான ஆர்வமும் வாசிப்பில் காட்டும் நாட்டமும் மலையகத்தவர்களிடையேக் குறைந்து காணப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இன்று பரவாலாக கூறப்படுகிறது. இது குறித்த நம்மில் வெட்கப்படுவதற்கும் மறைத்துப் பேசுவதற்கும் ஒன்றுமில்லை. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைத் தீவுக்கு கொண்டு வரப்பட்ட நிரட்சரகுட்சியினரின் பரம்பரையினர், பெரும்பான்மையினராக இன்றும் பயிற்றப்படாத தொழிலாளர்களாக Unskilled Labourers பெருந்தோட்டங்களில் வாழும் போது இந்தக் குற்றச்சாட்டில் ஆதங்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்த நிலைமாற்றப்படுதல் வேண்டும் என்று உறுதி பூணுவோமாக. இந்த மாற்றத்துக்கான ஒரு முயற்சி வீரகேசரி பத்திரிகை மூலம் முன்னெடுக்கப்பட்டது. இரண்டரை மாதங்களிலேயே அந்த முயற்சி நிறுத்தப்படடது. மீண்டும் 14.01.1962 முதல் ஆரம்பிக்கப்பட்ட "தோட்ட மஞ்சரி" வருட இறுதிக்குள் ஒரு மலையக சிறுகதைப் போட்டியை நடாத்தியது. வெற்றிகரமாக நடந்த அப்போட்டிக்கு நூற்றி ஐம்பது கதைகள் வந்தன என்பது மகிழ்ச்சி அளிக்கும் ஒரு செய்திதான்.

அந்த கதைகளில் தான் மலையகம் என்றால் என்ன என்பதை வாசகர்கள் புரிந்து கொண்டார்கள். மலையகம் என்பதை தம் மனக்கண்ணால் பார்த்தவர்கள், தேயிலை மரத்தில் ஏணியின் மூலம் ஏறி கொழுந்து பறிக்கும் பெண்களைப் பற்றி எழுதும் அபத்தம் அப்போதும் நடந்தது. அதையெல்லாம் தாண்டி டலையக கதைகள் படைத்தவர்கள், மலையகத்தில் மண் தோய வாழ்ந்தவர்கள், வெற்றி பெற்றவர்கள். அவர்களின் எழுத்துக்களில் மலையகம் உயிர் வாழத் தொடங்கியது.

"காதில் பொன் கடுக்கனாடத் தலையில் சரிகை வேஷ்டி, கையில் தங்கக்கட்டி, பத்து விரல் பொன் மோதிரங்கள், இடுப்பில் புது வேஷ்டி, கையில் புதுக்குடை, காலில் புதுச் செருப்பு" என்று தம் கதாபாத்திரத்தை வர்ணித்து, மனக்கண் மூலம் கொண்டு வர ஆரம்பித்தவர் கோ. நடேசய்யர்.

இதன் பின் வந்த சில கதைகளில் இடபிண்ணனி முக்கிய இடத்தை வகிக்க ஆரம்பித்தது. பனி கலைந்தும் கறையாத அந்தக் காலைப்பொழுது தூய்மையாக இருந்தது, கிழக்கு இன்னும் சிவக்கக் கூட இல்லை. உடம்பை ஊடுருவும் சில்லென்ற பனிக்காற்றுக்கு இதமாக போர்வையும் கம்பளியுமாக தோட்டத்து ஆண்கள் அனைவரும் அங்கு குழுமி நின்றார்கள்.

என்.எஸ்.எம். ராமையா எழுதிய பிஞ்சுக்குவியல் தூண் தூணாய் நிற்கும் மரங்களிடையே தூரத்தில் தெரியும் மலைச்சரிவுகள், கருப்பு வண்ணத்தால் தீட்டி மாட்டிய ஓவியம் போல் தெரிகிறது.

தெளிவத்தை ஜோசப் எழுதிய "மீன்கள்; பகையரசன் கோட்டை மதிலைப் போல எழுந்து நிற்கும் மலைகள்.

சாரல் நாடன் எழுதிய "பிரேத ஊர்வலம், மேட்டு லயத்துக்கு கீழே, துரையின் பங்களாவுக்குப் போகும் ரோட்டோரத்தில் நிற்கிற மரத்தில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சல் ஆடத் தொடங்கியது. அப்படி என்றால் விடிந்து விட்டது என்று அர்த்தம்.

மாத்தளை சோமு எழுதிய "ஊஞ்சல் மரம்", பிரட்டு தப்பு ஒலியில் அவனது தூக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைந்து விட்டது. அதிகாலை நாலரை மணிக்கு எல்லாம் பிரட்டுத்தப்பும் ஒலிக்கும், ஒலிக்க வேண்டும். லயக் காம்பராக்களிலிருந்து தேங்காய் துருவும் சத்தம் ஆரம்பமாகிறது.

மாத்தளை வடிவேலன் எழுதிய "இவர்களும் மனிதர்கள்" மாலை வெளிச்சம் மங்கிக் கொண்டு வந்தது. வானத்தில் ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் கூடக் கண் சிமிட்டின. குளிர் காற்று ஜிலு, ஜிலு என்று வீசிக் கொண்டிருந்தது. மலையில் வீசும் காற்று அவுரி மரத்திற்பட்டு "ஊ" என்று ஒருவித ஓசையை அந்த நிசப்தமான இடத்தில் எழுப்பியது.

செ. நடராசா எழுதிய தேயிலைத் தோட்டத்திலே மீனாட்சி என்ற ஆரம்பகாலச் சிறுகதைகளில் சித்திரிக்கப்பட்ட மலையக மக்களின் மனசில் படிய ஆரம்பித்து, மலையக இலக்கியம் குறித்த ஒரு பார்வையைத் தந்தது.

தம் மண்ணின் வாசனையைத் தம் எழுத்தின் ஒவ்வொரு வார்த்தையிலும் வாழ வைக்கும் எழுத்தாளர்கள், தம் மண்ணையும், காற்றையும் பேச வைத்தார்கள்.

"மலைநாட்டு மரம், செடி, கொடி, பூ, பிஞ்சு, கனி முதலியவற்றைக் குறியீடுகளாகப் பயன்படுத்தி சில எண்ணங்களையும் உணர்வுகளையும் குறிப்பாலுணர்த்தி விடும். இவர்களின் திறமையை" க. கைலாசபதி வெகுவாகப் பாராட்டுகிறார். "தோட்டக் காட்டினிடிலே" நூலுக்களித்த முன்னுரையில்.

மண் தோய்ந்த வாழ்க்கையை வேரோடும் வேரடி மண்ணோடும் காட்டும் கதைகள் தொகுதிகளாக்கப்பட்டு உலாவரத் தொடங்கியிருக்கும். இன்றைய கால கட்டத்தில் வருகிற பத்திரிகைக் கதைகள், குறிப்பாக பன்பாலா, சிவனு மனோகரன், பிரமிளா செல்வராசன் எழுதுகின்ற சிறுகதைகள் மலையகப் பகுதியில் காணப்படும் தன்மைகளைக் கதை இலக்கிய வடிவில் வெளிப்படுத்தும் அவசியத்தை உணர்ந்துள்ளவையாக இருக்கின்றன. தோட்டமக்களின் வரலாறு, தோட்ட மக்களின் பிரச்சனைகள், அம்மக்களைப் பாதிக்கும் விடயங்கள், அந்தப் பிரச்சனைகள் ஏற்படுத்துகிற சிந்தனைப் போக்கு ஆகியவற்றை இணைத்துத் தம் படைப்புகளில் தருவதைக் காணுகிறோம்.

இந்த முயற்சியில் மலையகத்தில் பயிலும் சொற்களை தம் படைப்புகளில், பாத்திரப்படைப்புகளில், அவர்களின் செயற்பாடுகளில் வைத்து வெற்றிகரமாக எழுதி வருபவர்களில் ஒருவராக சிவனு மனோகரன் விளங்குகிறார். அவரது சமீபத்தைய சிறு கதைகள் சில பரிசுக்குரியவைகளாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன; லண்டனில் வெளிவரும் பத்திரிக்கைகளில் அவை பிரசுரமாகின்றன.

இலங்கை இலக்கிய வட்டம் இந்த ஆண்டு தமது "கனக செந்தில்நாதன்" விருதுக்கு பன்பாலா எழுதி வீரகேசரி 14.01.2007 இதழில் வெளியான "பெரியவன்" சிறுகதையைத் தெரிவு செய்திருப்பது பாராட்டத்தக்க விடயம்.

இயற்கையும் சமூகமும் சதா இயங்கிக் கொண்டே இருக்கின்றன; சதா முரண்பாடுகளும், மோதல்களும் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. இந்த அசைவுகளை, முரண்பாடுகளை, மோதல்களைக் கூறுவதாக (தேநீர் நாவலில் டி. செல்வராஜ்) நமது இலக்கியம் அமைய வேண்டும்.

இன்றைய நமது இளைய எழுத்துலகப்பிரமாக்கள் சாதிப்பார்கள் என்று நாம் நம்பலாம்.

**-சாரல் நாடன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதக் கலையின் பெருமையும், ஆலய இசையும், நாட்டார் இசையும்

ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் மக்களின் இதயம் கவரும் இன்பக்கலையே இசைக்கலையாகும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பைந்தமிழில் பண்ணிசை பாடி இன்புற்றவர்களே தமிழர்களேயாவர். இவர்கள் பண்படுத்திய பண்ணிசையே காலவோட்டத்தில் தென்னிந்தியா எங்கும் பரவியது. கர்நாடக இசை என அழைக்கப் பெற்றது. செவிக்கு இன்பத்தைத் தரும் த்வனிகளைப் பற்றிய கலையாகும். இதுவே சிறந்த கலைகளில் (Fine Arts) ஒன்று சிறந்த கலைகளில் சங்கீதம் மிக்க மேன்மையான கலையாகும். இதுவே (Genteel of the fine arts) மனிதர்கள், மிருகங்கள், பண்டிதர்கள், பாமரர்கள், விருத்தர்கள், பாலர்கள் ஆகிய எல்லோருக்கும் இன்பத்தைத் தரக் கூடியது.

சங்கீதமானது கீதம், வாத்தியம், நிருத்தியம் என்ற மூன்றும் சேர்ந்தது. இவைகளில் கீதம் என்பது வாய்ப்பாட்டு, வாத்தியட் வாசிக்கக் கூடியதும், நிருத்தியம் நாட்டியத்தைச் சோந்த இசையையும் குறிக்கும். சங்கீதத்தை பயிலுவதினால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி முதலிய நற்குணங்கள் விருத்தியாகின்றன. மேலும் புத்திக்கூர்மை, கற்பனாசக்தி, ஞாபகசக்தி, நல்லொழுக்கம் என்பன விருத்தியாகின்றன. பல தேசத்து மக்களை ஒருங்கு சேர்க்கக்கூடிய கூடிய சக்தி இசைக்குண்டு. உலக ஐக்கிய பாவத்தை (World Consciousness) உண்டாகும் சக்தி இசைக்குண்டு. அகம்பாவம் (Arrogance ego) என்னும் துர்க்குணத்தை ஒழிக்கக் கூடிய சக்தி இசைக்கு இருக்கிறது. இசையைக் கற்பதினால் ஒருவருக்கு அழகான வசீகர முகவெட்டும், கவர்ச்சிகரமான தோற்றமும், தேஜஸும் உண்டாகும் என்பது நான் கண்ட அனுபவம். இசை ஒரு நிகரற்ற கலை (Perfect arts) எனலாம். சங்கீதத்திற்கு காந்தர்வ வேதம் என்று பெயர். காந்தர்வ வேதம் நான்கு உபதேசங்களில் ஒன்று. கடவுளை வழிபாடு செய்வதற்கும் கடவுளை அறிவதற்கும் ஒரு முக்கிய சாதனமாகும். இக்காரணம் பற்றியே சங்கீதம் ஒரு வித்தையெனப் பெரியோர்கள் கூறுவார்கள். இசை என்பது ஒரு சிரவண கலையாகும். காதால் கேட்டு இன்பம் பெறக்கூடிய கலையாகும். தேனையும் பாலையும் விரும்புவதைப் போல் எல்லோரும் இசையை விரும்புவார்கள். கானம் செய்யும் போதும், கானத்தைக் கேட்கும் போதும், மக்கள் யாவரும் இவ்வுலக கவலைகளை மறந்து இன்பமடையச் செய்ய இசை முக்கிய காரணமாக விளங்குகிறது. நான் கடமை புரியும் சென். கப்றியல் மகளிர் வித்தியாலயத்தில் வகுப்பில் பாடிக்கொண்டு இருக்கும்போது பல தடவைகள் பாம்புகள் வருவதும், போவதும், படமெடுத்தாடுவதும் 93 95 ம் ஆண்டு காலப்பகுதியில் காணக்கூடியதாக இருந்தது. எல்லாவித ஜீவராசிகளுக்கும் இசை பிரியமானது என்பது திண்ணம். இசைக்கேட்கும் கால் நாங்கள் மெய் மறந்து இன்பக் கடலில் மூழ்குவதுடன், தெய்வீக உலகத்தில் உலாவுகின்றோம் என்கின்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம். இத்தகைய அரிய அனுபவம் சங்கீதத்திற்கே உரித்துடையது. மனிதனுடைய துர்க்குணங்களை போக்கி, சற்குணங்களைப் பெருக்கி, அவனை ஒரு முழு மனிதனாக்கி, ஜனசமூகத்திற்கு ஒழுங்கானவனாக ஆகக்கூடிய சக்தி இசைக்கு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின் பண்பாட்டைக்காட்டுவதும் அந்த நாட்டின் நுண்கலைகளிலே தங்கியுள்ளது. கலை வளம் நிறைந்த எந்நாடும் மற்றைய வளங்கள் இருப்பினும் சுபீட்சமாக இருக்க முடியாது. இதுவே பல அறிஞர்கள் கண்ட உண்மை. இசை இசையினால் தான் அகிம்சாதர்மம், சமாதானம், சாந்தி நிலை, சமயம் போன்ற யாவும் ஒருங்கே வளர முடியும். சகல ஜீவராசிகளும் கேட்டு இன்பமடைகின்றன. இசையைக் கேட்டு உருகாதார் உலகில் இருப்பினும், அவர்கள் வெறும் நடமாடும் உருவங்களே ஒழிய, பகுத்தறிவாளராகக் கருதப்படமாட்டார்கள். பூரண கல்விக்கு இசை இன்றியமையாதது. சிறந்த கல்வி வளர்ச்சிக்கு ஏதுவானது. பாட விதானத்தில் இல்லாத ஒரு மகிழ்வூட்டும் முக்கிய தினங்களில் மட்டும் இசைக்கு முக்கியத்துவம் அளிப்பதும், மற்றப் பாடம் மாதிரி சங்கீதத்தைக் கருதி விளையாட்டுப் போட்டி, கதம்பவிழா பெற்றோர் தினம், ஆசிரியர் தினம், தமிழதினம் போன்ற முக்கிய தினங்களில் முக்கியத்தவம் அளிப்பதுவும், சங்கீதம் என்பது கல்விக் கோபுரத்துக்கு ஒரு மூலைக்கல் போன்றதாகும்.

கல்தோன்றா மண்தோன்றாக் காலங்களிலே இசைகள் உற்பத்தியாகியுள்ளன. எடுத்துக்காட்டாக ஒவ்வொரு தெய்வங்களின் அபயவங்களிலும் காணப்படும் இசைக்கருவிகளே உதாரணமாகும். இசையை இசைத்தமிழாகப் போற்றுகிறார்கள். இசைத்தமிழ் இசைக்கலைஞர்கள் குழல், யாழ் போன்ற கருவிகளில் வாசிப்பது இசை ஓதுவார் பாடும் தேவாரப்பாடல் இசைத் தமிழ் போன்ற தமிழுக்கு ஆரம்பத்தில் இடமுண்டு. இசைத்தமிழ் பாடல் செந்துறை எனப்படும். இசையின் நூல்களை நரம்பின் மறை என்றும் கூறப்படுகின்றது. இதுக்கு எடுத்துக்காட்டாக அன்பு இறந்து உயிர்த்தலும், ஒன்று இசை நீடலும் உளமென மொழிய இசையோடு சிவனிய நரம்பின் மறைய என்பனார் புலவர்.

(தொல்காப்பியம்)

விந்திய மலைக்கும் தென் கடலுக்கும் இடையிலுள்ள தென்னாட்டார் பாட்டிலும் பல இசைக் கருவிகளைக் வாசிப்பதிலும், கூத்திலும் மிகத் திறமை வாய்ந்தவர்களுள் சாரங்கத்தவராவர். 13ம் நூற்றாண்டில் சங்கீத ரத்னாகரம் என்னும் இசை நூலை எழுதினார். ஓதுவார்கள் பண்கள் பாடிபோது "தேவாரவர்த்தினி" என்று ஒரு ராகம் பெயர் பெற்றிருப்பதே இதற்குச் சான்றாகும். சங்கீதத்திற்கு பெருமை தேடித்தந்த பிதாமகா புரந்ரதாசர் அப்பியாசகான உருப்படிகள் சபாகான உருப்படிகளை சுலபமான முறையில் தமிழில் பாடக் கூடிய முறையிலும் தந்திருக்கிறார். நாகரீகம் முற்பட்ட காலத்தில் பல்வகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் பலவகை இசை நுட்பங்களை அறிந்திருந்தனர். கற்கோயில், மரக்கோயில்களின் முன்னிலையில் பரந்து வாழ்ந்த மக்கள் பலவித பலவகை பாடல்களைப் பாடியும், வாத்தியங்களில் மீட்டியும், பரவச நிலையில் ஆடியும் பக்தியை இறைவனுக்குச் செலுத்தினர்.

"துன்புரு நாரதர் வீணை யாழ் வாசிக்க
தொம் தொம் என நந்தி மத்தளம் கொட்ட"

என்பதற்கமைய ஓவிய சிற்பங்களை ஆலயங்களில் நிறுவினர். ஆலயங்களும் இசையும் பற்றிப் பார்க்கும் போதும் யாழ் வாசிப்போர், மங்கள வாத்தியம் வாசிப்போர், ஓதுவார் ஆகியோர் இசையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரிகளில் இசையுணர்வு பற்றிய நுட்பமான உண்மை ஒன்று உணரப்படுகின்றது. பாடுகிறவர் ஒரு கேள்வியில் உணர்வு கலந்து பாடிக்கொண்டு இருக்கும் போது அவ்வொலியைச் சிதைக்கும் எந்த வேற்று ஒலியும் பாடல்கருக்கு எரிச்சலையே உண்டாக்கும் காரணமாக அதனால் கேள்விக்குரிய நரம்பொலி கலந்துவிடும் என்பதே. பண்ணுடன் பாடப்படும் இசைப்பாடல்களைப் பற்றிய நுண்ணிய கருத்துக்கள் என்றும் மனதில் இருக்க வேண்டியவை. மீன்களும் பாடும் ஓசை வயலின் (நரம்பின் மெல்லிய ஓசை என குறிப்பிடுகிறார் "இலங்கை" என்ற நூலில் பாடும் மீனைப் பற்றி ஆய்வாளராகிய Lord Holden என்பவர்.

சாமவேதத்திலிருந்து தோன்றியதாகக் கூறப்படும் கர்நாடக சங்கீதம் தவழ்ந்து குறுநடை பயின்று இன்று மிகவும் உன்னத ஸ்தானத்தைப் பெறுகின்றது. காலத்துக்குகாலம் எத்தனையோ சங்கித வித்துவான்கள், வாககேயககாரர்கள் உருவாகி இருக்கின்றார்கள. (உ+ம்: தாஸ்ய, வாத்ஸல்ய, ஸாக்ய, மாதுர்ய) இவை மதுர பக்திக்கும் தலைவன், தலைவி பாவத்துக்கும் முக்கியம் அளிக்கின்றது. சங்கீதத்தின் மதுர பாவமானது காதல் பக்தி மேல் ஆழமானது. புலவர்களின் இதயத்திலிருந்து பெருகுவது, ஞானிகளும், பக்திகளும் அன்பே இறைவனை அடைய வழி என்று என்றும் உணர்ந்துள்ளார். புலவர்களும் கவிஞர்களும் கடவுளிடமுள்ள காதலை மதுரபாவமாக வடித்துள்ளனர். இறைவன் முன் ஆணும், பெண்ணும் ஒன்றே. கடவுள் மாத்திரமே ஆண். மற்றைய அனைவரும் பெண்களே. "புருஷோத்தம்" இதுவே மதுரபாவத்தின் ஸாரம் "இராவணன் இசையினால் சாமகானம் பாடி இறைவனின் அருளைப் பெற்றான். இசை என்றால் மனிதனை இசைய வைப்பது என்பது பொருள். இறைவனின் இசை பிம்பங்களாக சகல உயிரினங்களையும் தன்பால் கவர்ந்திழுப்பது இசையாகும்.

ஆரம்பத்தில் தாலாட்டில் தொடங்கி வாழ்க்கை முடிவில் ஒப்பாரி வரை, வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் நம்முடன் இரண்டறக் கலந்தது இசை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாடப்படும் இசை அல்லது பாடல்களில் இராகங்கள் ஒவ்வொரு உணர்வை வெளிப்படுத்துகிறது. "அமிர்தவர்ஷனி இராகத்தில் ஆனந்தமிருதவர்ஷனி எனும் கிருதியை முத்துஸ்வாமி தீக்ஷிதர் பாடியதால் மழை உடனேயே பெய்யத் தொடங்கியது. அப்பரின் சமஸ்தானத்தை அலங்கரித்ததால் "சேள்தீபக்" இராகத்தைப் பாடி அரச சபையில் உள்ள விளக்குகளை தீப்பற்ற வைத்ததாக கூறப்படுகிறது.

கல்யாணி களிப்புடன் கூடிய கம்பீரத்தையும் தர வல்லது.
காம்போஜி விளைநிலமாக விளங்குகின்றது.
மோகனம் - தெய்வீக உணர்வை உணர்த்துகின்றது.
நாட்டை ஆலயங்களில் மல்லாரி வாசிக்கப்படுகின்றது.
முகாரி பிரிவாற்றல், ஏக்கத்தை உண்டு பண்ணும்.
சஹானா மேகத்தை திரளவைக்கும் தன்மை வாய்ந்தது.
மேகரஞ்சனி திரண்ட மேகத்தை மழையாகப் பொழியச் செய்யும்.
புன்னாக வராளி பாம்பை படமெடுத்து ஆடவைக்கும்.
நீலாம்பரி உறக்கத்திற்கு நம்மை இழுத்துச் செல்வது.
ஆனந்தபைரவி - இரத்தக் கொதிப்பை போக்கவல்லது.
ஹிந்தோளம் - வாத நோயை நீக்கும்.
பைரவி - ஷய ரோகத்தை நீக்கும்.
ரஹரப்ரியா பசியை மறக்கச் செய்யும்.

ஒவ்வொரு ராகங்களும் ஒவ்வொரு நிகழ்வை வெளிப்படுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் இறைவனோடு லயிக்கின்ற இடம் ஆலயமாகும். இசை. பக்தி ஒன்பது வகைப்படும். இறைவன் புகழ்பாடும் கீர்த்தனமும் அடங்கும். இறைவனோடு நம்மை இசைவிப்பது இசை. ஆலயங்கள் இசை வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளன. ஆலயங்களில் காணப்படும் சிற்பங்கள், அதிரும் கற்கள், ஓவியங்கள், கற்தூண்கள், கல்வெட்டுக்கள், நாயன்மார்களால், ஆழ்வார்களால் பாடப்பட்ட பாசுரங்கள் என்பவற்றின் வாயிலாக, இசை ஆலயங்களில் வளர்ச்சியுற்றமையும், ஆலயங்களில் வாசிக்கப்படும் இசைக் கருவிகள் பற்றியும் அறியக் கூடியதாகவள்ளது. பல மண்டபங்களும், இசை மண்டபம், வாத்திய மண்டபம், வீணை மண்டபம், நிருத்திய மண்டபம் ஆகியன அடங்கும். ஆலயங்களில் கலைகளுக்கு கொடுக்கப்பட்ட சிறப்பிடத்தை அறியக் கூடியதாகவுள்ளது. திருக்கோயில்களின் தளவாட அறிக்கைகளின் வாயிலாக அக்கோயில்களில் இருந்த இசைக்கருவிகளைப் பற்றி அறிய வந்தது. திருவாரூர் தியாகேசர் கோயிலில் 18 இசைக்கருவிகளுண்டு. கற்றூணகளைக் தட்டினால் இசைகள் ஒலிக்கும். படிக்கட்டுகளிலே காலை வைத்தால் ஸப்தஸ்வரங்கள் ஸரிகமபதநி என்ற ஒலிகள் சத்தம் கேட்கும். ஆலயங்களிலே முதன் முதல் மாணவர்கள் கல்வி கற்றார்கள். இசையும் நடனமும் உற்சவ காலங்களில் முக்கிய இடம் வகிக்கின்றன. கணபதி நிருத்தம், புஜங்க லலிதா நிருத்தம், கௌத்துவம் போன்ற இசை வடிவங்களைப் பார்க்கவும் இசையைக் கேட்கவும் கூடியதாகவும் உள்ளன.

பாரத நாட்டில் இசைக்கலை புனித கலையாகவே போற்றப்படுகின்றது. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே என்றும்" "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்றும் பாட்டிசைத்து ஓம் எனும் நாதப்பிரம்மமாக இறைவனை இசை வடிவமாக்க கண்டார்கள் சைவசமயக் குரவர்கள். 7ம் 8ம் நூற்றாண்டில் இசை எழுச்சிக்காலம் எனலாம். சம்பந்தர் பண்ணோடு பாடுவதற்கு பக்திமய தேவாரங்களை அருளி பண்ணோடு பாடும் படியும் இசை அமைத்தும், மேலும் பல அற்புதங்களையும் செய்தார். சுந்தரர் தமிழோடு "இசை கேட்கும் இச்சை இருக்க வேண்டும் என்றும் ஒலி கொள் இன்னிசை செந்தமிழ்" சிறப்பித்தும் பல அற்புதங்களை வியக்கும் நோக்கில் அருளியிருக்கிறார். அப்பரும் "ஒலி கொள் இன்னிசை உணர்வு மிக்கவர்" என்பதைப் பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறும் இசைப் பக்தர்கள் எனக் கூறுவதிலிருந்து அறியலாம். மாணிக்கவாசகர் உருகாதார் மனம் உருகும் படி திருவாகம் புராணம் நனி சொட்டச் சொட்ட உள்ளம் உருக உள் ஒளி பெருக பாடியிருக்கிறார். இவரின் கருணையினால் நான் திருவாசகம் பாடும் போது எனது கணவர் ஆனந்த சயனத்தில் உறங்குவார் இது உண்மை.ஏழு இசை நரம்புகளுக்கு (சுரம்) அலகுகள் வளர்த்திருக்கிறார்கள். ஆம் மெல்லிய இசை உணர்வு உடையவர்களே குரல் (ஸட்சம்) அளி (பஞ்சமம்) இவை இரண்டின் நட்பு நிலையைத் துல்லியமாக உணர்ந்து கொள்ள முடியும். குரல் இளிகளின் ஓசையை ஒன்றுசேர்த்து உணரும் செவியினைப் பெறாதவர்கள் பாடல்களைப் பாடமுடியாது. அப்படி பாடினாலும் கேள்வியில் (சுருதியில்) சேராமல் போகும். சேராத பாட்டில் சுகமில்லை என்பது வழக்கு.

"தானம் போயின் தாளம் போயின் கூளம் கூளம் கூளம்" என்றார் பாரதியார். குரல் இளிகளின் ஒலி நிலைய்யை உள்ளபடி உணர்ந்தாலன்று அவற்றை அடி மனையாகக் கொண்டு பிறக்கும் மற்றைய ஐந்து நரம்புகளின் ஒலி நிலைகளைத் துல்லியமாக உணரமுடியாது. இந்த உணர்ச்சி பயிற்சியினால் மட்டும் அடையக்கூடியது அன்று இயல்பாகவும் அமைந்திருக்க வேண்டும். "அல்லி தன்னிலே பஞ்சுரம் பாகும் தமிழ் இசை உயர்வென்று சொல்லி தவளை இரைச்சல் குயிலுக்குத் தொல்லை தருவது கண்டு சிரிக்கும் வெண்முல்லை."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநல விருத்திக்கு இசை ஆற்றும் பங்கை நோக்கும் போது மருந்தாக கொள்ளலாம். எல்லா ராகங்களுக்கும் ஒவ்வொரு செயல்களுண்டு. பண்டைக் காலத்தில் பண்ணோடு தேவாரங்களைப் பாடி நாயன்மார்கள் எவ்வளவோ அற்புதங்களை செய்திருக்கிறார்கள். அதில் சில, சம்பந்தர் ''மந்திரமாவது நீறு'' எனும் பதிகத்தைப் பாடி பாண்டியன் வெப்புநோயைத் தீர்த்தார். அப்பரின் சூலை நோயைத் தீர்க்க அப்பரே ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' எனும் பதிகம் பாடி நோயை நீக்கினார். சங்க இலக்கியங்களிலும் இசையின் மூலம் மதங்கொண்ட யானையை அடக்கியமையும், வழிப்பறிக் கள்வர்களையும் மயக்கியமையும் குறிப்பிடத்தக்கது. இறந்த உயிர்களை உயிர்ப்பித்தல் போன்ற செயல்கள் நடந்தன. இசையினால் எதனையும் சாதிக்கலாம். மனவளர்ச்சி குன்றியவர்களையும், நோயினால் பீடிக்கப்பட்டவர்களையும் இசையினால் குணப்படுத்தலாம். முதியோர் இல்லங்களில் இசை நிகழ்ச்சிகள் மூலம் அவர்களுக்கு புத்துணர்ச்சியையும் மன அமைதியையும் ஏற்படுத்தலாம். எமது இசை இறைத்தன்மை வாய்ந்தது, இராகங்கள் ஒவ்வொன்றும் தேவதைகளாக காணப்படுகின்றது; கருதப்படுகின்றது.

## நாட்டார் இயல்

நாட்டில் உண்மையான வாழ்க்கைநெறியை அறிந்துகொள்ள அம்மக்கள் வாழும் பகுதிக்கு செல்லவேண்டும். அதுபோல் பரம்பரை பரம்பரையாக தனித்துவமான முறையில், நாகரீக கலப்பற்ற வகையில் கல்லாத பாமர மக்களால் அம்மக்கள் இடையே வழங்கும் எழுதா கவிதையை நாட்டார் பாடல்கள் என்போம். இம்மக்களால் பிறப்பு முதல் இறப்பு வரையும் மக்களின் இன்ப துன்பங்கள், தொழில்முறைகள், வாழ்க்கை நடைமுறைகள், நம்பிக்கைகள் முதலானவற்றைக் கொண்டுள்ளது. பிறக்கும் போது மருத்துவச்சி வாழ்த்து பாடுகின்றாள். அன்னை தாலாட்டு பாடுகின்றாள். அமுது ஊட்டும்போதும் விளையாட்டு காட்டும்போது விளையாட்டு பாடலாகவும் பயன்படுகின்றது. வளர்ந்து உலக வாழ்க்கையில் ஈடுபடும்போது காதல் பாட்டாகவும். தொழில் புரியும்போது தொழில் பாட்டாகவும் (கொழுந்தெடுத்தல், வயல் வேலை, மீன்பிடித்தல், வீட்டுவேலை) எனப் பல வகைப்படுகின்றது. சடங்கு, கோயில், கூத்து இப்படி தொடர்கிறது. இறந்த பின்னர் மக்கள் பெருமை கூறும் ஒப்பாரி பாடல்கள். இப்படி வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் பின்னிப்பிணைந்துள்ளதுடன் மன உணர்ச்சிகளை வெளிக்கொணரவும் செய்கிறது. உணர்வுகளை ஊட்டுவதுடன் நகைச்சுவை, அழுகை, மருட்கை, அச்சம், பெருமிதம், நடுநிலைமை போன்றவற்றை நேரில் காண்பது போன்ற உணர்வை ஊட்டவல்ல தன்மையுடையது. குழந்தை பிறந்தவுடன் மருத்துவச்சியானவள் வாழ்த்தும் முறையாக பின்வரும் பாடல் அமைந்துள்ளது. அவள் வாழ்த்துவது பிள்ளையை மட்டுமல்லாது சமூகத்தையும் மகிழ்வித்து பாடுகிறாள்.

''அயலும் புடையும் வாழ(வும்) வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ(வும்) வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ(வும்) வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ(வும்) வேண்டும்'' (தமிழன்னல் 1966)

இப்படி தொடர்கிறது பாடல்.

தாலாட்டும் போதும்:- ஆராராரோ ஆரிவரோ......

பச்சை இலுப்பை வெட்டி
பால் வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலுமோ பொன்னாலே
தொழு கயிறோ முத்தாலே - ஆராராரோ ஆரிவரோ......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்கு திருமணம் பேசப்படுகிறது. அவள் தன் கணவனைப் பற்றி அறிய விரும்பி, விசாரிக்கிறாள். தோழி நகைச்சுவையாக பதில் சொல்லுகிறாள்.

"கச்சான் அடித்த பின்பு காட்டில் மரம் நின்றது போல்
உச்சியிலே நாலுமயிர் ஓரமெல்லாம் தான் வழுக்கை"

எத்தனை நகைச்சுவையாக இருக்கிறது. காற்றடித்து ஓய்ந்த பின் மரத்திலுள்ள பூக்கள், இலைகள், காய்களெல்லாம் உதிர்ந்து வெறும் மரமாக நிற்பது போல் உவமித்து கூறுகிறாள்.

இதுபோல் காதலில் காதலன் பாடுவதிலும், காதலி பாடுவதிலும் வித்தியாசம் காணப்படுகிறது.

ஆண்:- "தண்ணீர் குடமெடுத்து! தனிவழி போற பெண்ணே
தண்ணீர் குடத்தினுள்ளே! தளம்புது என் மனசு"

பெண்:- "ஓடையிலே போற தண்ணி! தும்பி விழும்; தூசி விழும்
வீட்டிற்கு வாங்க மச்சான்! வெந்த தண்ணி நான் தாறேன்." என்பது பெண்ணின் மனோவியல்பு. இவற்றிற்கு கூட ஒரு இசைவடிவம் உண்டு. இதுபோல் மலையகப் பாடல்:-

"கூடை மேலே கூடை வைச்சு வைச்சு குப்பதுக்கு போற பெண்ணே
குப்பத்துல பேஞ்ச மழை என் கண்ணே ரத்தினமே உன்
கூடை நனையலயே என் பெண்ணே ரத்தினமே.
மத்தங்காய் புல்லு வெட்டி மலையோரம் போற பெண்ணே
மலைமேல் பேஞ்ச மழை கண்ணே ரத்தினமே.....

எமது சகோதரிகள் நாட்டிற்காக பாடுபட்டு மலையக நாட்டார் பாடல், தொழிலாளர் புலப்பெயர்ச்சி பற்றியதையும், தொழில் ரீதியான நிலையையும் எடுத்துக்காட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"தேயிலை ரப்பரும் நட்டு வச்சோம் - இந்த
தேசம் வளம்பெற நாம் உழைச்சோம் - ஒரு
நாயும் மறக்காது நன்றி மச்சான் - இந்த
நாட்டு மனுசங்க மறந்துவிட்டாங்க." என்பதாகும்.

கஷ்ட நிலைக்கு தள்ளப்பட்டோம் என்பதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

"வாடை அடிக்குதடி வட காத்து வீசுதடி
செந்நெல் அடிக்குதடி - நாம் சேர்ந்து வந்த கப்பலிலே
எண்ணி குழிவெட்டி - இடுப்பொடிஞ்சி நிக்கயிலே
வெட்டு வெட்டு என்கிறாரே பொட்டு வச்ச கங்காணி"

"ஊரான ஊர் இழந்தேன்
ஒத்த பனைத் தோப்பிழந்தேன்
பாரான கண்டியிலே
பெற்ற தாயும் வீடிழந்தேன்."

இவ்வாறாக மலையக நாட்டார் பாடல்களில் மக்களின் மன உணர்வுகள் அனைவரையும் கவரும் முறையில் இலகுவான நடையில் அமைந்துள்ளது.

---

இம்மைக்கும், மறுமைக்கும் எம்மைக்கும் இறைவனை அடைவதற்கும் இவ்வுல வாழ்க்கைக்கும் புவியில் அமைதி நிலவுவதற்கும் ஒப்பற்ற துணையாயிருப்பது இசை பிரியனின் ஐந்து எழுத்து மந்திரமே. (நற்சிந்தனை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திரு. பாரதி ராமசாமி (சமூகப்பணி)


திரு. வீ. முகுந்தன் (சமூகப்பணி)


திரு. சுப்ரமணியம் ராசு (சமூகப்பணி)


திரு. சி. கிருஸ்ணமூர்த்தி (சமூகப்பணி)


நா.லி. மோகன் (சமூகப்பணி)


திரு. கந்தசாமி பாலசுப்ரமணியம் (தொழில்தருனர்)

திரு. கே. இராமநாதன் (தொழில்தருனர்)

திரு. டீ.கே.டப்ளியூ. வீரதுங்க (தொழில்தருனர்)


திரு. எஸ். முருகையா (தொழில்சங்கவாதி)

திரு. பீ.கே.எம். இராஜமணி (தொழில்சங்கவாதி)

திரு. எஸ். காளிதாஸ் (கலைத்துறை)

திரு. சூரியகுமார் வீ. முத்தழகு (கலைத்துறை)


திரு. ஜேக்கப் பிரான்ஸிஸ் (கலைத்துறை)

திரு. கிருஷ்ணப்பிள்ளை சண்முகராஜா (ஆன்மீகம்)

திரு. சண்முகம் சந்திரசேகர் (ஆன்மீகம்)


திரு. பாலா சங்குப்பிள்ளை (சிறுகதை)


திரு. செ. தமிழ்செல்வன் (நாவல்)

திரு. சி.ஏ. எலியாசன் (மரபுக்கவிதை)

திரு. சாரல் நாடன் (இலக்கிய ஆய்வு)


திரு. சித்தி சண்முகநாதன் (நாவல்) வெளிமாவட்டம்


திரு. கனிவுமதி (புதுக்கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக முத்து




லயத்தில் பிறந்த ஒரு முத்து
தொழிலாளி வயிற்றில் உதித்த ஒரு சொத்து
மலையகத் தொழிலாளர்களுக்கு கிடைத்த ஒரு வித்து
மலையக கல்வி மேம்பாட்டிற்கு அவர் ஒரு கண்ணாகும்
மலைய கலை இலக்கிய வளர்ச்சிக்கு அவர் ஒரு கண்ணாடியாகும்
தமிழ், சிங்கள, ஆங்கில மேடை பேச்சில் அவர் ஒரு அருவி
பண்பில் அவர் ஒரு சிகரம்
எளிமையில் அவர் ஒரு சின்னம்
அமைதியில் அவர் ஒரு இருப்பிடம்
சிரித்த முகம் அனைவரையும் கவர்ந்திடும் பேச்சு
எல்லோரையும் கட்டி அணைத்துச்
செயலாற்றும் பண்பு
அத்தனைக்கும் சொந்தக்காரர்

**எஸ். அருள்சாமி**

கண்டி இரா.அ. இராமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண சாகித்திய விழா - 2007
## ஹட்டன்

**சாகித்திய விருது பெறுபவர்களின் விபரம்**

### 1. கல்வித்துறை

1. திரு. ஜீ. போல் அன்ரனி - பிரதி ஆணையாளர்
2. திருமதி. எஸ்.வீ.கே. இராஜலிங்கம், வலயக் கல்விப்பணிப்பாளர். ஹட்டன்
3. திரு. எம். ரெங்கராஜ், மேலதிக கல்விப் பணிப்பாளர், 78/19, பன்சலை வீதி, ஹட்டன்.
4. திரு. செல்வராஜ், சப்ரகமுவ மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர், இரத்தினபுரி.
5. திரு. ஏ. சுந்தரலிங்கம், உதவிக் கல்விப் பணிப்பாளர், பீட்ரு எஸ்டேட், நுவரெலியா.
6. திரு. கலாநிதி. பீ. சரவணகுமார், பேராதெனிய பல்கலைக் கழகம், பேராதெனிய.
7. திரு. என். பாலசுந்தரம், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஹட்டன்.
8. திரு. டி. ஆர். செல்வராஜ், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.
9. திரு. எம். செல்வராஜ், உப அதிபர், கொட்டகலை த.ம.வி., கொட்டகலை.
10. திரு. டீ. செல்வராஜ், ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி, பத்தனை.

### 2. இலக்கியத்துறை

11. திரு. டி.கே. பிள்ளை, 60, சர்குலர் வீதி, ஹட்டன்.
12. திரு. இராம பரமேஸ்வரன், சட்டன் தமிழ் வித்தியாலயம், அக்கரப்பத்தனை.
13. திரு. துரை விஸ்வநாதன், ராஜ் பிரசாத், 85, வூல்பண்டால் வீதி, கொழும்பு.
14. திரு. மு. சிவலிங்கம், 56, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை.
15. திரு. ஆர். சிவலிங்கம், 608/16, மெயின் வீதி, மாத்தளை.

### 3. ஊடகத்துறை

16. திரு. எஸ். பீ. சாமி, தலைவர், தினக்குரல் நிறுவனம்
17. திரு. எஸ. துரைசாமி, 160, மெயின் வீதி, மஸ்கெலியா.
18. திரு. என். நெடுஞ்செழியன், சென்ட்கிளையர் கொலனி, அட்டன் ரோடு, தலவாக்கலை.
19. திரு. சீ.டி. பெருமாள், 185, மெயின் வீதி, மஸ்கெலியா.
20. திரு. வி.கே. முத்துலிங்கம், 60, மெயின் வீதி, பத்தனை.
21. திரு. லோரன்ஸ் செல்வநாயகம், லேன் ஹவுஸ், கொழும்பு - 10.
22. திரு. முருகேசு குலேந்திரன், நிகழ்ச்சி அபிவிருத்தி அதிகாரி, செனல் "ஐ", இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்.

### 4. சமூகப்பணி

23. திரு. எம்.ஏ.எஸ். அபுசாலி, அல்லா பிச்சைக்கம்பனி ஹட்டன் / டிக்கோயா நகரசபை முன்னால் தலைவர், டிக்கோயா.
24. திரு. நாகலிங்கம் இரத்தினசபாபதி மோகன், 101, கொழும்பு வீதி, கண்டி.
25. திரு. கோவிந்தசாமி புஸ்பலிங்கம், பலகொல்ல, கண்டி.
26. திரு. பாரதி இராமசாமி, பதுளை
27. திரு. வீ. முகுந்தன், 18-1/2, சைட் வீதி, ஹட்டன்.
28. திரு. வீ. சுப்ரமணியம் இராசு, சென் ரெகுலர்ஸ் டிவிசன், ஹெனபோல்ட், லிந்துல.
29. திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, செயலாளர், மத்திய மாகாண இந்து இளைஞர் மன்றம், கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. தொழில் தருனர்கள்

30. திரு.டி.கே. டப்ளியூ. வீரதுங்க, ப்லாஸ்டிக் தொழிற்சாலை, திம்புள்ள வீதி, ஹட்டன்.
31. திரு. கந்தசாமி பாலசுப்ரமணியம், நாமகள் டெக்ஸ்டையில், மெயின் வீதி, ஹட்டன்.
32. திரு. கே. இராமநாதன், அம்பிகா ஜுவலர்ஸ், மெயின் வீதி, ஹட்டன்.
33. திரு. இராஜேந்திரன், குட்லக் எம்போரியம், ஹட்டன்.

## 6. தொழிற் சங்கவாதிகள்

34. திரு. பி.பே.எம். இராஜமணி, வீடமைப்புத்திட்டம், பத்தனை.
35. திரு. எஸ். முருகையா, 36, தொலொஸ்பாகே ரோடு, பின்வழி, நாவலப்பிட்டி.

## 7. கலைத்துறை

36. திரு. எஸ். காளிதாஸ், கியு தோட்டம், பொகவந்தலாவ.
37. திரு. சண்முகம் சந்திரசேகரன்பிள்ளை, தலைவர், ஏழுமுக காளியம்மன் கோவில், களுதாவலை, மாத்தளை.
38. திரு. சூரியகுமார், வீ. முத்தழகு, ஒளிக்கீற்று, கொழும்பு.

## 8. ஆன்மீகம்

39. திரு. கிருஷ்ணப்பிள்ளை சண்முகராஜா, 31/A, மாதேவத்த லேன், மாத்தளை.

## 9. ஆக்கம்

**சிறுகதை**

40. ஓர் உன்னதத் தமிழனின் கதை - ஆசிரியர் பாலா சங்குப்பிள்ளை

**நாவல்**

41. அணையாத தீபங்கள் - செ. தமிழ்செல்வன்

**கவிதை (மரபுக் கவிதை)**

42. லயக்கோடி - சி.ஏ. எலியாசன்

**இலக்கிய ஆய்வு**

43. புதிய இலக்கிய உலகம் - சாரல்நாடான்

**வெளி மாவட்டம்**

**நாவல்**

44. காலப் பறவைகள் - சித்தி சண்முகநாதன்

**கவிதை புதுக் கவிதை**

45. கட்டாந்தரை - கனிவுமதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சாதனையாளர்களுக்கான விருது

**மத்திய மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் அனைத்திலும்**
**க.பொ.த (உ/த) பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும் பாடமும்**

| பெயர் | பாடம் | பாடசாலை |
|---|---|---|
| M.நிசங்கபிரசாத் | உயிரியல் | நு/ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் |
| R.ரேவதி | உயிரியல் | நு/ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் |
| S.காயத்ரி | இணைந்த கணிதம் | நு/ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் |
| S.சுரேஷ்குமார் | அரசியல் விஞ்ஞானம் | நு/புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா |
| A.M.பிரியதர்ஷினி | இந்து சமயம் | மா/ரத்தோட்டை இந்து மகா வித்தியாலயம், ரத்தோட்டை |
| G.பிரியா | இந்து சமயம் | மா/ரத்தோட்டை இந்து மகா வித்தியாலயம், ரத்தோட்டை |
| K.தணேஷா | இந்து சமயம் | மா/ரத்தோட்டை இந்து மகா வித்தியாலயம், ரத்தோட்டை |
| S.ஜெயமலர் | இந்து சமயம் | மா/ரத்தோட்டை இந்து மகா வித்தியாலயம், ரத்தோட்டை |
| M.ரொஷானி | இந்து நாகரிகம் | நு/தலவாக்கலை தமிழ் வித்தியாலயம், தலவாக்கலை |
| R.சாந்தி | கர்நாடக சங்கீதம் | கம்/ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை |

**மத்திய மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் அனைத்திலும்**
**க.பொ.த (சா/த) பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும் பாடமும்**

| பெயர் | பாடம் | பாடசாலை |
|---|---|---|
| ஸ்டெல்லாராணி நவமணி | கிறிஸ்தவம் | புனித நல்லாயன் மகளிர் பாடசாலை, நுவரெலியா |
| A.,V.S.மேரி ஜெஸ்மின் | தமிழ்மொழியும் இலக்கியமும் | கதிரேசன் வித்தியாலயம், நாவலப்பிட்டிய |
| S.அருண்பிரசாத் | விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை |
| E.உஷாந்தனி | விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை |
| T.நெடுஞ்செழியன் | வீட்டுத் தோட்டத் தொழில்நுட்பவியல் | சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், லிந்துலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| S.கிருஷாந்த | வீட்டுத் தோட்டத் தொழில்நுட்பவியல் | சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், லிந்துலை |
| A.லலிதாம்பிகை | நடனம்(பரதம்) | புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா |
| S.பிரஷாந்தி | சங்கீதம்(கர்நாடகம்) | ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை |
| S.ரவீந்திரகுமார | நாடகமும் அரங்கியலும் | கேர்கஸ்வோல்ட் இல.2 தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவை |
| V.ஆறுமுகம் | விவசாய விஞ்ஞானம் | டன்சினன் இல1, தமிழ் வித்தியாலயம், பூண்டுலோயா |
| S.அருண்பிரசாத் | விவசாய விஞ்ஞானம் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை |
| A.லலிதாம்பிகை | விவசாய விஞ்ஞானம் | புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா |
| R.தேவகுமார் | விவசாய விஞ்ஞானம் | புனித ஜோன் பொஸ்கோ தமிழ் மகா வித்தியாலயம், ஹட்டன் |
| M.I.F.நிஸ்ரின் | மனைப் பொருளியல் | ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம், அட்டபாகை |

**மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் கீழான பாடசாலைகள் அனைத்திலும் க.பொ.த (சா/த) 2006 பரீட்சையில் அதிகூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விபரம்**

| பெயர் | பாடசாலை | இடம் |
|---|---|---|
| செல்வேந்திரன் அருண்பிரசாத் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை | 1 |
| எட்டிக்கன் உஷாந்தனி | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை | 2 |
| கணபதி மயூரன் | ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் | 3 |

**மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் கீழான பாடசாலைகள் அனைத்திலும் க.பொ.த (உ/த) 2006 பரீட்சையில் பிரிவு ரீதியாக அதிகூடிய இஸற்(Z) புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விபரம்**

| பெயர் | பிரிவு | பாடசாலை | இடம் |
|---|---|---|---|
| K.ஜதீஸ்வரன் | உயிரியல் விஞ்ஞானம் | புனித சேவியர் கல்லூரி, நுவரெலியா | 1 |
| R.ரேவதி | உயிரியல் விஞ்ஞானம் | ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் | 2 |
| S.சத்தியராம் | பௌதீக விஞ்ஞானம் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை | 1 |
| D.ஹிந்துஜா | பௌதீக விஞ்ஞானம் | ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் | 2 |
| G.கிஷோகுமார் | பௌதீக விஞ்ஞானம் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை | 3 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் கீழான பாடசாலைகள் அனைத்திலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007 இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விபரம்**

| பெயர் | பாடசாலை |
|---|---|
| S.சிவராமன் | ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, கலகா |
| N.சிவநாதன் | புனித எம் மாதா வித்தியாலயம், நுவரெலியா |
| A.சதுஸா ஜனனி | புனித பத்திரிசியார் கல்லூரி தலவாக்கலை |
| S.ராகவேந்தன் | தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை |
| M.மிதுன் ராகுல் | ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் |
| S.தனுஜன் | ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, கலகா |
| C.அரவிந்தராஜா | ஹை பொரஸ்ட் இல.3, தமிழ் வித்தியாலயம் |
| K.துவாரகன் | புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம், பொகவந்தலாவை |

**மத்திய மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் அனைத்திலும் க.பொ.த (உ/த) 2006 பரீட்சையில் முதன்மைப் பெறுபேறுகளை பெற்றுத் தந்த ஆசிரியர்களும் கற்பித்த பாடமும்**

| பாடம் | பாடசாலை | ஆசிரியர் |
|---|---|---|
| உயிரியல் | நு/ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் | திரு.M.வசந்தகுமார் |
| இணைந்த கணிதம் | நு/ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் | திரு.K.ஜீவராஜன் |
| அரசியல் விஞ்ஞானம் | நு/புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா | திரு.P.கிருஷ்ணசாமி |
| இந்து சமயம் | மா/ரத்தோட்டை இந்து மகா வித்தியாலயம், ரத்தோட்டை | செல்வி.P.சுபாஷினி |
| இந்து நாகரிகம் | நு/தலவாக்கலை தமிழ் வித்தியாலயம், தலவாக்கலை | திருமதி.A.மகேஸ்வரி |
| கர்நாடக சங்கீதம் | கம்/ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை | செல்வி.M.சோதிலிங்கம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்திய மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் அனைத்திலும் க.பொ.த (சா/த) 2006 பரீட்சையில் முதன்மைப் பெறுபேறுகளை பெற்றுத் தந்த ஆசிரியர்களும் கற்பித்த பாடமும்**

| ஆசிரியர் | பாடம் | பாடசாலை |
|---|---|---|
| செல்வி.R.ராஜகுமாரி | தமிழ்மொழியும் இலக்கியமும் | கதிரேசன் வித்தியாலயம், நாவலப்பிட்டிய |
| செல்வி.சாந்தி லோகநாதன் | விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை |
| செல்வி.சாநதி லோகநாதன் | விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை |
| திரு.P.பத்மநாதன் | வீட்டுத் தோட்டத் தொழில்நுட்பவியல் | லிந்துலை தமிழ் மகா வித்தியாலயம், லிந்துலை |
| செல்வி.K.நளாயினி | நடனம்(பரதம்) | புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா |
| செல்வி.M.சோதிலிங்கம் | சங்கீதம்(கர்நாடகம்) | ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை |
| செல்வி.A.ஜெகன்தாசன் | நாடகமும் அரங்கியலும் | கேர்கஸ்வோல்ட் இல.2 தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவை |
| திரு.A.சந்திரகுமார் | விவசாய விஞ்ஞானம் | டன்சினன் இல1, தமிழ் வித்தியாலயம், பூண்டுலோயா |
| திரு.K.சுப்பிரமணியம் | விவசாய விஞ்ஞானம் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை |
| திரு.M.முருகநாதன் | விவசாய விஞ்ஞானம் | புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா |
| திரு.P.செல்வகுமாரன் | விவசாய விஞ்ஞானம் | புனித ஜோன் பொஸ்கோ தமிழ் மகா வித்தியாலயம், ஹட்டன் |
| திருமதி.A.H.M.பொர்சோனா | மனைப் பொருளியல் | ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம், அட்டபாகை |
| | கிறிஸ்தவம் | புனித நல்லாயன் மகளிர் பாடசாலை, நுவரெலியா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் கீழான பாடசாலைகள் அனைத்திலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007 இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விபரம்**

| பெயர் | பாடசாலை |
|---|---|
| S.சிவராமன் | ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, கலகா |
| N.சிவநாதன் | புனித எம் மாதா வித்தியாலயம், நுவரெலியா |
| A.சதுஸா ஜனனி | புனித பத்திரிசியார் கல்லூரி தலவாக்கலை |
| S.ராகவேந்தன் | தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை |
| M.மிதுன் ராகுல் | ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் |
| S.தனுஜன் | ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, கலகா |
| C.அரவிந்தராஜா | ஹை பொரஸ்ட் இல.3, தமிழ் வித்தியாலயம் |
| K.துவாரகன் | புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம், போகவந்தலாவை |

**மத்திய மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் அனைத்திலும் க.பொ.த (உ/த) 2006 பரீட்சையில் முதன்மைப் பெறுபேறுகளை பெற்றுத் தந்த ஆசிரியர்களும் கற்பித்த பாடமும்**

| பாடம் | பாடசாலை | ஆசிரியர் |
|---|---|---|
| உயிரியல் | நு/ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் | திரு.M.வசந்தகுமார் |
| இணைந்த கணிதம் | நு/ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் | திரு.K.ஜீவராஜன் |
| அரசியல் விஞ்ஞானம் | நு/புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா | திரு.P.கிருஷ்ணசாமி |
| இந்து சமயம் | மா/ரத்தோட்டை இந்து மகா வித்தியாலயம், ரத்தோட்டை | செல்வி.P.சுபாஷினி |
| இந்து நாகரிகம் | நு/தலவாக்கலை தமிழ் வித்தியாலயம், தலவாக்கலை | திருமதி.A.மகேஸ்வரி |
| கர்நாடக சங்கீதம் | கம்/ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை | செல்வி.M.சோதிலிங்கம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**மத்திய மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் அனைத்திலும் க.பொ.த (சா/த) 2006 பரீட்சையில் முதன்மைப் பெறுபேறுகளை பெற்றுத் தந்த ஆசிரியர்களும் கற்பித்த பாடமும்**

| ஆசிரியர் | பாடம் | பாடசாலை |
|---|---|---|
| செல்வி.R.ராஜகுமாரி | தமிழ்மொழியும் இலக்கியமும் | கதிரேசன் வித்தியாலயம், நாவலப்பிட்டிய |
| செல்வி.சாந்தி லோகநாதன் | விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை |
| செல்வி.சாந்தி லோகநாதன் | விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை |
| திரு.P.பத்மநாதன் | வீட்டுத் தோட்டத் தொழில்நுட்பவியல் | லிந்துலை தமிழ் மகா வித்தியாலயம், லிந்துலை |
| செல்வி.K.நளாயினி | நடனம்(பரதம்) | புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா |
| செல்வி.M.சோதிலிங்கம் | சங்கீதம்(கர்நாடகம்) | ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை |
| செல்வி.A.ஜெகன்தாசன் | நாடகமும் அரங்கியலும் | கேர்கஸ்வோல்ட் இல.2 தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவை |
| திரு.A.சந்திரகுமார் | விவசாய விஞ்ஞானம் | டன்சினன் இல1, தமிழ் வித்தியாலயம், பூண்டுலோயா |
| திரு.K.சுப்பிரமணியம் | விவசாய விஞ்ஞானம் | கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை |
| திரு.M.முருகநாதன் | விவசாய விஞ்ஞானம் | புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா |
| திரு.P.செல்வகுமாரன் | விவசாய விஞ்ஞானம் | புனித ஜோன் பொஸ்கோ தமிழ் மகா வித்தியாலயம், ஹட்டன் |
| திருமதி.A.H.M.பொர்சோனா | மனைப் பொருளியல் | ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம், அட்டபாகை |
| | கிறிஸ்தவம் | புனித நல்லாயன் மகளிர் பாடசாலை, நுவரெலியா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் கீழான பாடசாலைகள் அனைத்திலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007 இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் விபரம்**

| பெயர் | பாடசாலை | இடம் |
|---|---|---|
| செல்வி.ரிஸ்மியா பேகம் | ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, கலகா | 1 |
| செல்வி.K.பரமேஸ்வரி | புனித எம் மாதா வித்தியாலயம், நுவரெலியா | 2 |
| செல்வி.M.பிரபா | புனித பத்திரிசியார் கல்லூரி தலவாக்கலை | 3 |
| திரு.A.ராஜேந்திரன் | தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை | 4 |
| | ஹைலன்ஸ் கல்லூரி, அட்டன் | 5 |
| செல்வி.S.மலர்விழி | ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, கலகா | 6 |
| | ஹை பொரஸ்ட் இல.3, தமிழ் வித்தியாலயம் | 7 |
| திருமதி.K.கரும்பு | புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம், பொகவந்தலாவை | 8 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஆற்றின் அழுகை

நான் கொன்றை மலர்
சூடிக் கொண்ட
சிவன் முடியில்
குடிக்கொண்ட கங்கையல்ல

உழைக்கும்
மலை மக்களின்
வியர்வையையும்
செங்குருதியையும்
சுமந்தோடும் ஆறு

மலை உடம்பின்
நரம்பருவின் - எனக்குள்
சங்கமிப்பதால்
மேல் கொத்மலை
ஆறாக பெயர்க் கொண்டேன்

என் சலசலப்பு
எனக்கே சங்கீதம்
என் துள்ளோட்டம்
எனக்கு மெருகேற்றும்
வாலைக் குமரிப்பருவம்

தொட்டென்னனைத் தினம்
முத்தமிட்டு விளையாடும்
கரையோர
மூங்கிலும் நாணலும் - என்
தோழர்கள் தான்

கரையிலிருந்து
துள்ளி என் மடியில்
குதித்து நீந்தி நீராடும் போது
உமக்கெல்லாம்
தயாகி விடுகிறேன் நான்

கழிவுகளை சுமந்தும்
சுழிகளை மறைத்தும்
அமைதியாய் நான்
நடக்கையில் - பொறுமைமிகு
குடும்பப் பெண்ணாகிறேன்
ஆனால்,

தன்னுயிர் போக்க
என்மடி விழுந்து மடிவதும்
தடுமாறி என்னுள் சிலர்
விழுந்தாவி விடுவதாலும்
சபிக்கப்படுகிறேன் பேயாறு என்று

என் வழி நின்று எதிராய்
மறிக்கும் பாறைகளை
நானெதிர்த்து முன்னேறி
பாய்ந்தோடுகையில்
நானும் போராளி தான்

இருந்தும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் சுதந்திரம்
இன்றடக்கப்படும் நிலைக்கு
நான் ஆளாகி விட்டேன்
கால் கட்டு மாந்தருக்கு
மட்டுமல்ல ஆற்றுக்கும் தான்

என் நடைப்பாதை இங்கு
திசை மாற்றப்படுகிறது
சூரிய ஒளியில்
பொன் நதியாய் - மின்னி
ஓடிக் கொண்டிருப்பவள் நான்

ஆனால்

நீண்ட நெடும்
குகைப் பாதை - எனக்காக
அந்நிய நதியில்
மின் உற்பத்தி பெயரில்
நிர்மாணிக்கப்படுகிறதே!

என் உணர்வுகள்
உணர்ச்சிகள்
அடக்கப்பட்டு
நீண்ட நெடும் - இருப்
பாதையில் இனி என் பயணம்
அதில் வலிய நான்
புறப்படமாட்டேன் - ஆனால்
புகுத்தப்படுகின்றேன்

கரையோர பசுமைகளை
காணாத குருடியாய் - என்
குகைப் பயணம் தொடரும்

ஆனந்தக் கூத்தாடி
என் மடியில் தவழ்ந்து
நீராடும் ஜீவன்களை - அதில்
என்னால் இனியும்
காணவே முடியாது

ஆனந்த கங்கையாய்
அழகாய் வீழ்ந்து
நுங்கும் நுரையுமாக
ஆர்ப்பரித்தோடும் என்
ஆனந்தம் முடமாகி விட்டது

ஆற்றை மறித்து
அணைப்போட விடமாட்டோம்
குரல் எழுப்பியவரில் சிலர் ஆதாயம் பெருக்க
காட்டிக் கொடுத்ததால் - நான்
இருள் வழியில் நடக்கும்
நதியாகி விட்டேன்

ஊர் அழும் கண்ணீர்
என்னோடு மிதந்து வர
நான் விடும் கண்ணீரை
யார் இங்கு அறிவார்?

சுற்றத்தை சொந்தத்தை
பிரிந்தவளாய் - ஒரு
இருட்டுப்பாதை எனக்காக
ஏன் இங்கு?

மல்லிகை சி. குமார்
பெரிய மல்லிகைப் பூ
தலவாக்கலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது வெல்லும்...?

என்னை கொஞ்சம்
அனுமதி
அமைதி சொரூபம்
அகிம்சை அணுகல்
இவைகளை மிஞ்சி
உனக்கு
என்னை விட
யார் உசாத்துணையாயிருப்பர்?

வெட்டவெளி
சனநெருக்கம்
குடிகளின் இருப்பிடம்
குழந்தைகளின் முற்றம்
இவைகளை குறிபார்க்கும்
உனதான செயல்களுக்கு
சர்வதேச சந்தையில்
உயர் மதிப்பெண்ணாய்
உன்னையே வைக்கின்றேன் !

அறிவுக் களஞ்சியங்களின்
கருக்கட்டல்களினால்
இவ்விழிவுக் கணங்கள்
இயைபாக்கமாய் !...

உயர் பக்க சுவர்கள்
குடிசையின் முறிவுண்ட
மூங்கில்கள்,
உனதின் உரசல்களுக்கு
இருபக்க மத்தளமாய்

உனதின்
பன்முக வேடந்தாங்களால்
இவ் வையமும்
கொஞ்சமாய் ~ என்னை
கெஞ்சி நிற்கிறது !

என் சிறகின்
எனது விறைப்பின்
உணர்வுச் சிதறலின்
உள்ளார்ந்த உந்துதலை
உசுப்பி விட்டுள்ளேன்

உனது உரிமைகளை
துகிலுரிப்பதற்காக ...!
நீ பயங்கரம்
நான் அமைதி
நான் அகிம்சை
நீ போர்

உனது வேகம்
எனது விவேகம்
உனது ஆளுமை
எனது ஆற்றல்
எது வெல்லும்
அது தர்மம் !

மாரிமுத்து சிவகுமார்
அட்டன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதையல்ல விருட்சம்

கர்ப்பபையில்
காதல் விதையை - மூச்சால்
தூவியவள்
தன் மூச்சை எனக்கு
முகவரியாக்கியவள்

என்னை
சிலை செய்ய - தன்னை
உளியாக்கி என்னை
செதிக்கிய தாயே
உனைப்போல ஒரு சிற்பியை
நான் - இதுவரை
கண்டதில்லை

சுட்டெரிக்கும்
வெயிலிலும் - கொட்டுகின்ற
பனியிலும்
தேயிலை கொழுந்தோடு
என்னை - அடிவயிற்றில்
சுமந்து ....
பூப்போல பெற்றெடுத்தாயே

உன் குருதியின்
பாதியை எனக்கு பாலாக்கி
மீதியை - அடிக்கின்ற
அடை மழையிலும் அட்டைக்கு
உணவளித்தாயே
இங்குதான் - அந்த அமுத சுரப்பி கூட
அர்த்தமற்று விட்டதாய்
உணருகின்றேன்...

குமரியான பின்பும்
உன்னிடம் மட்டும்
குழந்தையாகின்றேன் - பலமுறை
மழலையில் உழருகின்றேன்
அம்மா - உன்
முத்துவிதழ் எனக்கு
முத்தங்கள் பகிர்க்கையில்
நான் - மொட்டுக்கள்
விரிக்கின்றேன் - இதனால்
பலமுறை மோட்சத்தை
தொடுகின்றேன் ...

ரோஜா பூவாய்
நானிருந்தால் முட்களாய் மாறி
என்னை காவல் செய்வாயே
தவறி கூட - என்
இதழ்கள் உன்னில் வீழ்ந்தால்
உனக்குள் - நீயே
கண்ணீர் சொறிவாயே ...

அம்மா - உன்
அன்பு என்னும் முத்துளியில்
மூழ்கிக் கிடக்கும் நான்
எத்தனை முறை முயற்சித்தும்
உன் அளவுக்கு
அன்பு செலுத்த முடியாமல்
தோற்றுப்போகின்றேன்...

எத்தனை
நிறப்பூச்சுக்கள் பூசினாலும்
கொழுந்து கறைப்படிந்த
உன் கைகளின்
சொற சொறப்பு மாற மறுக்கின்றது
ஆனால் - நீ
இந்த சொற சொறப்பு
கைகளோடு என்னை
அரவணைக்கும் நொடிகளில்
தேவதைகள் எனை
ஆசீர்வதிக்கும் ஆனந்தத்தை
அனுபவிக்கின்றேன்...

வறுமை
உன்னை - பள்ளிக்கூட
தெருவில் கூட
நடைபோட ஒப்புக்கொள்ளாத
போதும் ...
என்னை கல்விமானாய்
தரம் உயர்த்த
உன்னை தேயிலைக்கு
உரமாக்கிக் கொள்கிறாயே...
அம்மா - நான்
அதிஸ்டசாலி
உன் வயிற்றில் பிறந்ததால்

என்றேனும்
நாட்கூலி உயருமா...
என போராடி போராடி ...
தோற்றுப்போன பின்னும்
நான் - வெற்றிகளை தொட
உன்னை
எரித்து எரித்து
மெழுகுவர்த்தி போல - எனக்கு
ஒளியாகிறாய்

நான்
மடியும் போதும்
தாயே - உன் மஞ்சம்
வேண்டுமென்று தினமும்
இறைவனை
கேட்கின்றேன்...!

**MS. K. சுகுனா**
மிடில்டன் எஸ்டேட்
லோகி டிவிசன்
தலவாக்கலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலை நாடிதோ...

தண்டிளங் தேயிலைத் தோப்பினிலே - கரம்
　　தாளமும் போடகைக் காப்பினிலே!
வணடினம் மொய்ப்பது கூந்தலிலே - ஆடைக்
　　கொண்டதை மூடி மறைத்து விட்டாய்
வண்டினம் மொய்ப்பது எவ்விடமோ - அதை
　　மூடி மறைப்பது தப்பிதமே!
நுண்துளி வெண்பனி மேகங்களும் - இட்ட
　　நூலிழை ஆனதோர் ஆடைகளோ!

கூடையும் கொஞ்சுது மெல்லிடையில் - அவள்
　　ஆடி நடந்திட மென்னடையில்
ஓடுதே நெஞ்சமோ பின்னாலே - மெல்ல
　　மின்னொளி வீசினால் கண்ணாலே!
ஓடை புனலெழு குன்றினிலே - மெல்ல
　　ஆடி நடந்தவள் சென்றனளே!
பாடுங் குயிலினம் நெஞ்சலையில் - அவை
　　பாடிக் களிப்பதில் வஞ்சமில்லை!

காதலால் ஒன்றிய நெஞ்சனிலே - நறுங்
　　காவியம் ஆகிடும் பாடலுண்டே!
வேதனை விம்மலும் கொஞ்சமுண்டு - அந்த
　　வேதனை விம்மலை நெஞ்சமொண்டு
வேதமாய் மாற்றிடும் வாழ்வு கண்டோர் - இந்த
　　வாழ்வினில் தேவதை ஆனவரே!
சீதனத் தென்றலும் தோத்தரிக்கும் - அந்தத்
　　தேகம் சிலிர்த்திட தேன் துளிர்க்கும் !

வித்தையுள் வித்தையாம் வேல் விழியில் - அதை
　　வைத்துச் சுழற்றிடும் போதினிலே
எத்தனை பாடமோ கற்றறிந்தான் - அவன்
　　எத்தனை இன்பமோ பெற்றுணர்ந்தான்!
முத்தினை ஒத்ததாம் புன்சிரிப்பு - அதை
　　வீசி நடக்கையில் தேன் துளிர்ப்பு!
அத்தை மகளிவள் என்றாலும் - விடை
　　ஆரத் தழுவிடக் கேட்டிருந்தான்!

கைத்தலம் பற்றிடக் கல்யாணம் - வேறு
　　கன்னியர் மீதுனக் காசையுண்டோ?
சித்திரப் பாவையே உன்னையின்றி - என்
　　சிந்தையில் வேறென ஒன்றுமில்லை!

எத்தனை சத்தியம் செய்தாலும் - உன்னை
　　நம்பிட நெஞ்சம் துணிவதில்லை!
நித்தமும் மாலையில் வேலைவிட்டே - நீ
　　செல்வது எவ்விடம் சொல்லிடுவாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு சந்தம்)

உன்னை நினைப்பதின்றி - வேறு
        என்ன மனதெனக்கு - வேறு
கன்னி எவளேனும் - என்
        நெஞ்சில் புகுவதுண்டோ - எந்தன்
கன்னற் தமிழ்தேனே - உன்னைக்
        காணும் சுவையாலே - நான்
என்னை மறந்ததுண்டு - வேறு
        ஏளனம் நானறியேன் !

என்றவன் தானுரைக்க - நீ
        எத்தனை சொன்னாலும் - ஓர்
குன்றைப் பெயர்த்தெடுத்தே - அதைக்
        குப்புற வைத்தாலும் - நித்தம்
சென்று வருவதெங்கே - மாலை
        பொழுதென வந்தவுடன் - எதிரே
நின்றவள் கேட்டிருக்க - இவனோ
        முற்றும் தவிப்படைந்தான்!

மாய மதுவினிலே - மாலை
        சாயும் பொழுதினிலே - நித்தம்
போயே விழுவதென்ன - உந்தன்
        சாயம் வெளுத்தேக - தெரு
நாயினும் கேடாகி - உந்தன்
        வாயினில் வந்ததெல்லாம் - பெற்றத்
தாயவள் முன்பாக - முற்றும்
        பேயெனக் கொட்டி வைப்பாய்!

ஆடும் இளமையிலே - இன்பம்
        கூடும் பொழுதினிலே - மது
வாடை சுகந்தருமோ - உன்னைக்
        கூடி சகிர்த்திடவோ - மது
பீடை உளமட்டும் - என்னைத்
        தேடி சுகம் பெறவோ - நான்
நாடி உனைவரவோ - அது
        கூடா தெனவுரைதடதாள்!

வெட்கமோ பட்டடைந்தேன் - பெருந்
        துக்கமோ கொண்டடைந்தேன் - மது
பக்கமோ செல்வதில்லை - குப்பை
        சக்கையில் சாரெடுத்து - அதை
வெட்கமின்றிக் குடிக்க - அந்தப்
        பக்கமோ போவதில்லை - எனக்கே
தக்கவை சொல்லி வைத்தாய் - என்னைத்
        தாயெனக் காத்தணைத்தாய்!

ஆடலும் பாடலுமாய் - ஓர்
        ஊடலும் கூடலுமாய் - பசி
வாடலில் தேன் சுவையாய் - குளிர்
        வாடையில் கம்பளியாய் - மது
பீடையை வென்றெடுக்க - காதல்
        கேடயம் கையேந்த - விழி
சாடையில் தேன்சுரக்கும் - மலை
        நாடிதும் வாழ்ந்திருக்கும்!

**எலியாசன்**
பிளக்பூல்
நுவரெலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையா, காதலா?

பாலா சங்குப்பிள்ளை

செல்வி - கூட்டமில்லாத ரயிலில் ஏறினாள். யன்னல் பக்கமாக இருக்கையில் அமர்ந்தாள். தூரத்திலிருந்த அந்தப் பெரிய ஆலமரத்திலிருந்து சில குருவிகள் கீச் கீச் என சத்தமிட்டுக் கொண்டிருந்தன.

யாரோ ஒரு பிச்சைக்காரக் கிழவன் அலுமினியத்தட்டுடன் தட்டுத் தடுமாறி நடந்து வந்தான். செல்வி அவனை யன்னல் பக்கமாக அழைத்து இருபது ரூபாய் நோட்டொன்றைத் தட்டிலே போட அவன் ஆச்சரியத்துடன் வாய் பிளந்தவாறு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது விசில் சத்தம் கேட்கவே ரயில் மெதுவாக நகரத் தொடங்கியது. அவள் நீண்டதொரு பெருமூச்சை விட்டவாறு ரயில் இருக்கையில் சாய்ந்து கொண்டாள்.

"செல்வி"... நான் கட்டிக் காத்த இந்த கலை என்னுடனேயே போயிடப் போகுதா... என் சாவுக்கப்புறம் என்னுடனேயே மண்ணோட மண்ணாகப் போயிடப் போகுதா? எனக்குப் பேரு வச்ச எங்கப்பாவை விட எனக்கு பேரும் புகழும் தேடித்தந்த இந்த கலை என்னோட தொலைந்து போயிடப் போகுதா. ஐயோ வாரிசு இல்லாமல் போறேனே. என் கட்டை வேகுமா ...?"

செல்வி சட்டெனப் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். கைப்பையிலிருந்த அந்த மங்கிப்போன பழைய புகைப்படத்தை எடுத்தாள். அதில் முறுக்கி விடப்பட்ட மீசையுடன் கம்பீரமாக இருந்தார் செல்வியின் தாத்தா வீரபாண்டியன். தன் கடைசி மூச்சு வரை தான் கற்ற கலைக்காகவே வாழ்ந்தவர்.

"செல்வி" நல்லா யோசிச்சுப்பாரு ... நான் உன் மேலே வச்சிருக்கிறது புனிதமான அன்பு. நம்மோட இந்தப் புனித உறவு பார்த்தேன், சிரித்தேன் என்று வந்ததில்லை. படிப்படியாகப் பலமான அஸ்திவாரத்தோட உருவானது தான் இந்த காதல் கோட்டை.

என்னைக் கைவிட மாட்டீங்கள் தானே என்று நீ அடிக்கடி கேட்பாய். ஆனால் இப்போ நம்ம காதலே கை நழுவிப் போய் விடுமா என்று எனக்குக் கவலையா இருக்கு. தோட்டத்துச் செம்மண்ணிலே விழுந்த மழை நீரைப்போல போல இறுக்கமா இருந்த நம்ம காதலை இன்றோட முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று சுருக்கமாகச் சொல்லிட்டியே. இது கடவுளுக்கே அடுக்குமா ..."

ரயில் குலுக்கலுடன் ஏதோவொரு ரயில் நிலையத்தில் நிற்கவே சட்டென சுயநினைவுக்கு வந்தவள், கைப்பையிலிருந்த அந்தச் சிறிய தண்ணீர்ப் போத்தலை எடுத்தாள். தண்ணீரை மெதுவாகப் பருகினாள். ரயில் மறுபடியும் புறப்படத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்க பாரு செல்வி - உன்னைக் கஷ்டப்பட்டுப் படிக்க வச்சது நான். நான் சொல்ற படிதான் நீ கேட்கவேணும். உன் தாத்தா பேச்சைக் கேட்டுக்கிட்டு கரகாட்டம் அது இது என்று அலைஞ்சியோ எனக்கு கெட்ட கோபம் வரும். எங்கப்பன் அந்த காலத்தில் தோட்டத்து வேலை வெட்டி என்று பார்க்காம வேஷம் கட்டிக்கிட்டு ஊர் ஊராக ஆடப் போனாரு. வெறும் பேரும் புகழும் கிடைச்சதேயொழிய பெரிசாக் காசு பணம் கிடைக்கல்ல. அன்றைக்குக் கஷ்டப்பட்டு வேலை செஞ்சிருந்தா இன்றைக்கி பிராவிடம் பண்ட் அது இது என்று கை நிறைய வந்திருக்கும். வயசான காலத்துல வயித்துப் பசி இல்லாம இருந்திருக்கலாம். ஆனா தான் கெட்டதுமில்லாமல் டீச்சர் தொழில் செய்யிற உனக்கும் கரகாட்டம் அது இது என்று சொல்லிக் கொடுத்து உன்னையும் கூத்தாட வைத்து எனது மானத்தை வாங்கிக் கொண்டிருக்காரு. வலை வீசி மீன் பிடிக்கிற மாதிரி உனக்கு வீண் ஆசைக்காட்டி உன்னோட எதிர்காலத்தையே சூனியமாக்கப் பாக்கிறாரு. நான் தோட்டத்தில் வேலை செய்யிற சாதாரணத் தொழிலாளிதான். ஆனா, அதுக்காக என் கௌரவத்தை இழக்க முடியாது. என் பேச்சை கேட்காமல் உன் தாத்தாவோட பேச்சைக் கேட்டு ஆடுறதா இருந்தா அப்புறம் உன் அப்பன் கண்ணுசாமி சும்மா இருக்க மாட்டன் ..."

"டிக்கட் ... டிக்கட் ..."

செல்வி ரயில் பிரயாணச் சீட்டை எடுத்துப் பரிசோதகரிடம் கொடுத்தாள். அவர் அதைப் பார்த்துவிட்டு அவளிடமே கொடுக்க, செல்வி மறுபடியும் கண்களை மெதுவாக மூடினாள்.

"செல்வி ... உன் அப்பன் உன்னை அதிகமாகத் திட்டி விட்டானா ? அவன் அப்படித் தான் எதுக்கெடுத்தாலும் கத்துவான். ஆனால் ரொம்ப நல்லவன். அவனுக்கு இந்தக் கூத்தாடுற விஷயமெல்லாம் புடிக்காது. செல்வி, உனக்குத் தெரியுமா இந்த கரகாட்டம், காவடியைக் கத்துக்கிறதுக்காக சின்ன வயசுல எவ்வளவு கஷ்டப்பட்டேன். என்னோட வயசுப் பசங்க கொய்யாப்பழம் பறிக்கிறதுக்காக ஓடுவாங்க. ஆனா நான் வெறுங்காலோட கல்லுப்பாறையில் காவடி ஆடுவேன். பதினாறு வயசில மத்தவனுக்கெல்லாம் மீசை முளைச்சிச்சு, ஆனா, எனக்கு மட்டும் கரகாட்டம் மேலத்தான் ஆசை அதிகமாயிடுச்சி. திருவிழான்னு வந்துட்டா எனக்கு மரியாதை செஞ்சி தோட்டம் தோட்டமா என்னை அழைச்சிக் கூட்டம் கூட்டமா நின்று என் ஆட்டத்தை ரசிப்பாங்க. என் பேரு எல்லாத் தோட்டத்துலயும் பிரபல்யமாயிரிச்சி. டவுன் திருவிழா என்றால் கூட என்னத்தான் கூப்பிடுவாங்க. நிறையப் பணம் கிடைக்கும். சந்தோஷத்தில மனம் துள்ளும், கரகாட்டக் கும்பம் தலைக்கு ஏறிவிட்டா எனக்கு பசி தாகம் எதுவுமே இருக்காது. என்னோட இந்தக் கலையை நான் உயிரா நினைச்சேன். என்னோட ஆட்டத்தைப் பார்த்து மயங்கித்தான் உன் பாட்டி பார்வதி என்னைக் கட்டிக்கிட்டா. உன் அப்பனை அருமை பெருமையா வளர்த்தேன். அஞ்சாம் வகுப்போட அவனுக்குப் படிப்பு ஏறலை.

கரகாட்டக்காரன் மகன் என்று பெருமையாச் சொல்றதும் அவனுக்குப் பிடிக்கலை. ஆனா, ஆடாம என்னால இருக்க முடியலை. என்னைச் சாடாம இருக்க அவனாலும் இருக்க முடியலை. வயசு போகப் போக என்னால சரியா ஆட முடியலை. எனக்கப்புறம் இந்தக் கலை அழியாமல் இருக்க ஒரு வாரிசு தேவையா இருந்திச்சி.

எந்நேரமும் தாத்தா தாத்தா என்று என்னையே நீ சுத்திச் சுத்தி வந்தே. உன் அப்பனுக்குத் தெரியாம சின்ன வயசிலேயே என் வித்தையை உனக்குச் சொல்லிக் குடுத்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொம்ம றொம்ப சீக்கிரமா இந்தக் கலையை கத்துக்கிட்டே. படிக்கிற காலத்துல பாடசாலை கலை நிகழ்ச்சிகளில் நான் கத்துக் கெடுத்த வித்தையை சரியாச் செஞ்சி பரிசுகளை குவிச்சே. எனக்கு எவ்வளவு பெருமையா, சந்தோசமா இருந்திச்சி தெரியுமா? என் வித்தைக்குச் சரியான வாரிசு கிடைச்சாச்சின்னு மகிழ்ச்சி அடைஞ்சேன். ... ஆனா ... உனக்குன்னு கல்யாணம் காட்சின்னு வந்துட்டா அப்புறம் இந்த வித்தையோட நிலைமை என்ன என்று யோசிக்கிறப்போதான் எனக்குக் கவலையா இருக்கு..."

ரயில் மறுபடியும் ஏதோ ஓர் இடத்தில் நின்றது. இன்னமும் அவள் இறங்க வேண்டிய இடம் வரவில்லை. எவ்வளவு காலத்துக்குப் பின் அவள் தான் பிறந்த மண்ணில் காலடி வைக்கப் போகிறாள். ரயில் மறுபடியும் புறப்படத் தொடங்கியது.

"செல்வி உங்களால எங்கப் பாடசாலைக்கே பெருமை கிடைச்சிருக்கு. பின்தங்கிய இந்தப் பாடசாலை இப்போ எல்லோருக்குமே தெரிய வந்திருக்கு. நான் மூனுவருஷமா இந்தப் பாடசாலையில் அதிபரா இருக்கேன். என்னால செய்ய முடியாததை நீங்க செஞ்சி முடிச்சிட்டீங்க. டீச்சர்..."

"ஐயையோ பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க சேர். இதுல நான் பெரிசா எதுவும் செஞ்சிடலை. நீங்க ஊக்கப்படுத்தினீங்க. எனக்குத் தெரிஞ்சதைச் சொல்லிக் கொடுத்து பிள்ளைகளை உற்சாகப்படுத்தினேன் ... அவ்வளவு தான் ...

"அப்படியில்லை டீச்சர் ... தமிழ்த்தினப் போட்டியில் நம்ம பாடசாலை அகில இலங்கை ரீதியில கரகாட்டத்துல முதலிடத்துக்கு வந்திருக்கு. வித்தை சரியாத் தெரிஞ்சதால தான் நமக்கு முதலிடம் கிடைச்சிருக்குது. கரகாட்டத்தைப் பத்தி நீங்க றொம்ப நல்லாத் தெரிஞ்சிவச்சிருக்கீங்க. எந்தக் காரணம் கொண்டும் இதை நிறுத்திடாதீங்க. தொடர்ந்து நீங்க மற்ற மாணவர்களுக்கும் இதை சொல்லிக் குடுக்கனும். உங்களால அழிவு நிலையிலிருக்கிற இந்தக் கலை வளரனும் இது தான் என்னோட ஆசை ..."

செல்வி சட்டென்று கண் திறந்தாள். தோற்பையிலிருந்த அந்தப் புகைப்படத்தை வெளியே எடுத்தாள். அதில் செல்வியின் பக்கத்தில் அரும்பு மீசையுடன் குறும்புப் பார்வையுமாக செழியன் நின்றிருந்தான். செல்வி அந்தப் புகைப்படத்தையே சற்று நேரம் உற்றுப் பார்த்தாள். அவள் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகிறது. செழியன் செழியன் என அவள் வாய் முனுமுனுத்தது ...

"செழியன் என்னை மன்னிச்சிடுங்க ... நீங்க என் மேலே உயிரையே வச்சிருக்கிறது உண்மைதான். ஆனா, என்ன செய்யிறது, எனக்குக் காதலும் வேணும், என் தாத்தாவோட கலையும் வளரனும். றெண்டு கண்ணுல எந்தக் கண்ணு வேணும்னு கேட்டா நான் என்ன சொல்லுவேன். நீங்க உண்டு, உங்க ஆசிரியர் தொழிலுண்டு என்று இருந்தீங்க. நான் தான் உங்கள் கவனத்தைத் திசை திருப்பினேன். சுத்தமாயிருந்த உங்க மனசுல அழுத்தமாகக் காதலைக் பதிய வச்சேன். ஆனா, வேற வழியில்லை. நீங்க வேறொரு நல்ல பெண்ணாப் பார்த்துக் கல்யாணம் செய்யுங்கோ. என் தாத்தாவோட கலை வாழனும்னா என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையைத் தியாகம் செய்யிறதை விட எனக்கு வேற வழி தெரியலை ..."

"செல்வி பேசி முடிச்சிட்டியா? இனி நான் பேசலாமா. மத்தவங்களை மாதிரி என்னையும் நீ ரொம்பச் சாதாரணமாக எடை போட்டுட்டே இல்லையா ...! என் மனசு சுத்தமா இருந்தது உண்மைதான். ஆனா எப்போ முதன் முதலா உன்னைப் பார்த்தேனோ அப்பவே உன் உருவம் என் மனசில பதிஞ்சிடுச்சி. என் மனசில வளர்ந்திருக்கிற காதல் பயிருக்குத் தண்ணீர் ஊற்றி வந்த நீயே இப்போ அதுக்கு வெந்நீரை ஊற்றி என்னை கண்ணீர் கடலில் தள்ளிவிட நினைக்கிறியே இது நியாயமா? எனக்கென்று ஒரு கடமையிருக்கு என்கிறதை நான் மறுக்கவில்லை. ஆனா, அதுக்காகக் காதலை அடகு வைக்கலாமா?

பூவிழுந்த கண்ணில் கோலும் குத்தின மாதிரி நாளும் உன் நினைவிலேயே சுகம் காணும் என் மனசில உன் வார்த்தைகளால் நெருப்பால் சுட்டுப் பொசுக்கிறியே. உன்னை மறந்து நான் எப்படி இன்னொருத்தியைக் கைபிடிக்க முடியும் ..."

"செழியன், என்னை வார்த்தைகளால் கொல்லாதீங்க. நான் ஏற்கனவே நொந்து போயிருக்கிறேன். மரணப் படுக்கையிலிருக்கும் என் தாத்தாவின் கடைசி ஆசையை நிறைவேற்ற வேண்டியது என் கடமை தானே ..."

"உன்னோட கடமைக்காக நம்ம காதலைப் பலிகடாவாக்கப் போறியே?"

"ஐயோ ... செழியன் ... எனக்கு மட்டும் உங்களை விட்டு பிரியிறது வேதனையில்லையா ... ஆனா எனக்கு வேற வழி தெரியவில்லையே ...."

"ஏன் இல்லை, நம்மளோட காதல் எந்த வகையில உன் கடமைகளுக்குத் தடையா இருக்குது ..."

"இது கடமை மட்டுமல்ல தவம். தாத்தாவோட உயிர்மூச்சில இருக்குது அவரோட கலை. அந்தக் கலையை வாழ வைக்கணும் என்றால் அதுக்கு நம்ம காதலை விலை கொடுக்கிறதை விட வேற வழியில்லை. தாத்தாகிட்ட நான் கற்ற இந்தக் கலையை வாழ வைக்கணும் என்றால் என் கவனம் முழுவதும் அதிலேயே இருக்கணும். கவனம் தப்பினா வித்தை வீணாயிடும். காதல், கல்யாணம் எல்லாம் இந்த வித்தையைச் சொத்தையாக்கி விடும். உங்களை மறுபடியும் கெஞ்சிக் கேட்கின்றேன். என்னால உங்க வாழ்க்கை வீணாயிடக்கூடாது. நீங்க வேறொரு நல்ல பெண்ணாப் பார்த்து மணம் முடிச்சிக்கங்க. என்னை மறந்துடுங்க. இதுதான் என் இறுதி முடிவு."

"அப்படின்னா இதையும் கேட்டுக்க. உன்னைத் தவிர இனி வேற எவருக்கும் என் மனசில இடம் கிடையாது. உன் மனம் மாறி என்னைத் தேடி வரும் வரை நான் உனக்காகக் காத்திருப்பேன். எத்தனை வருஷம் ஆனாலும் பரவாயில்லை. நீ வரும் வரை என்னோட வாழ்நாளை இந்த ஏழை மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறப்பதற்காகப் பயன்படுத்துவேன். உன்னோட பழகிய அந்த அற்புதமான ஆனந்தமான நாட்களை நிச்சயமாக என்னால் மறக்க முடியாது. அந்த நினைவுகளை நீ என்னைத் தேடிவரும் வரை திரும்பத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்ப மீட்டிப் பார்ப்பேன். அந்தச் சுகம் போதும் எனக்கு ..."

செல்வி, அந்தப் புகைப்படத்தைப் பத்திரமாகத் தோல்பையில் வைத்தாள். எவ்வளவு காலத்திற்குப் பின் தன் சொந்த இடத்துக்குப் போகிறாள். தன் தாத்தாவின் ஆசையை நிறைவேற்றி விட்டாள். அவள் பயின்ற கலையைத் தான் சென்ற இடமெல்லாம் பரப்பினாள். ஒவ்வொரு இடத்திலும் அந்தக் கலை வளர நிரந்தமாக அதற்கென ஒரு அமைப்பை உருவாக்கினாள்.

"செல்வி கலை என்கிற பெயரால் காசு பணம் சம்பாதிக்கிற இந்தக் காலத்தில் நீ உன் எதிர்காலத்தையே அதுக்காகத் தியாகம் பண்ணிட்டியேம்மா ... வெளிநாட்டுல இருக்கிற என்னோட பையன் போனவாரம் தான் எனக்கு கடிதம் போட்டான். அங்கே நம்ம பாரம்பரியக் கலைகளைச் சொல்லிக் கொடுக்க ஒரு திறமையான கலைஞர் வேணுமாம். ஐந்து வருட ஒப்பந்தம், கை நிறையச் சம்பளம், சாப்பாடு, தங்குமிட வசதி எல்லாம் இலவசமாம். நான் உன் பெயரைத் தான் எழுதினேன். உனக்கொன்னும் ஆட்சேபனை இல்லையே ...."

"வெளிநாட்டுலயும் நம்ம கலையை வளர வைக்கிறதுக்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கும் போது நான் எப்படி அதை வேணாம் என்று சொல்லுவேன். ஆனாலும் ரொம்ப நாளைக்குப் பிறகு எந்த சொந்த இடத்தைப் பார்க்க ஆசையா இருக்குது. அங்கே எனக்காக ஒருத்தர் காத்துக் கொண்டிருக்கிறார்.

"நான் அவரைச் சந்திக்க வேணும். அவர் தோளில் சாஞ்சு ஓ ... என்று அழவேணும். தனிமை என்னை வதைக்கத் தொடங்கியது. இனியும் கொளுகொம்பில்லாமல் என்னால் இருக்க முடியாது. முதல்ல அவரைச் சந்திச்சிட்டுத்தான் மற்றதைப் பற்றிச் சிந்திக்கனும் ..."

ரயில் மெதுவாக வேகத்தைக் குறைத்தது. அந்த ரயில் நிலையத்தில் நின்றது. மலையகத்துக்கே உரிய அந்தச் சுகமான குளிர் அவள் மனதில் பரவசத்தை ஏற்படுத்தியது.

அவள் ரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தாள். பஸ் நிலையத்தை அடைந்தாள். குறிப்பிட்ட பஸ்ஸில் ஏறினாள். பஸ் மலைப்பாதையில் வளைந்து சென்றது. அவள் இறங்க வேண்டிய இடம் வந்தது. அவள் தாய் தந்தை இப்போது உயிரோடில்லை. அங்கே போய்ப்பயனில்லை. எனவே அவள் கால்கள் செழியன் இருக்கும் லயமை நோக்கி நடந்தன. சுமார் 10 நிமிட நடையின் பின் அவள் பனியக் கணக்கு லயனை அடைந்தாள். அப்போது அவளெதிரில் செழியனின் தங்கை தெய்வானை எதிர்பட்டாள்.

"அட ... நீங்க செல்வி தானே ...."

"ஆமா ... நீ..."

"என்னை அடையாளம் தெரியலையா. இவ்வளவு நாளைக்கப்புறம் உங்களைச் சரியா அடையாளம் தெரிஞ்சுகிட்டேன் .. நான் தான் தெய்வானை .... செழியனோட தங்கை ...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெய்வானையா நீ ஆளே மாறிப் போயிட்டியே ..." ஆமா அண்ணன் எங்கே ..."

"........"

"என்ன பதிலையே காணோம் ....."

"என்னத்தைச் சொல்லுறது எந்நேரமும் உங்களைப் பற்றியேதான் பேசுவாரு ... நீங்க வேற ஊருக்கு மாற்றலாகி போனதுக்கப்புறம் ரொம்பச் சோகமா இருந்தாரு. அப்புறம் ஒரு மாதிரி மனசைத் தேற்றிக்கிட்டு சேவை அது இது என்று ஓய்வு ஒழிச்சலில்லாமல் உழைச்சாரு. தப்பித் தவறி ஓய்வு கிடைச்சாப் படுக்கையில சாஞ்சிக்கிட்டு விட்டத்தையே பார்த்துக்கிட்டிருப்பாரு. அவரை அறியாமலேயே கண்களில் கண்ணீர் வடியிறதைப் பார்த்து நானே எனக்குள்ளே அழுது இருக்கேன். நீங்க அவரை விட்டுப் போயிருக்கக் கூடாது. அவரு உங்க மேல உயிரையே வைச்சிருந்தாரு ..."

"தெய்வானை வளவள என்று பேசிகிட்டிருக்காதே. எனக்கு அவரை உடனடியாகப் பார்க்கனும். இப்போ அவரு எங்கேயிருக்காரு..."

"நீங்க அவரை பார்க்கனுமா... அப்போ என்னோட வாங்க ..."

"ஐயோ தெய்வானை அவரைக் காட்டுறேன் என்று சொல்லிவிட்டு இப்போ என்னைச் சுடுகாட்டுக்குக் கூட்டிட்டு வந்திருக்கியே... எனக்கு தலை சுத்துது ... மயக்கம் வரும் போல இருக்கு ..."

"மனசை திடப்படுத்துங்க. இனி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி எதுவும் நடக்கப் போறதில்லை. போன வருஷம் இதே நாளில் மின்னாமல் முழங்காமல் மாரடைப்பால எங்கண்ணன் இறந்து போயிருட்டாரு ...."

"ஐயோ தெய்வானை என்னடி சொல்லுறே...."

"ஒரு வருஷமா? ரெண்டு வருஷமா? உங்களுக்காக முப்பது வருஷம் காத்திருந்தாரு நீங்க வருவீங்க என்ற நம்பிக்கையில உங்களோட வருகைக்காக வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தாரு. அவர் தேடிய போது நீங்க வரலை. ஆனா அவர் உயிர் உடலை விட்டு ஓடினப்புறமா வந்திருக்கீங்க. உங்களோட கடமைக்காக உங்க மேல உயிரையே வச்சிருந்தவரின் காதல் பயிரை அழிச்சிட்டீங்களே. நான் அவருக்கு ஒரே சகோதரி. என்னோட கல்யாணத்தை நல்லபடியா அமைச்சிக் குடுத்துட்டு அவர் மட்டும் கடைசி வரை தனிமரமாகவே இருந்துட்டாரு. அவர் சாவுறதுக்கு முதல் நாள் கூட நான் அவரோட தான் இருந்தேன். அப்போ கூட அவர் என்ன சொன்னாரு தெரியுமா. "பாவம் செல்வி, ரொம்ப நல்லவ. அவள் நிலைமையில் நான் இருந்தால் கூட இப்படியான முடிவத் தான் எடுத்திருப்பேன், ஆனாலும் அவள் நிச்சயமா என்னைத் தேடி வருவாள்ன்னு சொன்னாரு. ஆனா அப்போதெல்லாம் வராத நீங்க அவர் மறைஞ்ச நாளில வந்திருக்கீங்களே, நான் என்ன செய்வேன், கடைசி வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்காகவே வாழ்ந்து எந்த உறவும் இல்லாமல் இந்த உலகத்தை விட்டே போயிட்டாரே ...."

சொல்லிவிட்டு அழுதாள். செல்வி கைகளினால் தலையை அடித்துக் கொண்டு அழுதாள். பெற்றோர் மறைந்த போது கூட இப்படி அவள் அழுததில்லை. இந்த ஐப்பத்தைந்து வயதிலும் தளராமலிருந்து அவள் மனம் இப்போது தவித்தது. வேதனையால் தத்தளித்தது.

இத்தனை வருடங்கள் அவள் செழியனை பற்றிச் சிறிதும் யோசிக்காமல் கடமை, கடமை என இருந்து விட்டாள். கடமை காதலின் சக்தியை மறைத்து மழுங்கடித்து விட்டது. செழியன் அவளையே நினைத்திருந்தான். ஆனால் அவள் காலம் கடந்து தான் அவனை நினைந்தாள்.

இனி அழுது என்ன நடக்கப் போகிறது. மலர்களின் ராஜாக்களான ரோஜாக்கள் அழுவதில்லை. ஆனால் இதோ இங்கே ஒரு ரோஜா இடைவெளியில்லாமல் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறது.

(யாவும் கற்பனை)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நமப் பார்வதி பதயே..!

**மு. சிவலிங்கம்**

உச்சிமலை தோட்டத்து அம்மன் கோயில் பூசகர் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். "தான் ஒரு ஐயரும் இல்லே...! கிய்யரும் இல்லே ...! எல்லாம் அதிஷ்ட தேவதை அமைத்துக் கொடுத்த வரம்" என்று மனதுக்குள் பேசிக் கொண்டார்.

சிவகாந்தன், சில வருஷங்களுக்கு முன் முருகனைப் போல கோவணாண்டியாக கொழும்பில் ஒரு பாழடைந்த லொட்ஜில் இருந்தவன். வடக்கிலே ராணுவமும், போராளிகளும் மோதிய போது முதல் குண்டு வெடிச் சத்தத்திலேயே கொழும்புக்கு ஓடி வந்தவன். பட்டா பரியாக பாஸ்போட் எடுத்தவன். ஜெர்மன், சுவீடன், கனடா என்று ஆகாயப் பாதையை அண்ணாந்து பார்த்து, பார்த்து களைத்துப் போனவனுக்கு எல்லாமே தடையாகிப் போயின. காணி விற்றக் காசு, வீடு விற்றக் காசு, எல்லாம் கரைந்துப் போய் .. தலை மயிர் வெட்ட, தாடி மயிர் வழிக்கக் கூட கையில், மடியில் இல்லாத நிலையில், ஆண்டிச் சாமியாரைப் போல நிலை தடுமாறிய நிலைக்குத் தள்ளப்பட்டான்.

இன்றைய ஐயர் என்ற அன்றைய சிவகாந்தனுக்கு மட்டும் ஜெர்மனியிக்கு பறக்க முடியாத நிலை ஏற்பட்டது. தரகர்கள் கேட்ட பணத்துக்கும், அவனுக்கும் எட்டாத நிலை ஏற்பட்டது. மற்றைய நான்கு நண்பர்களுக்கும் சிட்டாய்ப் பறந்தார்கள். போய் பணம் அனுப்பி சிவகாந்தனை மூன்றே மாதத்தில் எடுத்துக் கொள்வதாகக் கூறிச் சென்று மறைந்தவர்கள்தான்...!

கொழும்பு லொட்ஜிலும் தொடர்ந்து தங்க முடியாத நிலை.

சிவகாந்தன் செட்டித் தெருவில் இருக்கும் அந்த சைவக் கடையை நினைத்துப் பார்த்தான். அன்று கொழும்புக்கு ஓடி வந்த புதிதில், ஒரு சைவக் கடையை திறந்திருந்தாலும், இன்று லட்ச லட்சமாய் சம்பாதித்துக் கோடீஸ்வரனாகியிருக்கலாம். சைவக் கடைக்கு பெரிய முதலீடு தேவையில்லை. நகர சபை தண்ணீர், ஒரு மூட்டை மாவு, பத்து பறங்கிக்காய், பத்து கிலோ பருப்பு, பத்துத் தேங்காய், கொஞ்சம் பலசரக்கு .. இந்த மூலப்பொருட்களோடு கடை திறந்திருக்கலாம்.

சிவகாந்தன் இலையில் இரண்டு தோசை விழும். அது உழுந்து தோசையைப் போல உப்பியிருக்கும். ஆனால் அது உழுந்து போடாத தோசை...! புளிப்பால் உப்பியிருக்கும் தோசை ...! சைவக்கடை சமையல் கட்டுக்குள்ளிருக்கும் தோசை மாவு கரைக்கும் அண்டாவுக்குள் அழுகிய, சிரட்டை நீக்கிய தேங்காய் மிதக்கும்...! இந்த "இன்கிரிடியன்தான்" தோசை மாவை புளிக்கச் செய்யும் பக்டீரியா...! அடுத்து தோசையின் மேல் பருப்பில்லாது ஊத்தப்படும் "சாம்பார்" என்று பறங்கிக் காயைக் கடைந்து... அதிலே இரும்புத் துண்டுகளாய் முற்றிய விதையோடு ஓரிரண்டு முருங்கைக்காய் துண்டுகள் முழி பிதுங்கி மிதக்கும் ...!

இந்த சைவக் கடையை இனவாத சிங்களவர்கள் கிண்டல் பண்ணுவதுண்டு. "தோசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மசாலா வடே" என்று பைலா பாட்டுப் பாடிக் கொண்டு அரை டசன் தோசை, ஒரு லீட்டர் சாம்பார் என்று சாப்பிட்டு, 20.25 ரூபாவுக்குள் பகல் சாப்பாட்டை முடித்துக்கொள்வார்கள். சிவகாந்தன் முன்பெல்லாம் சைவக்கடையில் உட்காரும் போது இடியப்பம் கேட்டால் இடியப்பத்தோடு பலவந்தமாக ஒரு உழுந்து வடையும் வந்து உட்காரும் ..! இது ஒரு வியாபார டெக்னிக்...! சில நாட்களில் சிவகாந்தன் வடையைக் குறைத்துக் கொண்டான். "5 இடியப்பம் ஒரு பிளேன் டீ" என்ற நிலைக்கு வந்து விட்டான். பழைய நினைவுகள் வாட்டி வதைத்தன...

கொழும்புக்கு வந்த புதிதில் சாப்பாட்டுக்கு செட்டிசாட்டு ரெஸ்டூரண்ட் .. பிறகு செட்டித் தெருவுக்குப் பின்னால் செக்கடித் தெருவில் இறால் .. கனவாய்.. நண்டு .. கோழி .. ஆடு... என்றும் "சம்பா ஒரு நாள்", "நாடு ஒரு நாள்" என்றும் சாப்பிட்டு ருசி கண்டவன் .. சாப்பிட்டவுடன் கோழிக்கூட்டுப் பழம் அல்லது பெரிய பெரிய பப்பாளிக் கீத்து "டெஸர்ட்"டாக முடித்துக் கொண்டு லொட்ஜில் வந்து குப்புறப் படுத்துக் கொள்வான். விடிந்ததும் பாஸ்போட்டோடு பணத்தைக் கொடுத்த புரோக்கரையும், டிரவல் ஏஜன்சிக்காரனையும் தேடிக்கொண்டு போவதுமாய் இருந்தவன், கடைசி கட்டத்தில் ஐந்து இடியப்பமும் ஒரு பிளேன் டீயும் குடிக்கும் காலம் வந்த போதுதான் அந்த சைவக் கடை சர்வர் பையன் கதிரேசன் அகப்பட்டான்.

***

"தம்பி நீங்க எவ்விடம்...?"

"நான் மஸ்கெலியா..."

"உங்களுக்கு அஞ்சு பத்தாயிரம் பணம் தரலாம் எனக்கு தோட்டத்துல கோயில் ஐயர் வேலை பிடிச்சுத் தர முடியுமா..?"

அஞ்சு ... பத்தாயிரம் கமிஷன் ..! சின்னப் பையன் மனதுக்குள் "புதிய சிந்தனை" தோன்றுகின்றது. இவன் தர்ற பணம் போதும்... ஒரு அண்ணாசிக் கறுத்தை வைக்கலாம். பெட்டா பேமன்ட் பிஸ்னசுக்கும் போதும் என்று யோசித்தான்

அந்த யோசனை .. அந்த கமிஷன் பணம் .. சிவகாந்தன், கதிரேசன் வேலை ஒப்பந்தம் .. எல்லாமே நல்லபடியாக நடந்தது.

சிவகாந்தன் என்ற புங்குடு தீவு பூர்வீகக்குடி. கொழும்பு லொட்ஜ் வாசியாகி .. உச்சிமலை தோட்டத்து அம்மன் கோயில் ஐயராகி, பூ நூலை இடம் வலமாக உடம்பில் கோர்த்து, பிரமணனாகி "காயமே இது பொய்யடா.. வெறும் காற்றடைத்த பையடா..." என்ற மனசாட்சி மந்திரத்தை தனக்குள்ளே ஓதிக் கொண்டான். ஐயர் கோயில் பணிக்கு அவ்வளவு டெக்னிக் மந்திரங்கள், வேதம் ஓதுதல் எதுவும் தேவையில்லை ...!

சிவகந்தன் ஓ.எல் பரீட்சையில் இந்து மதத்தில் "ஏ" சித்தி வாங்கியவன். தோவாரம்.. திருப்புகழ்.. கந்தசஷ்டி... சுப்ரபாதம்.. காயத்ரி மந்திரம் எல்லாமே அவனுக்கு அத்துப்படி. இந்த "குவாலிபிகேஷனை" மூலதனமாகவும்... மூளை தானமாகவும் வைத்துக் கொண்டு தோட்டத்துப் பக்தர்களை வெழுத்து வாங்கலாம் என்ற தைரியத்தில் உட்புகுந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இந்தத் தோட்டத்தில் அவன் அம்பாள் அடி பணிந்து இருப்பத்தைந்து வருஷங்கள் பூர்த்தியாகிவிட்டன. சிவகாந்தன் "ஸ்ரீலஸ்ரீ சிவகாந்தக் குருக்கள்" என்ற தொழில் பட்டத்தை தானே சூட்டிக் கொண்டான் ..! குருக்கள் அவர்களுக்கு தோட்டத்தில் அம்மன் கோவில் அருகிலேயே, கோவில் கமிட்டி சேகரித்து வைத்திருக்கும் பணத்திலும், தொழிலாளர்கள் சம்மதம் வழங்கி.. செக் ரோலில் கழிக்கப்பட்ட ஒரு நாள் சம்பளப் பணத்திலும் வீடு கட்டிக் கொடுத்தார்கள். இருநூறு வருஷமாக இந்தத் தோட்டத்தில் விருட்சமாகி, விழுதுகள் இறங்கிப் போயும், இன்னும் அவர்கள் குடிகொண்டிருக்கும் முகாம்களுக்கு மின்சாரம் பெற்றுக்கொள்ள முடியாத மக்கள், குருக்கள் வீட்டுக்கு கோயில் கனெக்ஷன் மூலம் மின்சாரம் ஒரே நாளில் கொடுத்தார்கள்.

குருக்கள் நூறு ரூபாய் பூசையிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் பூசை வரை ரேட் வகுத்தார். ரேட்டுக்கு ஏற்றபடியே அம்பாள் கிருபை கிடைக்குமென்றதால் எல்லா பக்தர்களும் இரண்டாயிரம் ரூபாய் பூசைக்கே ஓடர் கொடுத்தார்கள். பூசைக்குரிய பொருட்களை குருக்களே வாங்கிக் கொள்வார். குருக்களார் கோயில் திருப்பணியோடு சாவு, சடங்கு, பிள்ளை பேறு, எதையும் விட்டு வைக்கவில்லை. கரும காரியங்கள், பருவ நீராட்டு விழாக்கள், புண்ணியதானங்கள், வாக்காளர்களின் தொல்லை தாங்க முடியாத அரசியல்வாதிகள் அனுதினமும் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சிகள் வரை அந்த பிரதேசத்து ஏகபோக தெய்வக் கொந்தராத்துக்காரராக பிரபல்யமடைந்தார்.

ஸ்ரீலஸ்ரீ சிவகாந்தக் குருக்கள், தெய்வப் பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மூன்று மாதங்களுக்குள்ளேயே டீ.வி. வாங்கினார். வீடியோ செட் வாங்கினார். தோட்ட மக்களுக்கும் "படம்" காட்டத் தொடங்கினார். வசூல்.. கடன் முறையிலும், கைக் காசு முறையிலும் நடைபெற்றது.

உச்சிமலை தோட்டத்துகக்கு வந்த பிறகு தான் சிவகாந்தனுக்கு கல்யாண கதை ஆரம்பமாகியது..! ஊர்க்காரப் பெண்ணை உற்றார், உறவினரோடு கொழும்புக்கு வரவழைத்து, கொழும்பிலேயே தாலி கட்டினார். ஜெர்மனி மாப்பிள்ளை இந்தியாவுக்கு வந்து, யாழ்ப்பாணத்துப் பெண் சென்னைக்குப் போய், மணவரையில் உட்காரும் போதுதான் மாப்பிள்ளையைப் பார்த்து, தாலிக் கட்டிக் கொள்ளும் சிஸ்டத்தையே இவரும் செய்தார். தோட்டத்துப் பக்தர்களுக்கு "ஐயரம்மாவை" உச்சி மலைக்கு வந்தப் பிறகுதான் தெரியும்...!

25 வருஷங்கள், 25 நிமிடங்களாக ஓடின.

சிவகாந்த குருக்கள் உச்சிமலைத் தோட்டத்துக்கு வந்த பிறகு.. தனது இரண்டு மகன்மாரையும் கனடாவுக்கு அனுப்பி வைத்து விட்டார்..! அம்பாளின் அபிஷேகம் அவரை மட்டும் உயர உயர பறக்க விட்டுக் கொண்டிருந்தது.. "பொரீன்" போகும் கனவு அவருக்கு நனவாகா விட்டாலும் ... அவரது பிள்ளைகளுக்குக் கிட்டியதே ..! என்னே அம்பாள் கடாட்சம்.. !

***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரோஹரா ...! கோவிந்தா ..! கோ.. விந்தா ...!"

"கந்தனுக்கு..?" "அரோஹரா ...!

"முருகனுக்கு..? "அரோஹரா ...!

"கந்தனும், முருகனும் ஒரே ஆளுதான் ஓய்..."

"அப்போ.. அம்மனுக்கு "அரோஹரா ...!

தோட்டத்துப் பக்த பெண்மணிகள் பால் குடம் எடுத்துச் சென்றார்கள் பட்டுச் சேலைகளும், காஞ்சிபுர நெசவுச்சாலைகளில் ஏழை, எளியவர்களுக்கேற்றபடியும் டுப்லிகேட் மினுமினுப்பில் தயாரிக்கப்படுகின்றன. அங்கே பால்குட பவனியில் அந்த உண்மை பட்டவர்த்தனமாகியது. "வாணிபம் ஒரு கலை" என்று முதன் முதல் தமிழன்தான் வியாபார சுரண்டலுக்கு நாமம் சூட்டினான்...!

பால்குடபவனியில் பறவைக் காவடிகளும் போய்க்கொண்டிருந்தன. பெருந்தோட்ட வியாபாபாரிகளின் கொக்கிகளில் ஜென்மம் ஜென்மமாக மாட்டப்பட்டு தொங்கிக் கொண்டிருக்கும் தோட்ட பக்தர்களுக்கு பறவை காவடியில் தொங்குவது வேதனையாகத் தெரியவில்லை..! பறவைக் காவடிகளோடு பலசில்லறை காவடிகளும் ஆட்டம் பாட்டத்தோடு சென்றன. திடீரென வாத்திய செட்காரர்களுக்கும் காவடிகாரர்களுக்கும் மோதல் உண்டாகியது. மோதலுக்கு காரணம் கிளாரினெட்காரர் "ரோஸ் மேரி... நீ என் ஜுஸ்மாரி...!" என்று பாட்டடித்தாராம். "இந்த பாட்டுக்கு காவடி ஆட முடியுமா...?" என்ற வாய்த்தர்க்கம் முற்றியது. நிலைமையை சமாளிக்க கிளாரினெட்காரர் உடனே மன்மதராசாவை எடுத்து விட்டார். பால்குட பவனியில் சர்வதேச சமூகம் தலையிடாமலேயே சமாதானம் ஏற்பட்டு, நகர்ந்தது...!

உச்சிமலை டிவிசனில் புதிய கோயில் கட்டி கும்பாபிஷேகம் நடந்துகொண்டிருக்கிறது. மிகப் பெரிய முரண்பாடுகளுக்கு மத்தியிலும், பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இந்த கும்பாபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது. இருக்கிற கோயில் போதும். இதை உடைத்து கட்டினால் நமது மூதாதையர் கட்டிய பழமையான வரலாறு மறைந்து போகும் என்றும், நாங்கள் பூர்வீகமாக இங்கே வாழ்ந்த தடயங்களும் அழிந்து போகும் என்றும் படித்த இளைஞர்கள் சிலர் அபிப்பிராயம் கூறினார்கள்.

இளைஞர்கள் எல்லோரும் புதிய கோயில் கட்டுவதற்கு பதிலாக, ஒரு கலாச்சார மண்டபம் கட்ட வேண்டும். இங்கே மின்சார வசதியிருப்பதால், பிள்ளைகள் படிப்பதற்கும் வாசிகசாலை வைத்துக் கொள்வதற்கும் வசதியாக இருக்கும். திருமண வைபவங்களுக்கும் ஏனைய வைபவங்களுக்கும் டவுன் கோயில் மண்டபத்திற்கு பதினைந்தாயிரம் இருபதாயிரம் என்று கட்ட தேவையில்லை என்றார்கள். அத்தோடு அவர்கள் புதிய சிந்தனைக்குரிய யோசனைகளையும் முன்வைத்தார்கள். கோயில் அருகில் ஒரு தச்சு வேலை செய்யும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரமும் சீமேந்து அச்சுக்கல் தயாரிக்கும் யந்திரமும், கோயில் சேமிப்பு பணத்தில் வாங்கி தோட்டத்தில் படித்து வேலையில்லாமல் பெற்றோரின் உழைப்பில் தங்கியிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்றும் கூறினார்கள். இந்த யோசனையை கோயில் கமிட்டியினர் அறவே மறுத்து விட்டனர்.

"மகமாயி" புது மூலஸ்தானம் கட்டிக் கொடுத்தால் தான் குடியிருக்க வருவாள் என்று "மணடு" வைத்து உடுக்கு அடித்து பார்த்தார்களாம்...!

கோயில் கட்டுவதற்கு மாதாமாதம் தொழிலாளர் சம்பளத்தில் "செக்ரோல்" மூலம் பிடித்த மொத்தப்பணம் ஐம்பது லட்சம் வட்டியில்லாமல் தோட்ட நிர்வாகத்திடம் இருக்கிறது...! வங்கியில் வைப்பு வைத்தால் வட்டியே மாதம் அறுபது எழுபதாயிரம் வரை கிடைக்கும். இந்த அறிவெல்லாம் தோட்ட கமிட்டியினருக்கு கிடையாது. தோட்ட நிர்வாகம், கோயில் பணம் , மரணாதார பணம், மின்சாரப் பணம் எல்லாவற்றையும் வட்டியில்லாமலேயே "ரோல்" அடித்துக் கொள்ளும்...!

புதிய கோயில் கட்டுவதில் அபிப்பிராய பேதங்கள் இருக்கும் போதே நூறு வருஷங்களுக்கு மேலான பழமையைக் கொண்டு தன்னை சுற்றி அரண்மனை தூண்களைப் போல விழுதுகளை இறக்கி, தன்னோடு தன்னை உண்டாக்கி வளர்த்தவர்களின் பூர்வீகத்தை பறைசாற்றிக் கெண்டிருந்த, அந்த பழம்பெரும் ஆலமரத்தையும் வெட்டி சாய்த்தார்கள்..! தூண்களால் சுற்றி நின்ற விழுதுகளையும் வெட்டி சாய்த்து, விறகாய் அடுக்கி வைத்துவிட்டார்கள். இந்த சமூகத்தின் பூர்வீகத்தை பெருந்தோட்ட மண்ணில் ஆலவிருட்சங்களே அடையாளம் காட்டிக் கொண்டு வருகின்றன. ஆலமரங்கள் ஆயிரமாயிரம் துயரச் சரித்திரங்கள் தோய்ந்திருப்பதை இந்த மக்கள் எவரும் அறிந்திருப்பதில்லை.

இந்த பெருமதிமிக்க மரத்தை வெட்டி வீழ்த்திய கோயில் கமிட்டிகாரர்களை, ஒரு இளைஞர் கூட்டம் "செம்மை உதை" கொடுத்து கை, கால்களை உடைத்து ஆஸ்பத்திரியில் கொண்டு போய் போட்டு, பொலிஸிலும் சரணடைந்தார்கள்..! மரங்களை வெட்டுவது பௌத்த மதத்திற்கு பாவச் செயல் என்பதை சிங்கள மக்கள் தங்கள் கலாச்சாரப் போதனைகளில் ஒன்றாக கருதுகிறார்கள்...! அந்த ஊர் பொலிஸ் அதிகாரி ஆலமரத்தை வெட்டி வீழ்த்திய முறைப்பாட்டை அறிந்து ஆத்திரப்பட்டார்.

கோவில் கமிட்டி உறுப்பினர்களுக்கு உயிருக்கு மோசமில்லை என்பதை ஆஸ்பத்திரிக்குச் சென்று அறிந்த ஓ.ஐ.சீ. அந்த இளைஞர்களை, மேலும் பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டாமென்று வீட்டிற்கு அனுப்பி விட்டார். ஆலமரத்தை வெட்டி வீழ்த்திய கோயில் கமிட்டி உறுப்பினர்களை பொலிஸ் ஸ்டேசனுக்கு அழைத்து ஒவ்வொரு அறை விட்டார். சிலருக்கு பூச்சி பற்கள் விழுந்தன... சிலருக்கு நல்ல பற்களும் விழுந்தன...!

புதிய கோயில் கட்டி முடிப்பதற்கு நாற்பது இலட்சம் செலவாகியது. கும்பாபிஷேகத்திற்கு கிட்டத்தட்ட பத்து இலட்சம் செலவாகும் என்று கோவில் கமிட்டி சொல்லுகிறார்களாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***

தோட்டத்துக் காரியாலயம் ...

தோட்ட சுப்பிரண்டன் ஜன்னல் கதவைத் திறந்தார்.

கோயில் கமிட்டி, மரணக் கமிட்டி, மின்சார கமிட்டி குழுவினர்கள் குவிந்திருந்தார்கள்.

"கோயில் கட்டியதில், ஒழுங்கான கணக்கு விபரம் காட்டப்படவில்லை. கோவில் கமிட்டிக்காரர்களும், கொந்தராத்துக்காரனும் பணத்தைச் சூறையாடி இருக்கிறார்கள்...! கணக்கு விபரம் கொடுக்காத வரை கும்பாபிஷேகம் செய்ய விடமாட்டோம் ...!" என்று இளைஞர் கூட்டம் தோட்டக் காரியாலயத்தின் முன்னால் சத்தமிட்டார்கள். தோட்ட நிர்வாகியிடம் "மேலதிகக் கோவில் பணத்தை கோயில் கமிட்டியினருக்குக் கொடுத்தால், ஸ்ட்ரைக் ஏற்பாடு செய்வோம்..!" என்று எச்சரித்தார்கள்.

தோட்ட நிர்வாகி "இதுதான் சமயம்" என்று ஜன்னல் கதவை இழுத்து மூடினார். கோவில் பணம், தோட்ட கணக்கில் இருக்கும் வரை, தோட்ட நிர்வாகத்தக்கே நன்மையாகும் ..!

கோயில் கமிட்டி உறுப்பினர்கள் "கரா முரா" என்று காகங்களைப் போல் கத்திக் கொண்டுச் சென்றார்கள்.

"நான் பாக்கிறேன்டா ...! வாக்கிறேன்டடா ... எவன்டா கணக்கு கேக்குறது...?" என்றான் ஒரு கொழுத்த கோயில் கமிட்டி உறுப்பினன்... சாரத்தை உயர்த்தினான்... ஜங்கி கூட போடவில்லை...!

"நீ நொட்டுன போடா...! கொழுக்கட்ட ராஸ்கல்...! திருட்டு நாயி..! கோயில் பணத்துல தான்டா ஒன் ஒடம்புல இவ்வளவு எறைச்சி உண்டாகி இருக்கு...!" என்று இடுப்பில் செருகியிருந்த கவ்வாத்துக் கத்தியை வெளியே எடுத்தான் கார்த்திக் என்ற இளைஞன்.

கத்தியைக் கண்டதும் கோயில் கமிட்டித் தலைவர் கொயின்ஞ்சாமி (கோவிந்தசாமி) "தம்பி.. தம்பி...! கார்த்தி...! பெரச்சன இருந்தா பேசித் தீத்துக்குவோம்.. அந்திக்குக் கோயிலுக்கு வாங்க .. கணக்கு, வழக்க நான் காட்டுறேன் ..." என்று சரணாகதித் தொணியில் கெஞ்சினார்.

"பிரச்சினை இருந்தா பேசித் தீர்க்குக்கலாமா..? ஒங்க லட்சணத்துக்குப் பேச்சு வார்த்த மேசக் கூட இருக்கோ..? நாட்டுல 25 வருஷமா பேசித் தீத்துக் கிழிச்சிக்கிட்டு இருக்கிறது தெரியாதோ ...?" என்று மீண்டும் கத்தியை ஓங்கினான்.. கார்த்திக் கையிலிருந்த கத்தியை சுரேஷ் வாங்கிக் கொண்டு அந்திக்கு கோயில்ல பார்த்துக்குவோம் தலைவா ..! இப்ப பொறுமையா வாடா ..!" என்று அவனை சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோய்ஞ்சாம்னே...! அன்னைக்கே பூசாரி மண்டுல சொன்னானே..! புதுசா கட்டுன கோயில் நரபலி கேக்கும்னு.. இப்போ நெலமய பார்த்தா நரபலி நடக்கும் போல தெரியுது..?"

"அடச் சீ..! பொத்திகிட்டு வாடா..! கமிட்டிக்காரன் பேசற பேச்சா....?" என்றார் கோயில் கமிட்டித் தலைவர் கோவிந்தசாமி...

***

"எல்லோரும் கேட்டுக்கோங்கோய். இன்னைக்கி ராத்திரி 7.00 மணிக்கு பழைய மாரியம்மன் கோயில்ல.. புது கோயில் கட்டுன வரவு செலவு பத்தி...கோயில் வெவரம் சொல்லுவாங்கோய்..! எல்லோரும் வந்துருங்கோ.. அப்புறம் கேக்கல்ல... சொல்லலல்லன்னு சொல்லாதே...!" என்று லயத்துக்கு லயம், கூட்டத்துக்கு வரும்படி ஆள் சத்தம் போட்டுக் கொண்டு சென்றான். 30, 40 வருஷங்களுக்கு முன்பு.. இப்படியான அழைப்புக்கு தண்டோராக்காரன் "நக்குடி.. நக்குடி டெண்ட நக்குடி" என்று தப்பு அடித்து செய்தி சொல்வான். இப்பொழுது நாகரீகக் காலம்... சுவாரஷ்யமான பழைய பழக்க வழக்கங்கள் எல்லாம் மறைந்து போய் விட்டன....

***

மாரியம்மன் கோயிலில் ஒரு நாள் இல்லாதவாறு கூட்டம் குவிந்திந்தது. கோயில் கமிட்டியில் மொத்தம் 7 பேர் இருக்க வேண்டும். தோட்டத்தில் தொழிற்சங்க "மெஜாரிட்டி" படி கூடிய அங்கத்தவர்கள் உள்ள கட்சிக்காரர்களுக்கே அதிக உறுப்பினர்கள் இருப்பார்கள். அந்தத் தோட்டத்தில் மூன்று கட்சிகள் இருக்கின்றன. ஒரு கட்சிக்கு 5 கோயில் கமிட்டி உறுப்பினர்களும், மற்ற இரண்டு கட்சிகளுக்கு ஒவ்வொரு உறுப்பினர் வீதம் இருந்தார்கள்.. அவர்களும் "தேன் எடுக்கிறவன் பொறங் கைய நக்காம இருப்பானா...?" என்ற "தத்துவத்தின்" படி அந்த ஐந்து பேர்களுடன் அவர்களும் சேர்ந்து நக்கிக் கொண்டிருந்தார்கள்...!

கோயில் கமிட்டி செயலாளர் வரவு, செலவு கணக்கை வாசித்தார். கோயில் கட்டுவதற்கு சேகரித்தப் பணம் கட்டிடப் பொருட்களுக்கான செலவு "கொன்ட்ரட்க் பாஸ்" கூலி, கோபுரம் கட்டி சிலைகள் செய்து, சித்திர வேலைப்பாடுகள் செய்த "சிப்பிக்கு" கூலி, போக்குவரத்து, வாகனச் செலவு, "தேத்தண்ணி" செலவு, சாப்பாட்டுச் செலவு என்று வாசித்துக் கொண்டே போனார்.

இரவு நேரம் .. மழைக்காலம் .. அதுவும் குளிர் காலம் ... ஆண் வர்க்கம் அனைவரும், ஐந்தாறு இளைஞர்களைத் தவிர "பாவித்து விட்டு" வந்திருந்தார்கள் ...!

"நாசமா போவ...! இப்பிடி குடிச்சிட்டு வந்தா கணக்கு, வழக்க வெவரிக்க முடியுமா...?" என்று பெண்கள் யாவரும் சலித்துக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் கமிட்டிக்கு மனதுக்குள் மகிழ்ச்சி.. "கொழப்பக்காரன் எல்லோரும் நல்லா போட்டுட்டு கொழம்பிப் போயி இருக்கானுக..." என்றார் உப தலைவர் செரங்கு சின்னையா... செரங்கு சின்னையாவை சொறி சின்னையா என்றாலும் விளங்கும். அந்தத் தோட்டத்தில் பத்து, பதினைந்து "சின்னையாக்கள்" இருக்கிறார்கள்... பட்டப் பெயரைச் சொன்னால்தான் ஆள் அடையாளம் விளங்கும் ...!

"இந்த மாதிரி கோயில் கட்டுறதுக்கு ... பத்து அல்லது பதினைந்து லட்சம்தான் செலவு போயிருக்கும் .. முப்பத்தைந்து லட்சத்துல மீதி இருபது லட்சத்த கோயில் கமிட்டி தின்னுட்டானுங்க..!

ஆமா..! ஆமா..! கோயில் பணத்த தின்னவன்க நல்லா இருக்க மாட்டான்.. மாரி.. கண்ண அவிச்சிப்புடுவா ...!!!

"இது பொய் கணக்கு ....! இது பொய் கணக்கு ..,! "தண்ணி" போடாமல் வந்திருந்த பல இளைஞர்கள் ஆக்ரோஷமாகச் சத்தமிட்டார்கள்...

"கூட்டத்த நிப்பாட்டு...! கூட்டத்த பகல்ல வைய்...! பகல்ல கணக்கு வாசி ..! இப்ப எல்லோரும் குடிச்சிட்டு வந்திருக்கானுக..! என்று சத்தமிட்டார்கள்.

இளைஞர்களின் குரல் எடுபடாமல் போயிற்று. மெஜாரிட்டி சங்க உறுப்பினர்கள் எல்லோரும் வழக்கமாகக் கோயில் கமிட்டிக்கு ஆதரவாக நின்றார்கள்.

"நடந்தது நடந்து போச்சி .. திருடி தின்னவங்க மகமாயி பார்த்துக்குவா. இப்ப கும்பாபிஷேகம் நடத்துறதுக்கு ஒத்துழைப்பு குடுங்க தம்பிமார்களா...!" என்று பெண்கள் எல்லோரும் "அழுவாத குறையா" கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள.

நியாயம் கேட்ட இளைஞர்கள் சோர்ந்து போகவில்லை.. "கும்பாபிஷேகம் நடக்குறத நாங்க பாத்துக்குறோம்..!" என்று கோயிலை விட்டு வெளியேறினார்கள். ஒரு கிண்டல்காரன் கோயில் மெயின் ஸ்விட்ச் பிளக்கை பிடுங்கி விட்டான்...! திடீர் இருட்டு. எல்லோரும் குய்யோ .. முறையோ.. என்று கத்திக் கொண்டு தட்டுத் தடுமாறிக் கோயிலை விட்டு ஓடினார்கள்.

***

அன்றைய குழப்பமான இரவு, அடை மழையில் நனைந்து ஈரத்தோடு விடிந்தது.

அம்மன் கோயிலில் அவமானப்பட்டுப் போன கோயில் கமிட்டி உறுப்பினர்களில், பெரிய கட்சியைச் சேர்ந்த ஐந்து பேரும். தங்களைப் படைத்து, காத்து, அழிக்கும் முத்தொழிலுக்கும் சக்தியாக விளங்கும், சங்கத்தின் பெரிய தலைவரைச் சந்தித்து.. முழு சம்பவத்தையும் நேர்முக வர்ணனையாகச் சொல்லித் தீர்த்தார்கள்.

அதன் பயனாக கோயிலில் குழப்பம் உண்டாக்கிய. அந்த ஆறு இளைஞர்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் தூக்கிக் கொண்டு போய் நுவரெலியா பொலிஸில் "பாரம்" கொடுத்தது.. அன்றைய இரவில் அரசாங்க செலவில் பாணும் பருப்பும் சாப்பிட்ட இளைஞர்கள் மறுநாள் காலையில், நீதி மன்றக் கூண்டில் ஏறி, "பந்தனாகார" வண்டியில் பதுளைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

ஆலமரம் வெட்டிய சர்ச்சையில் தாக்கப்பட்ட கோயில் கமிட்டிச் செயலாளருக்கு மண்டையில் பட்ட பலத்த அடியால், இன்று திடீரென மயக்கம் போட்டு விழுந்து விட்டார். மூளை பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று கண்டி பெரியாஸ்பத்திரிக்கு, கட்சி செல்வாக்கால் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் கமிட்டி செயலாளர் கன்ஞ்சாமி (கந்தசாமி) அவர் கண்களைத் திறக்காமல், வாயும் பேசாமல் அங்கேயுள்ள அத்தனை டாக்டர்மார்களையும் அங்கொடைக்கும், முல்லேரியாவுக்கும் அனுப்ப வேண்டிய நிலைமையை உண்டாக்கிக் கொண்டிருந்தார். இந்த நாடகத்தை கட்சியே எழுதி, நெறிபடுத்தி அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது ..!

***

கும்பாபிஷேக ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.. "பதுளைக்குப் போன பயல்கள் வர்றதுக்கு முன்னே, கும்பாபிஷேகத்த நடத்தி முடிச்சிடனும்..." என்று கமிட்டி மும்முரமாகியது...

சிவகாந்தக் குருக்களுக்கு உச்சிமலை தோட்ட கும்பாபிஷேகத்தோடு, நான்கு கும்பாபிஷேக ஓடர்கள் ஒரே மாதத்தில் கிடைத்துள்ளன. அவர் ஒரு நொடிக்குள் கைலாய மலைக்கே போய் திரும்பி வந்து விட்டார்..!

கோயில் கமிட்டி பட்ஜெட் தயாரித்தவர்கள் "உடுக்கு அடித்து, மண்டு வைத்து, கரகம் பாலித்த நாள் முதல் அன்னதானத்துக்கு, குருக்களுக்கு, நாயனக்காரருக்கு, கரகாட்டக்காரருக்கு, அநுமார் ஆட்டத்துக்கு ஸ்பீக்கர் செட்டுக்கு, தேங்காய், பழம், காலாஞ்சி பூசை சாமான் "லொட்டு லொசக்கு" எல்லாத்துக்கும், கோயில் கமிட்டியினரின் போக்குவரத்து செலவுக்கு. வீடியோவுக்கு .. மெகா சைஸ் மஞ்ச நோட்டிஸ் ஐயாயிரத்துக்கு அச்சிக் கந்தோர் செலவு..." என்று மொத்தச் செலவு 10 லட்சம் காட்டினார்கள்.

உச்சிமலை தோட்டத்து கும்பாபிஷேகம் நான்கு நாள் நடந்து முடிந்தன.. எந்த ஒரு "மாண்புமிகுகளும்" கும்பாபிஷேகத்துக்கு வரவில்லை.. மஞ்சள் மெகா நோட்டிசில் ஒருவர் பெயர் மேலேயும், மற்றவர் பெயர் கீழேயும் அடுத்தவர்களின் பெயர் பக்கவாட்டிலும் அச்சடிக்கப்பட்டதால் வந்த வினைதான் இந்த பகிஷ்கரிப்பு ...!

கும்பாபிஷேக செலவு கடைசி நாளில் கையைக் கடித்தது..

ஐந்தாவது நாளில் நடைபெறவேண்டிய அதி முக்கியமான நிகழ்ச்சியான காலாஞ்சி விநியோகமும், அன்னதானமும் தடைப்பட்டன. கோயில் கமிட்டி உறுப்பினர்களின் கைகளில் செப்புக்காசு கூட உத்தியோக பூர்வமாக மீதியிருக்க வில்லை. பல லட்சங்கள் பதுங்கி விட்டன..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கோயில் கமிட்டி கொயிஞ்சாமி (கோவிந்தசாமி) தலைவர் மைக்கில் பேசினார்.. "அம்ப்.. அம்ப்... அம்பாந்த பக்த கோடி மக்களே..! இன்னைக்கு அன்னதானமும், காலாஞ்சியும் ஒங்களுக்கு குடுக்க முடியாம போயிரிச்சி.. அடுத்த வருஷம் திருவிழாவுக்கு இன்னொரு வரிப்பணம் சேத்து. எந்த கொறையும் மகமாயிக்கு வைக்காம. அன்னதானம் ஆக்கிப் போடுவோம்.. என்டு அம்ப்.. அம்ப்.. அம்பாக கேட்டுக் கொல்லுகிறேன்.." என்றார்

அதற்குள்ளே, புதிதாக வாங்கிய "சிவகடாட்ச" சிவகாந்த குருக்கள் பூசையை ஆரம்பித்தார். அவரது கம்பீர குரல் ஒலிபெருக்கியில் அலறியது..

"நமப் பார்வதி.. பதயே...!" என்று பஞ்சாரத் தீபத்தை உயர்த்திக் காட்டினார்...

கூடியிருந்த பக்தக் கோடிகள் லட்சக் கணக்கில் பணத்தைக் கொடுத்து, அன்னதானம் கூட கிடைக்காமல் "அரஹர மகா தேவா...!" என்று வெறும் கைகளை உயர்த்திக் கூப்பினார்கள்...!

***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடக அனுசரணை

**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**
**ஐ அலைவரிசை**

CHANNEL
Eye

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**அன்னை வானொலி / தென்றல் வானொலி**

தென்றல்

**தினக்குரல் பத்திரிகை**

தினக்குரல்
An Independent Daily Voice in Tamil

**ஊடக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு**

திரு. இராமன் கேதீஸ்வரன்

திரு. அ. இராமன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளங்கனிந்த நன்றிகள்

* சாகித்திய விழாவுக்கு தலைமை வகித்த மாண்புமிகு அமைச்சர் திரு. அருள்சாமி அவர்களுக்கும், பல வழிகளில் உதவி செயல்பட்ட ஏற்பாட்டாளர்களுக்கும், விழாவில் பங்கேற்ற அதிதிகள், விஷேட பிரமுகர்களுக்கும், பலவழிகளில் அனுசரனைகளை வழங்கிய அனுசரனையாளர்களுக்கும், சகல ஆலோசனைகளையும் வழங்கிய அமைச்சின் செயலாளர் ஷிரானி வீரகோன் அவர்களுக்கும்,

* பல வேலைகளின் மத்தியிலும் சாகித்திய விழா வேலைகளை முன்னெடுத்த, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் திரு.எம்.பத்மநாதன், அமைச்சரின் பிரத்தியேக உதவியாளர் திரு.சரவணபவநாதன் அவர்களுக்கும், அமைச்சின் பொதுசனத் தொடர்பாளர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களுக்கும்,

* 2007 ஆம் ஆண்டு ம.மா.தமிழ் சாகித்திய விழா மலரைப் பொறுப்பேற்று இலக்கிய மணம் கமழ வெளிவர உதவிய சாகித்திய விழா மலர் ஆசிரியர் திரு.எஸ்.எஸ்.தேவசிகாமணி அவர்களுக்கும், அவரோடு உறுதுணையாக இருந்து செயற்பட்ட மலர்க்குழு உறுப்பினர்களான எம்.பத்மநாதன், எஸ்.நீதிராஜா, இரா.மகேஸ்வரன், இரா.அ.இராமன் ஆகியோருக்கும்,

* அமைச்சின் அலுவலர்களான திருமதி.எஸ்.யோகமலர், திருமதி. எஸ். கிருஸ்ணவேணி, திரு. Dr. அந்தனி ஜுட், திருமதி. சோமசுந்தரம் ஆகியோருக்கும் அதுபோலவே அமைச்சின் உத்தியோகத்தர்களான நிர்வாக உத்தியோகத்தர் திரு.லலந்த, திரு.N.G.A.கொந்தகொட, திருமதி. சுபத்ரா ரட்ணாயக்க, திரு.எஸ்.தஸநாயக்க ஆகியோருக்கும்,

* எமது மலர்களுக்கு உபசரணைக்குழு, வெளி அலங்காரக்குழு, கலை நிகழ்ச்சிப் பொறுப்பாளர் குழு, நிகழ்ச்சிகள் பொறுப்பாண்மைக்குழு, வரவேற்புக் குழு ஆகியோருக்கும்,

* எமது அழைப்பை ஏற்று ஆசிச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றைத் தந்த பெரியவர்களுக்கும், விசேடமாக ஹட்டன் பிரதேசத்தில் உள்ள வர்த்தகப் பிரமுகர்களுக்கும்,

* விழாவின் வெற்றிக்கு அயராது உழைத்த கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கும்,

* மலருக்கு ஆக்கங்களை வழங்கிய அறிவலர்களுக்கும்,

* நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், ஏனைய தனியார் நிறுவனங்களுக்கும்,

* விழாவில் கௌரவிப்பைப் பெற்ற அனைத்துத் துறை மேலாண்மையாளர்களுக்கும்,

* விழாவுக்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும்,

* மேடை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அரசியல் தொழிற்சங்க பிரமுகர்கள், கல்வித் துறையாளர்கள், இலக்கியவாதிகள் ஆகியோருக்கும்,

* விழாவை வெளியுலகுக்குப் படைத்தளித்த ஊடகத்துறையைச் சார்ந்தவர்களுக்கும்,


* ஒளி, ஒலி அமைப்பாளர்களுக்கும், சகல பணிகளிலும் பங்கேற்ற அனைவருக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சாகித்திய விழா மலரையும், சான்றிதழ்களையும் மிகக் குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய கலஹா, ஒக்ஸ்போர்ட் அச்சகத்தாருக்கும்,
* இறுதிவரை என்னோடு இணைந்து அயராது செயல்பட்ட பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட துணை நூலகர் திரு. ஆர்.மகேஸ்வரன் அவர்களுக்கும் திரு.இரா.அ.இராமன் அவர்களுக்கும் மற்றும் பெயர் குறிப்பிட மறந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகள்.

**நன்றிகள்**

**அன்புடன்,**
**எஸ்.நீதிராஜா ~ சாகித்திய விழா செயலாளர்**
**இணைப்பாளர் ~ இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கைத்தொழில், விளையாட்டு, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கிராம அபிவிருத்தி, மகளிர் விவகார, இந்து கலாசார அலுவல்கள், மற்றும் தமிழ் கல்வி அமைச்சு - மத்திய மாகாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OXFORD PRINTERS-GALAHA.